மொழிக்கென்றே தோன்று மொழிமீட்பர் நங்கள்
மொழிக்கென்றே ஆராய்ந்த மூப்பர் - மொழிக்கென்றே
ஈகியாய் வாழ்ந்த இனமானப் பாவாணர்
ஆகியாய் வாழ்வார் அரண்.

வேர்கண்டார் வேரின் விளக்கமும் தாம்கண்டார்
கூர்கொண்ட வேரின் குலம்கண்டார் - யார்கண்டார்
தொல்லாசன் சொல்லெல்லாம் தோய்பொருள என்றதனைச்
சொல்லரிய மெய்ப்பாய்ச் சொல.

- புலவர் இரா.இளங்குமரன்

‘பெரியார் குடில்’
பி.11. குல்மொகர் குடியிருப்பு,
35, செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயர்நகர், சென்னை - 17.

பாவாணர் தமிழ்க்களஞ்சியம்

25

# பாவாணர்

# தமிழ்க்களஞ்சியம்-25



## இயற்றமிழ் இலக்கணம்

தமிழ்மண் அறக்கட்டளை

# பாவாணர்
## தமிழ்க் களஞ்சியம்

25

# இயற்றமிழ் இலக்கணம்

*ஆசிரியர்*

மொழிஞாயிறு **ஞா. தேவநேயப்பாவாணர்**

**தமிழ்மண் அறக்கட்டளை**

*சென்னை - 600 017*

நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **பாவாணர் தமிழ்க் களஞ்சியம் - 25** |
| ஆசிரியர் | : | மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 1940 |
| மறுபதிப்பு | : | 2009 |
| தாள் | : | 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 16 + 144 = 160 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **150/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**தமிழ்மண் அறக்கட்டளை**
**"பெரியார் குடில்"**
பி.11 குல்மொகர் குடியிருப்பு,
35 செவாலிய சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in
இணையதளம் : www.tamilmann.in

# பதிப்புரை

*தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன்* ***தமிழ்மண் பதிப்பகம்*** *தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர்* ***இரா. இளங்குமரனார்*** *அவர்களும், மருத்துவர்* **கு.பூங்காவனம்** *அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.*

*"சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று* ***மறைமலையடிகளும்,*** *நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று* ***பாவேந்தரும்,*** *தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று* ***பேரறிஞர் அண்ணா*** *அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழிறிஞர்* **இராசமாணிக்கனாரும்,** *தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று* ***பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,*** *குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர் என்று மேனாள் பேரவைத்தலைவர்* ***தமிழ்குடிமகன்*** *அவர்களும், தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர்* **இளவரசு** *அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி" பாவாணர் என்று முதுமுனைவர்* **இளங்குமரனார்** *அவர்களும் குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.*

“பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது” என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.

பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக் கருவூலங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில் **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.

இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் **பெரும்புலவர் நக்கீரன்** அவர்களும், அவர்தம் இளவல் **புலவர் சித்திரவேலன்** அவர்களும் ஆவர். இவர்களை இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கை களாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.

**கோ. இளவழகன்,**
**பதிப்பாளர்.**

# வான்மழை வளச்சுரப்பு

*ஆழத்துள் ஆழமாய் அகழ்ந்து* ***தங்கம்*** *ஏன் எடுக்கப்படுகிறது? ஆழ்கடலுள் சென்று, உயிரைப் பணயம் வைத்து* ***முத்துக்*** *குளிக்கப் படுவது ஏன்?* ***பவழப்*** *பாளங்களை எடுப்பது ஏன்?* ***வயிரம்*** *முதலாம் மணிக்குலங்களை இடையறாமல் தேடித் தேடி எடுப்பது ஏன்?*

*அணிகலப் பொருள்கள் என்பதற்கு மட்டுமா? வீட்டிற்கு மட்டுமன்றி நாட்டுக்கும் ஈட்டுதற்கு அரிய* ***வைப்பு வளமாக*** *இருந்து, நாட்டின் பொருளியல் மேம்பாட்டுக்கு* ***அடிமணை யாகவும்*** *இவை இருப்பதால் தானே!*

*இவற்றினும் மேலாம் வைப்பு வளமும் உண்டோ? உண்டு! உண்டு! அவை* ***சான்றோர் நூல்கள்!***

*காலம் காலமாக அள்ளிக் கொண்டாலும் வற்றா வளமாய்த் திகழும்* ***அறிவுக் கருவூலமாம் நூல்கள்!***

*ஒன்றைக் கற்றால் ஒரு நூறாய் ஓராயிரமாய்ப் பல்கிப் பெருகத் தக்க பெறற்கரிய* ***தாய் நூல்களாம்*** *பேறமைந்த நூல்கள்!* ***சேய்நூல்களை ஈனவல்ல செழு நூல்கள்!***

*நுண் மாண் நுழைபுலத்* ***தாய் நூல்களாய் இருப்பினும்!*** *அவற்றைத் தாங்கிய* ***தாள்கள்,*** *எத்தகைய பேணுதல் உடையவை எனினும் கால வெள்ளத்தில் அழியக் கூடியவை தாமே!*

***கல்லெழுத்தே,*** *கதிர் வெப்பாலும் கடலுப்பாலும் காத்துப் பேணும் கடப்பாடில்லார் கைப்படலாலும் அழிந்து பட்டமை கண்கூடு தானே!*

***ஏட்டு வரைவுகள்,*** *நீரே நெருப்பே நீடித்த காலமே புற்றே போற்றா மடமையே என்பவற்றால் அழிந்து பட்டமைக்கு அளவு தானும் உண்டோ? மக்களுக்கு மாணப் பெரிய பயனாம் நூல்கள், கற்கும் மக்கள் பெருக்கத்திற்கும், பிறந்து பெருகிவரும் மக்கள் பெருக்கத்திற்கும் தக்க வகையில் அவர்களுக்குப் பாட்டன்*

*பாட்டியர் வைத்த* **பழந்தேட்டென்ன** *அந்நூல்கள், மீளமீளத் தட்டில்லாமல் கிடைக்கச் செய்ய வேண்டுவது* **நூற்பதிப்பர்** *தவிராக் கடமையல்லவோ!*

*அக்கடமையை அவர்கள் காலந்தோறும் கடப்பாடாகக் கொண்டு செய்ய, ஆளும் அரசும் வாழும் அறிவரும் அருந்துணையாதல் தானே கட்டாயத் தேவை! இவ்வாறு பதிப்பரும் அறிவரும் ஆள்நரும் தத்தம் மூச்சுக் கடனாக,* **நூற்கொடை புரிதலுக்கு மேற்கொடை இல்லையாம்!**

**மொழிஞாயிறு பாவாணர் நூல்கள்** *ஒன்றா இரண்டா? நமக்கு எட்டாதவை போக எட்டிய நூல்கள் 32. கட்டுரை பொழிவு முதலாம் வகையால் கிட்டிய திரட்டு நூல்கள் 12. இன்னும்* **எட்டாத தொகுப்பும்** *அங்கொன்றும் இங்கொன்றும் வர வாய்ப்புண்டு!*

**கடித வரைவு பா வரைவு** *என மேலும் பெருகவும் வாய்ப்புண்டு!*

*இவற்றை எல்லாம் ஆயிரம் அச்சிட்டு அவ்வளவில் நின்று விட்டால், தேடுவார்க்குத் தேடும் பொழுதில் வாய்க்கும் திருவாகத் திகழக் கூடுமோ?*

*ஆதலால்,* **சேய் நூல்களுக்கு மூலமாம் தாய்நூல்கள், காலம் தோறும் வான்மழை வளச் சுரப்பாக வெளிப்பட வேண்டும் கட்டாயம் உணர்ந்து கடமை புரியும் வீறுடையார் வேண்டும்! மிக வேண்டும்!**

*இத்தகைய விழுமிய வீறுடையர் - இனமானச் செம்மல் - தமிழ்ப் போராளி - திருத்தகு* **கோ. இளவழகனார்,** *தாம் முந்து முழுதுறக் கொணர்ந்த பாவாணர் படைப்புகளை மீளமீளத் தமிழுலாக் கொள்ள வைக்கும் முன் முயற்சியாய், இம்* **மீள்பதிப்பை வழங்குகிறார்!** *தமிழுலகம் பயன் கொள்வதாக! பயன் செய்வதாக!*

*வாழிய நலனே! வாழிய நிலனே!*

**இன்ப அன்புடன்**

**இரா. இளங்குமரன்.**

# சான்றிதழ்

பண்டித ஞா. தேவநேயனார், பி.ஓ.எல். பொதுவாக மொழிநூல் ஆய்வு முறைகளைப் பின்பற்றித் தமிழ்ச்சொல் ஆராய்ச்சிபற்றி எழுதிய நூல்கள் தமிழ்மொழியின் நீண்டகாலத் தேவையினை நிறைவு செய்தன. தம்முடைய இளந்தைக் காலத்திலே தலைமைக் கண்காணியார் தவத்திரு திரஞ்சு (Trench) எழுதிய 'சொல்லாராய்ச்சி', பேராசிரியர் மாக்கசு முல்லர் எழுதிய 'மொழியறிவியல்', பேராசிரியர் சாய்சு எழுதிய 'ஒப்பியல் மொழிநூல்' முதலிய ஆங்கிய நூல்களை யாமே பெருவிருப்புடன் படித்துக்கொண்டிருக்கும்போது அந்த முறையில் தமிழ்ச் சொற்களை ஆராய வேண்டுமென்று விரும்பினேம். தமிழ்ப் பேரறிஞர்கட்குப் புலப்படாமல் மறைந்து கிடந்த விரிவாகவும் வியப்பாகவுமுள்ள தமிழ்மொழியறிவுப் பரப்பு, பண்டாரகர் கால்டுவெல் எழுதிய 'திராவிட மொழி களின் ஒப்பியல் ஆய்வு' நூலால் புலப்படலாயிற்று. எனினும் பண்டாரகர் கால்டுவெல், அறியப்படாத வட்டாரத்தில் செய்த தொரு முயற்சியாதலால் தமிழ்ச்சொற்களை யெல்லாம் விடாமல் நிறைவாக எடுத்தாராய்ந்துள்ளனர் என்று எதிர்பார்ப்பதற் கில்லை. இதுவே மொழியியலை ஆராய வேண்டு மென்று எம்மைத் தூண்டியது. எனவே 'ஞானசாகரம்' (அறிவுக்கடல்) என்னும் எம்முடைய இதழின் முதல் தொகுதியில் அத் துறையில் ஒன்றிரண்டு கட்டுரைகளை எழுதி வெளியிட்டேம். ஆனால் அப்போது சமயம், மெய்ப்பொருளியல், இலக்கிய வரலாறு ஆகிய துறைகளில் எம்முடைய மொழியாராய்ச்சித் துறையில் தொடர்ந்து ஈடுபடக் கூடவில்லை. ஆயினும் தகுதியுடைய அறிஞர் யாராவது இத் துறையில் ஆராய்வதற்கு முன்வரக்கூடுமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேம். அப்போது யாழ்ப்பாணம் திருத்தந்தை ஞானப்பிரகாசர்தாம் எகிபதிய மொழியியல் ஆராய்ச்சி நூலை எமக்கு அனுப்பிவைத்தார். அது ஓரளவு எமக்கு மனநிறைவு அளித்தது. எனினும் மொழியியல் ஆராய்ச்சித் துறை மிகவும் விரிவும் ஆழமு முடையதாதலால் பழந்தமிழ்

இலக்கியங்களைக் கற்று அவற்றைக் கொண்டு நன்கு புரிந்து கொள்ளும் வகையில் மேலும் மொழியியல் ஆராய்ச்சி நூல்கள் வெளிவருதல் வேண்டுமென்று கருதினேம். அந்த நேரத்தில் திரு. தேவநேயனார் யாம் எதிர்பார்த்ததை ஏறத்தாழ முற்றும் நிறைவேற்றியது கண்டு பெருமகிழ்வுற்றேம். அத் துறையில் அவர் மிகவும் உழைப்பெடுத்து ஆராய்ந்து எழுதியிருப்பவற்றைத் தமிழ் அறிஞர்கள் நன்றாக நம்பலாம்.

சொல்லாராய்ச்சித் துறையில் திரு. தேவநேயனார் ஒப்பற்ற தனித் திறமையுடையவர் என்றும், அவருக்கு ஒப்பாக இருப்பவர் அருமையாகும் என்றும் யாம் உண்மையாகவே கருதுகின்றேம்.

மேலும் திரு. தேவநேயனார் பதியச் சொல்லும் ஆசிரியரும் இன்புறுத்தும் சொற்பொழிவாளருமாவர். பல தமிழ்க் கழக ஆண்டு விழாக்களில் எமது தலைமையின்கீழ் அவர் சொற் பொழிவுகள் ஆற்றியுள்ளார். அவை கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் அமைந்து அவையோரைக் கிளர்ச்சியுறச் செய்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின. அவர் வருந்தியுழைத்து ஆராய்ச்சி செய்துவரும் அறிஞர் ஆதலால் அவரைப் பணியில் அமர்த்தும் எந்த நிலையத்துக்கும் அவரால் பேரும் புகழும் கிடைக்கப் பெறும் என்று யாம் முழு நம்பிக்கையோடு கூறுகின்றேம்.*

- ***மறைமலையடிகள்***

* மறைமலையடிகளார் ஆங்கிலத்தில் எழுதிய சான்றிதழின் தமிழாக்கம்.

# முகவுரை

ஒரு மொழியின் பெருமை அம் மொழியிலுள்ள இலக்கிய இலக்கண நூல்களால் விளங்கும். நம் தமிழ்மொழியோ இலக்கண வரம்புச் சிறப் புடையது. பண்டைத் தமிழிக்கண நூல்களாகிய அகத்தியம், தொல்காப்பியம் என்னும் இவற்றிற்குப் பின், வடசொற்கள் மிகுதியும் தமிழ்மொழியில் விரவிய காலத்தெழுந்த நன்னூல் என்னும் இலக்கணமே பெரும்பாலும் பயிலப் பெறு வதாயிற்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலக் கல்விச் சாலைகளிற் பயின்ற மாணவர் ஒருவாறு நன்னூலை நன்கு பயின்றவரே ஆவர். சென்ற கால் நூற்றாண்டாகத்தான் நன்னூற் பயிற்சி ஆங்கிலப் பள்ளிகளில் உரிய முறை யிற் காணப்பெறாத தாயிற்று. இதுபோது பள்ளியிறுதி வகுப்புத் தேர்வுப் பொறுப்புக் கூட்டத்தார் தாய்மொழிப் பயிற்சி மேம்பாட்டினைக் கருதி, நன் னூலில் மாணவர்க்கு இன்றியமையாது வேண்டப்படும் பகுதிகளை உரை நடை முறையில் அவ்வப் பகுதிகளை விளக்குதற்குரிய சூத்திரங்களுடன் கற் பிக்கப் பாடத்திட்டம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளனர்.

இத் திட்டத்தை ஒட்டி வெளிவந்த நூல்களுள் இதுவும் ஒன்று. இதில் வசதியும் எளிதுணர்வும்பற்றிப் புணரியல்களிலெல்லாம் இயற்கைப் புணர்ச்சி முன்னும், விகாரப் புணர்ச்சி பின்னுங் கூறப்படும்.

இந் நூல் விளங்க வைத்தல் என்னும் ஒரே நோக்கம்பற்றி எழுதப்பட்ட தென்பது இதனைப் பயில்வார் நன்குணர்வர்.

- ஞா. தேவநேயப் பாவாணர்

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | ... | iii |
| வான்மழை வளச்சுரப்பு | ... | v |
| சான்றிதழ் | ... | vii |
| முகவுரை | ... | ix |
| குறுக்க விளக்கம் | ... | xii |

**நூலடக்கம்**

4 ஆம் பாரம் (9 ஆம் வகுப்பு)

| | | |
|---|---|---|
| **1. எழுத்தியல்** | ... | 1 |
| 1. எழுத்து | ... | 1 |
| முதலெழுத்து, சார்பெழுத்து | ... | 1 |
| 2. உயிரெழுத்து | ... | 2 |
| குற்றெழுத்து, நெட்டெழுத்து, வினாவெழுத்து | ... | 2 |
| 3. மெய்யெழுத்து | ... | 3 |
| வல்லினம், மெல்லினம், இடையினம் | ... | 3 |
| 4. உயிர்மெய் யெழுத்து | ... | 4 |
| 5. ஆய்த வெழுத்து | ... | 5 |
| 6. குற்றியலுகரம் | ... | 6 |
| 7. குற்றியலிகரம் | ... | 7 |
| 8. போலி | ... | 8 |
| **2. சொல்லியல்** | ... | 9 |
| 1. **சொல் - பகாப்பதம், பகுபதம்** | ... | 10 |
| பெயர்ச்சொல் | ... | 10 |
| வினைச்சொல் | ... | 10 |
| இடைச்சொல் | ... | 10 |
| உரிச்சொல் | ... | 10 |
| இயற்சொல் | ... | 11 |
| திரிசொல், திசைச்சொல் | ... | 11 |
| வடசொல் | ... | 13 |
| 2. பெயர்ச்சொல் | ... | 13 |
| பெயர்வகை | ... | 14 |
| இடுகுறிப்பெயர், காரணப்பெயர் | ... | 14 |
| 3. பொருளாதி அறுபொருட் பெயர் | ... | 14 |

| | | | |
|---|---|---|---|
| 4. | வினையாலணையும் பெயர் | ... | 17 |
| | கிளைப்பெயர் | ... | 17 |
| | சாதிப்பெயர் | ... | 17 |
| | அளவுப்பெயர் | ... | 18 |
| 5. | மூவிடப்பெயர் | ... | 18 |
| | (தன்மைப்பெயர், முன்னிலைப்பெயர், படர்க்கைப்பெயர்) | | |
| 6. | பொதுப்பெயர் - தான், தாம், எல்லாம் | ... | 19 |
| 7. | பெயரிலக்கணம் | ... | 19 |
| | (1) திணை | ... | 19 |
| | (2) பால் | ... | 20 |
| | (3) எண் | ... | 21 |
| | (4) இடம் | ... | 22 |
| | (5) வேற்றுமை | ... | 22 |
| 8. | வேற்றுமையுருபேற்கும்போது வேறுபடும் பெயர்கள் | ... | 28 |
| 9. | வினைச்சொல் | ... | 29 |
| | முற்றுவினை, எச்சவினை | ... | 29 |
| 10. | வினைப்பகுதி | ... | 30 |
| 11. | வினைமுற்று விகுதிகள் | ... | 31 |
| 12. | காலங்காட்டும் இடைநிலைகள் | ... | 33 |
| 13. | தன்வினை, பிறவினை | ... | 34 |
| 14. | எச்சவினை - பெயரெச்சமும் வினையெச்சமும் | ... | 36 |
| 15. | எதிர்மறைப் பெயரெச்சம், எதிர்மறை வினையெச்சம் | ... | 39 |
| 16. | இடைச்சொல் | ... | 40 |
| 17. | உரிச்சொல் | ... | 41 |
| **3.** | **புணரியல்** | ... | 41 |
| | நிலைமொழி, வருமொழி | ... | |
| | இயல்பு புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி | ... | 42 |
| 1. | இயல்பு புணர்ச்சி | ... | 43 |
| | i. வினா முன்னும் விளிப்பெயர் முன்னும் வல்லினம் | ... | 43 |
| | ii. இடைச்சொல் ஓ, ஓ முன் வல்லினம் | ... | 43 |
| | iii. மெய்யீற்றின்முன் உயிர் | ... | 43 |
| 2. | விகாரப்புணர்ச்சி | ... | 44 |
| | (1) மிகுதல் | ... | 44 |
| | i. உயிர் முன் உயிர் | ... | 44 |
| | ii. உயிர் முன் வல்லினம் | ... | 44 |
| | iii. 'பூ' முன் வல்லினம் | ... | 45 |

| | | | |
|---|---|---|---|
| | iv. தனிக்குறிலடுத்த மெய்யின்முன் உயிர் | ... | 45 |
| | v. னகரச்சாரியை | ... | 46 |
| (2) | கெடுதலும் திரிதலும் | ... | 46 |
| | குற்றியலுகரத்தின் முன்னும் சில முற்றியலுகரத்தின் முன்னும் | | |
| | உயிரும் யகரமும் புணர்தல் | ... | 46 |
| (3) | கெடுதலும் மிகுதலும் திரிதலும் | ... | 47 |
| | மகரவீறு | ... | 47 |
| | **5 ஆம் பாரம் (10 ஆம் வகுப்பு)** | | |
| 1. | எழுத்தியல் | ... | 48 |
| | 1. சுட்டெழுத்து - அகச்சுட்டு, புறச்சுட்டு | ... | 48 |
| | 2. வினாவெழுத்து - அகவினா, புறவினா | ... | 49 |
| | 3. இனவெழுத்து | ... | 50 |
| | 4. மாத்திரை | ... | 51 |
| | 5. மொழிமுதலெழுத்துக்கள் | ... | 52 |
| | 6. போலிவகை | ... | 54 |
| 2. | சொல்லியல் | ... | 55 |
| | வடசொல் - தற்சமம், தற்பவம் | ... | 56 |
| 1. | பெயர்ச்சொல் | ... | 56 |
| | காரண இடுகுறிப்பெயர் | ... | 56 |
| | பொதுப்பெயர், சிறப்புப் பெயர் | ... | 57 |
| | ஆகுபெயர் - முதல் ஆறு பெயர்கள் | ... | 57 |
| 2. | வேற்றுமை - முக்கியமான பொருள்கள் | ... | 59 |
| 3. | விளியேற்காத பெயர்கள் | ... | 60 |
| 4. | பெயர் உருபேற்கும்போது வரும் சாரியைகள் | ... | 61 |
| 5 | வினைச்சொல் | ... | 62 |
| | தெரிநிலைவினை, குறிப்பு வினை | ... | 62 |
| | தெரிநிலை - முற்று, எச்சம் | ... | 64 |
| | குறிப்பு - முற்று, எச்சம் | ... | 64 |
| 6. | பகுபதவுறுப்புகள் | ... | 65 |
| 7. | ஏவல் வினை | ... | 68 |
| 8. | வியங்கோள் வினை | ... | 68 |
| 9. | எதிர்மறை வியங்கோள்வினை | ... | 70 |
| 10. | தன்மை முதலிய பல இடப்பெயர்கள் விரவி | | |
| | ஒரு வினை கொண்டு முடிதல் | ... | 70 |
| 11. | இடைச்சொல் | ... | 71 |
| | ஏகார இடைச்சொல் | ... | 71 |
| | ஓகார இடைச்சொல் | ... | 72 |
| | உம்மை இடைச்சொல் | ... | 73 |

| | | | |
|---|---|---|---|
| 12. | உரிச்சொல் | ... | 74 |
| | பெயருரிச்சொல், வினையுரிச்சொல் | ... | 74 |
| 13. | பொதுவியல் | ... | 74 |
| | குறிப்பு, வெளிப்படை | ... | 76 |
| 14. | வழக்கியல் - இயல்பு வழக்கு, தகுதி வழக்கு | ... | 77 |
| 3. | புணரியல் | ... | 78 |
| | 1. வேற்றுமைப் புணர்ச்சி - தொகை, விரி | ... | 78 |
| | 2. அல்வழிப் புணர்ச்சி - தொகைநிலை, | ... | 79 |
| | தொகா நிலை | ... | 80 |
| 3. | இயல்புபுணர்ச்சி: | ... | 82 |
| | i. ஆகாரத்தின் முன் வல்லினம் | ... | 82 |
| | ii. குற்றியலுகரத்தின் முன் வல்லினம் | ... | 82 |
| | iii. பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களின் முன் வல்லினம் | ... | 83 |
| 4. | விகாரப் புணர்ச்சி | ... | 85 |
| | 1. மிகுதல் | ... | 85 |
| | i. எகர வினா முன்னும் முச்சுட்டின் முன்னும் நாற்கணம் | ... | 85 |
| | ii. சில உயிரீற்று மரப்பெயர் முன் வல்லினம் | ... | 85 |
| 2. | கெடுதல் | ... | 86 |
| | அத்துச்சாரியை முதல் கெடுதல் | ... | 86 |
| 5. | இயல்புபுணர்ச்சியும் விகாரப்புணர்ச்சியும் | ... | 87 |
| 1. | திரிதலும் இயல்பும் | ... | 87 |
| | i. ணகர னகர ஈறு | ... | 87 |
| | ii. லகர ளகர ஈறு | ... | 87 |
| | iii. தன், என், நின் இவற்றின் முன் வல்லினம் | ... | 88 |
| 2. | மிகுதலும் இயல்பும் யரழ ஈற்றின் முன் வல்லினம் | ... | 89 |
| 3. | மிகுதலும் கெடுதலும் இயல்பும் னகர ஈறு - 'தேன்' | ... | 89 |
| 4. | யாப்பியல் | ... | 90 |
| | உறுப்பிலக்கணம் | ... | 91 |
| | அசை | ... | 91 |
| | சீர் | ... | 92 |
| | அடி | ... | 94 |
| 5. | அணியியல் | ... | 95 |
| | தன்மையணி | ... | 96 |
| | உவமையணி | ... | 96 |
| | உருவகவணி | ... | 97 |
| | தற்குறிப்பேற்றவணி | ... | 98 |

6 ஆம் பாரம் (11 ஆம் வகுப்பு)


| | | | |
|---|---|---|---|
| 1. | எழுத்தியல் | ... | 99 |
| | 1. எழுத்தின் பிறப்பு - பொது | ... | 99 |
| | 2. உயிரள பெடை | ... | 100 |
| | 3. மொழியீற் றெழுத்துகள் | ... | 101 |
| | 2. சொல்லியல் | ... | 102 |
| 1. | மொழிவகை - தனிமொழி, தொடர் | ... | 102 |
| | மொழி, பொதுமொழி | ... | 103 |
| உ. | பெயர்ச்சொல் | ... | 103 |
| | ஆகுபெயர்கள் - எல்லாம் | ... | 103 |
| | வேற்றுமைப் பொருள்கள் | ... | 107 |
| ௩. | வினைச்சொல் | ... | 113 |
| | பொதுவினைகள் | ... | 113 |
| | இருவினைப் பொதுவினைகள் | ... | 113 |
| | பலசொற் பொதுவினை | ... | 114 |
| | இருதிணைப் பொதுவினை | ... | 114 |
| | வினைமுற்று, வினையெச்சம் | ... | 116 |
| | ஏவலுக்கும் பகுதிக்கும் வேறுபாடு | ... | 116 |
| | முற்றெச்சம் | ... | 117 |
| ச. | இடைச்சொல் | ... | 118 |
| | மற்று, கொல் | ... | 118 |
| | மன், தான் | ... | 118 |
| ரு. | உரிச்சொல் | ... | 119 |
| | ஒரு குணம் குறித்த பல உரிச்சொல் | ... | 119 |
| | பல குணம் குறித்த ஓர் உரிச்சொல் | ... | 119 |
| | பொதுவியல் | ... | 120 |
| க. | வழாநிலை, வழு, வழுவமைதி | ... | 120 |
| | வழுவமைதி - திணை வழுவமைதி | ... | 121 |
| | திணைபால் வழுவமைதி | ... | 121 |
| | பால்இட வழுவமைதி | ... | 123 |
| | காலவழு வமைதி | ... | 123 |
| உ. | மரபு | ... | 124 |
| | ஒருபொருட் பன்மொழி | ... | 125 |
| | இரட்டைக் கிளவி | ... | 125 |
| ச,. | புணரியல் | ... | 126 |
| | இயல்பு புணர்ச்சி | ... | 126 |
| | சில இகர வீற்றின் முன் வல்லினம் | ... | 126 |
| | சில முற்றியலுகரத்தின் முன் வல்லினம் | ... | 127 |
| | விகாரப் புணர்ச்சி | ... | 128 |

| | | | |
|---|---|---|---|
| க. | மிகுதல்... | 128 | |
| | சில எண்ணுப் பெயர்கள் இரட்டித்தல் | ... | 128 |
| உ. | கெடுதலும் மிகுதலும் | ... | 129 |
| | ஐகாரத்தின் முன் மெய் | ... | 129 |
| ங. | திரிதல் | ... | 129 |
| 1. | மகரத்தின் முன் ஞ, ந | ... | 129 |
| | 1. தனிக்குறிலணைந்த ல, ள முன் த | ... | 130 |
| ச. | மிகுதலும் திரிதலும் | ... | 130 |
| | குற்றியலுகரத்தின் முன் நாற்கணம் | ... | 130 |
| | 1. ஒற்று இரட்டித்தல் | ... | 130 |
| | 2. மென்றொடர் வன்றொடராதல் | ... | 131 |
| | இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்... 131 | | |
| | க. இயல்பும் புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும் | ... | 131 |
| | க. இயல்பும் மிகலும் திரிதலும் | ... | 131 |
| | எல்லாவீற்றின் முன்னும் மெல்லினமும் இடையினமும் இயல்பும் மிகலும் | ... | 133 |
| | i. முன்னிலை வினை முன்னும் ஏவல்வினை | ... | 133 |
| | முன்னும் வல்லினம் | ... | 133 |
| | ii. இ, ஐ இவற்றின் முன் வல்லினம் | ... | 134 |
| ங. | திரிதலும் இயல்பும் | ... | 134 |
| | வகரவீற்றுச் சுட்டுப்பெயர் முன் மூவினம் | ... | 134 |
| ச. | திரிதலும் இயல்பும் மிகுதலும், கெடுதலும் | ... | 135 |
| | இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி | ... | 135 |
| ரு. | யாப்பியல் | ... | 136 |
| | உறுப்பிலக்கணம் | ... | 136 |
| | தொடை, மோனை, எதுகை, தளை | ... | 137 |
| | செய்யுளிலக்கணம் | ... | 139 |
| | பா - வெண்பா | ... | 139 |
| | பாவினம் - கட்டளைக் கலித்துறை | ... | 141 |
| சா. | அணியியல் | ... | 142 |
| | வேற்றுமையணி | ... | 142 |
| | வேற்றுமைப்பொருள் வைப்பணி | ... | 142 |
| | ஒழித்துக்காட்டணி | ... | 142 |
| | வஞ்சப் புகழ்ச்சியணி | ... | 143 |
| | காட்சியணி | ... | 144 |
| | ஒட்டணி | ... | 144 |
| | உயர்வு நவிற்சியணி | ... | 144 |

# இயற்றமிழ் இலக்கணம்

# இயற்றமிழ் இலக்கணம்

## 4 ஆம் பாரம் (9 ஆம் வகுப்பு)

## 1. எழுத்தியல்

### 1. எழுத்து

1. மக்கள் தம் கருத்தைப் பிறர்க்கு அறிவித்தற்குக் கருவியாகும் ஒலிக் கூட்டம் மொழி அல்லது பாஷை எனப்படும்.

ஒரு மொழி பல வாக்கியங்களாகவும், ஒரு வாக்கியம் பல சொற்களாக வும், ஒரு சொல் பல எழுத்துகளாகவும் பகுக்கப்படும். ஆகவே எழுத்தே ஒரு மொழிக்கு முதலுறுப்பாகும்.

2. எழுத்தாவது ஒரு சொல்லுக்குக் கருவியாகும் ஒலி. கருவியெனினும் காரணமெனினும் ஒன்றே. கருவி, முதற்கருவி துணைக்கருவி என இரு வகைப்படும். குடத்திற்கு மண் முதற்கருவி; தண்ட சக்கரம் துணைக் கருவி. முதற்கருவி பின்பு காரியமா- மாறுவது; துணைக்கருவி முதற்கருவி காரியப்பட உதவுவது. காரியமாவது கருவிகளாற் செ-யப்படும் பொருள். இங்குக் கூறிய உதாரணத்திற் காரியம் குடம். அது மண்ணாலாயது. அதுபோல எழுத்து ஒலியாலாயது. எழுத்து ஒலியென்பதை, எந்த எழுத்தையும் ஒலித் துக் எண்க.

ஒலி வடிவாயுள்ள எழுத்து வரிவடிவா- எழுதப்படுதலின் எழுத் தெனப் பட்டது. வரி - கோடு. ஒலி செவிப்புலனாயது; வரி கட்புலனாயது. ஆகவே எழுத்திற்கு இருவகை வடிவுகளுண்டாம். அவற்றுள் ஒலியே எழுத்து. அதை அறிவிக்கும் குறியே வரி. ஆயினும் இவ் விரண்டிற்குமுள்ள இயைபு பற்றி இரண்டும் எழுத்தெனப்படும். இதை எழுது, எழுத்துக் கூட்டு என் னும் வினைகளாலுணர்க.

3. தமிழ் எழுத்துகள் முதலெழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும்.

4. முதலெழுத்து:- முதலாவதுண்டான எழுத்துக்கள் முதலெழுத்துகள், உயிரெழுத்துப் பன்னிரண்டும், மெ-யெழுத்துப் பதினெட்டும் முதலெழுத்து களாம்.

முதல் முதன்மை அல்லது காரணம்; வாணிக முதல் போல. உயிரும் மெ-யும் முதலில் உண்டானமையும், பிற எழுத்திற்குக் காரணமானவையும் அறிக.

**1. உயிரும் உடம்பும் ஆம் முப்பதும் முதலே. (நன்னூல், 59)**

5. சார்பெழுத்து: முதலெழுத்துச் சார்ந்து வரும் எழுத்துகள் சார் பெழுத்துகள். அவை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆ-தம் என *மூன்றாம்.

இவற்றுள், முன்னிரண்டிற்கும் வரிவடிவில்லை. ஆ-தத்திற்கே வரிவடி வுண்டு.

## 2. உயிரெழுத்து

6. உயிரெழுத்துகள்: அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ எனப் பன்னிரண்டு.

இவை உயிர் போன்றமையின் உயிரெனப்பட்டன. உயிரானது தானே அசையும்; ஓர் உடம்பையும் அசைவிக்கும். அதுபோல உயிரெழுத்துத் தானே ஒலிக்கும்; ஒரு மெ-யெழுத்தையும் ஒலிப்பிக்கும்.

7. உயிரெழுத்துகள் குற்றெழுத்து, நெட்டெழுத்து என இருவகைப்படும்.

8. குற்றெழுத்து: அ, இ, உ, எ, ஒ, என ஐந்து.

இவை குறுகி யொலித்தலின் குற்றெழுத் தெனப்படும். இவை குறி லென்றும் கூறப்படும்.

9. நெட்டெழுத்து: ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என ஏழு.

இவை நீண்டொலித்தலின் நெட்டெழுத் தெனப்பட்டன.

இவை நெடிலென்றும் கூறப்படும்.

குறில், நெடிலை நோக்கக் குறுகியும், நெடில் குறிலை நோக்க நீண்டு மிருத்தல் காண்க.

* நன்னூலார் பத்து எனப் பெருக்கிக் கூறுவர்.

10. வினாவெழுத்து: ஆ, எ, ஏ, ஓ என்னும் நான்கு உயிரெழுத்து களும், யா என்னும் உயிர் மெ-யும் வினாப் பொருளில் வரும்போது வினா வெழுத்துகளாம். வினா - கேள்வி.

இவற்றுள், எ, யா சொல்லுக்கு முதலிலும், ஆ, ஓ சொல்லுக் கீற்றி லும், ஏ அவ் வீரிடத்தும் வரும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | எ - எவன்? | எப்படி? | } முதல் |
| | யா - யாவன்? | யாங்ஙனம் | |
| | ஆ - வந்தானா? | | } ஈறு |
| | ஓ - இராமனோ? | | |
| | ஏ - ஏது? | | } முதலும் ஈறும் |
| | இராமனே? (= இராமனோ?) | | |

ஏகாரம் வினாப்பொருளில் வருவது உலக வழக்கன்று, செ-யுள் வழக்கு. யா உயிர்மெ-யாயினும் வினாவெழுத்தாதலின் உடன் கூறப்பட்டது.

**2. எ, யா முதலும் ஆ, ஓ ஈற்றும்**
**ஏ இரு வழியும் வினாவா கும்மே. (நன். 67)**

## 3. மெ–யெழுத்து

11. மெ-யெழுத்துகள்: க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், -, ர், ல், வ், ழ், ள், ற், ன் எனப் பதினெட்டு.

இவை மெ- போன்றமையின் மெ- எனப்பட்டன. மெ- உடம்பு. ஓர் உடம்பு எங்ஙனம் ஓர் உயிரின் உதவியின்றித் தனித்து இயங்காதோ, அங் ஙனமே ஒரு மெ-யெழுத்தும் ஓர் உயிரெழுத்தின் உதவியின்றித் தனித்து உச்சரிக்கப்படாது. ஆயினும், கல்வியின் பொருட்டு உலக வழக்கில் இக், இங், இச், இஞ் என இகரம் முன்னிட்டும், இலக்கண வழக்கில் க, ங, ச, ஞ என அகரம் பின்னிட்டும், அதனோடு கரச்சாரியை கூட்டிக் ககரம், ஙகரம், சகரம், ஞகரம் என்றும், அதன் மேலும் மெ-ப்பெயர் கூட்டிக் ககரமெ-, ஙகரமெ-, சகரமெ-, ஞகரமெ- என்றும் மெ-யெழுத்துகள் உச்சரிக்கப் படும். ஒற்று, உடல், உடம்பு, புள்ளி என்பன மெ-யெழுத்தின் மறுபெயர்கள்.

12. மெ-யெழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படும். வல்லினம் வலிய ஓசையுடைய எழுத்துகளின் கூட்டம். மெல்லினம் மெல்லிய ஓசையுடைய எழுத்துகளின் கூட்டம். இடையினம்

அவ்விரண்டிற்கும் இடைத்தரமான ஓசையுடைய எழுத்துக்களின் கூட்டம். இனம் - கூட்டம்.

13. க், ச், ட், த், ப், ற் என்ற ஆறும் வல்லினம்.
இவை வலி வன்மை, வன்கணம் எனவும் பெயர் பெறும்.
கணம் - கூட்டம்
ந.சூ. - வல்லினம் கசடத பற என ஆறே.

14. ங், ஞ், ண், ந், ம், ன் என்ற ஆறும், மெல்லினம். இவை மெலி, மென்மை, மென்கணம் எனவும் பெயர் பெறும்.

ந.சூ. - மெல்லினம் ஙஞணந மன என ஆறே.

15. -, ர், ல், வ், ழ், ள் என்ற ஆறும் இடையினம்.

இவை, இடை, இடைமை, இடைக்கணம் எனவும் பெயர் பெறும்.
ந.சூ:- இடையினம் யரலவ ழள என ஆறே.

வல்லினம் வலிய உறுப்பாகிய மார்பிலும், மெல்லினம் மெல்லிய உறுப்பாகிய மூக்கிலும் இடையினம் இவ்விரண்டிற்கு மிடையிலுள்ள உறுப்பாகிய கழுத்திலும் பிறக்கும். ஆகவே இடையினம் இடைத்தரமான ஓசையானன்றி, இடைத்தரமான பிறப்பிடத்தினாலும் அறியப்படும். வல்லினம், முதலிய மூவினங்களையும் உச்சரித்து அவற்றின் வன்மை, மென்மை, இடைமைகளைச் செவி கருவியாக ஒப்பு நோக்கி யுணர்க.

வன்கணம் மென்கணம் இடைக்கண மென்பன உயிர்க்கணம் என்பதோடு சேர்ந்து நாற்கண் மெனப்படும். உயிர்க்கணம் உயிரெழுத்தின் கூட்டம்.

## 4. உயிர்மெ– எழுத்து

16. உயிரும் மெ-யுங் கூடிப் பிறக்கும் எழுத்து உயிர்மெ-யெழுத்து. அதில் மெ- முன்னும் உயிர் பின்னும் வரும்.

உ- ம். க் + அ = க, ச் + ஆ = சா; ட் + இ = டி.

உயிர்மெ-யெழுத்து உயிர்மெ- போன்றமையின் உயிர்மெ- யெனப் பட்டது. உயிர்மெ- - பிராணி. பிராணி - பிராணனையுடைய உடம்பு. உயிர்மெ- - உயிரையுடைய மெ-. பிரணி, வடசொல், உயிர்மெ-, தென்சொல் பிராணி யென்னும் வடசொல் வழங்கவே, உயிர்மெ- என்னும் தென்சொல் மறைந்தது.

ஒரு பிராணியில் உயிர், உடம்பு என இரண்டிருப்பினும் அவை யிரண்டும் ஒன்றாகவே இயைந்து தோன்றும். அதுபோல ஓர் உயிர் மெ-யெழுத்தில்

உயிர், மெ- என ஈரெழுத்திருப்பினும் அவையிரண்டும் ஒன்றாகவே இயைந் தொலிக்கும். இவ் வொருமை நயம்பற்றியே நம் முன்னோர் உயிர்மெ-க்குத் தனிவரி யமைந்தனர். ஆயினும் எழுத்துக் தொகைபற்றி உயிர் மெ- இரட்டை யெழுத்தேயன்றித் தனியெழுத்தாகாது. இதை ஆங்கில வரி வடிவால் தெளிவாயுணர்க.

ஒரு பிராணிகளில் உடம்பே முற்பட்டுத் தோன்றுவதுபோல, ஓர் உயிர்மெ- யெழுத்திலும் மெ-யெழுத்தே முற்பட்டுத்தோன்றும். இதை ஒலி வடிவாலும் உயிர்மெ-யைப் பிரித்தெழுதும் முறையாலும் கண்டு கொள்க.

உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தும், உயிரீறு மெ-ம் முதல் என்னும் புணர்ச்சி முறையுள்ளும் உயிர்மெ- ஈரெழுத்தா யெண்ணப்படுதல் ஓர்க.

பதினெட்டு மெ-யோடும் பன்னீருயிரும் தனித்தனி கூட மொத்தம் உயிர்மெ-யெழுத்து (18 + 12 = 216) இருநூற்றுப் பதினாறாகும்.

## 5. ஆ–தவெழுத்து

18. ஆ-தம்: மூன்று புள்ளி (ஃ) வடிவாக எழுதப்படும் எழுத்து. அது வடமொழி விசர்க்கம்போன்ற மூச்சொலி (Semi-aspirate) அல்லது மெல்லிய ககரம். (ககரத்திற்கும் ஹகரத்திற்கும் இடைத்தர ஒலி எனினும் ஒக்கும்.)

அது குறிலுக்குப் பின்னும் வல்லின உயிர்மெ-க்கு முன்னும் வரும்.

உ-ம் எஃகு, பஃறி (ஓடம்), அஃது.
அஃறிணை, பஃறொடை.

ஆ-தத்திற்கு முப்புள்ளி, தனிநிலை என்றும் பெயர். ஆ-தம் வலிய ஓசையுள்ள க, ச, த, ப என்னும் எழுத்துகட்குமுன் வரும்போது சற்றுக் ககரம் போல் வலிக்கும்.

உ-ம். எஃகு, பஃது,

ஆ-தம் சூலாயுதம் போல்வதென்றும், கேடகம் போல்வதென்றும் சமை யற் கருவியாகிய அடுப்புப் போல்வதென்றும், அதன் பெயர்க் காரணம் பல வாறாகக் கூறுவர்.

**6. குறியதன் முன்னர் ஆ–தப் புள்ளி**
**உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே. (நன். சூ. 90)**

சூத்திரத்தில் முன் என்றது இடமுன்.

## 6. குற்றியலுகரம்

19. குறுகி யொலிக்கும் உகரம் குற்றியலுகரம். அது _ y ` என்னும் வடமொழி யெழுத்துகளில் உள்ள உகரம்போல இகரத்திற்கும் உகரத் திற்கும் நடுத்தரமாயொலிக்கும்.

20. ஒரு சொல்லின் கடைசியில் வல்லின மெ-யின்மேல் ஏறிவரும் உகரம் குற்றியலுகரம். குற்றியலுகரம் வரும்சொல் ஈரெழுத்திற்குக் குறை யாது; ஈரெழுத்தாயின் முதலெழுத்து நெடிலாயிருக்கும்; மூவெழுத்தும் அதற்கு மேலுமாயின் முதலில் எந்த எழுத்து இருப்பினும் சரியே.

21. குற்றியலுகரச்சொல் ஈற்றயல் (கடைசிக்கு முந்தின) எழுத்துப் பற்றி ஆறு தொடராக வகுக்கப்படும்.

எழுத்துகள் தொடர்ந்து நிற்றலின், சொல் தொடர் எனப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | நெடிற்றொடர்க் குற்றியலுகரம் | - | ஆறு, காசு |
| | ஆ-தத் தொடர்க் குற்றியலுகரம் | - | எஃது, அஃது |
| | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் | - | வரகு, தராசு |
| | வன்றொடர்க் குற்றியலுகரம் | - | பட்டு, சுக்கு |
| | மென்றொடர்க் குற்றியலுகரம் | - | சங்கு, வண்டு |
| | இடைத்தொடர்க் குற்றியலுகரம் | - | மார்பு, தெள்கு |

ஆறு தொடர்களிலும் நெடிற்றொடரொன்றே ஈரெழுத்துள்ளது; ஏனையவைந்தும் மூவெழுத்தும் அதற்கு மேலு முள்ளன.

நெடிற்றொடர்க்கும் உயிர்த்தொடர்க்கும் உயிரும் உயிர்மெ-யும் ஈற்றயலாக வரும்; ஆ-தத் தொடர்க்கு ஆ-தம் ஈற்றயலாக வரும். ஏனைத் தொடர்கட்கு மெ- ஈற்றயலாக வரும்.

உயிர்த்தொடரில் ஈற்றயலா- வருவது உயிர்மெ-யேனும், அஃது உயிரும் மெ-யுமாகப் பகுக்கப்படும்போது, உயிரே ஈற்றயலா- நிற்றலின் உயிர்த்தொட ரெனப்பட்டது.

நெடிற்றொடர்க்கும் உயிர்த்தொடர்க்கும் வேறுபாடு.

| நெடிற்றொடர் | உயிர்த்தொடர் |
|---|---|
| 1. ஈரெழுத்தாலாயது. | மூவெழுத்திற்குக் குறையாதது. |
| 2. நெடிலே ஈற்றயலாக வருவது. | குறிலும் நெடிலும் ஈற்றயலாக வருவது. |
| 3. உயிரும் உயிர்மெ-யும் ஈற்றயலாக வருவது. | உயிர்மெ-யே ஈற்றயலாக வருவது. |

குற்றியலுகரம் ஈற்றயலெழுத்துப்பற்றி முப்பத்தாறாகக் கூறப்படும். ஆறு தொடர்களிலும் முறையே நெடிலேழும், ஆ-தமொன்றும், ஔகார மொழிந்த உயிர்பதினொன்றும், வல்லினமெ-யாறும். மெல்லினமெ- யாறும், வகரமொழிந்த இடையினமெ- ஐந்துமாக மொத்தம் முப்பத்தா றெழுத்துகள் ஈற்றயலாதல் காண்க.

குற்றியலுகர மல்லாத உகரமெல்லாம் முற்றியலுகரமாகும்.

| உ-ம். | தனிக்குறில் | - | உ, கு. |
|---|---|---|---|
| | இணைக்குறில் | - | அது, உடு. |
| | மெல்லின மெ-ச் சார்பு | - | வேணு, பொருமு, தென்னு. |
| | இடையின மெ-ச் சார்பு | - | ஏழு, வரவு. |

குற்றியலுகர முற்றியலுகரங்கள் குற்றுகரம் முற்றுகரமெனவுங் கூறப்படும்.

**7. நெடிலோ டா—தம் உயிர்வலி மெலிஇடை**
**தொடர்மொழி யிறுதி வன்மையூர் உகரம்**
**அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே. (நன். சூ. 94)**

## 7. குற்றியலிகரம்

22. குறுகி யொலிக்கும் இகரம் குற்றியலிரகம். அஃது இகரத்திற்கும் ஏகாரத்திற்கும் இடைத்தரமா- ஒலிக்கும்.

23. குற்றியலிகரம் புணர்மொழி, தனிமொழி என்னும் இருவழியான் வரும்.

24. ***புணர்மொழி:*** குற்றியலுகரம் யகரத்தோடு (யகர முதன்மொழியோடு) புணரும்போது இகரமா-த் திரியும். அவ் விகரம் குற்றியலிகரம்.

உ-ம். வரகு+ யாது = வரகியாது
வீடு + யாருக்கு = வீடியாருக்கு

25. ***தனிமொழி:*** 'மியா' என்னும் முன்னிலையசைச் சொல்லிலுள்ள இகரம் குற்றியலிகரம்.

***குறிப்பு:*** பொருளில்லாது செ-யுளில் வெற்றிடத்தை நிரப்புதற் கென்றே சில அசைகளும் சொற்களுமுள. அவை பொதுவா- அசைநிலை யெனப்

படும். அவற்றுள் முன்னிலை யிடத்திற்கே யுரியன முன்னிலை யசைச்சொல். அவற்றுள் ஒன்று 'மியா' இது பொருளில்லது; பூனையொலியன்று.

உ-ம். கேண்மியா (கேள்), சென்மியா (செல்).
குற்றியலிகர மல்லாத இகரமெல்லாம் முற்றியலிகரம்.

குற்றியலிகர முற்றியலிகரங்கள் முறையே குற்றிகரம், முற்றிகரம் எனவுங் கூறப்படும்.

எழுத்து முறையில் இகரம் உகரத்திற்கு முந்தியதேனும், குற்றியலிகரத்தில் ஒருவகை குற்றியலுகரத்தா லுண்டாகின்றமையின், இது குற்றியலுகரத்திற்குப் பின்னர்க் கூறப்பட்டது.

**8. யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்**
**அசைச்சொல் மியாவின் இகரமுங் குறிய. (நன். சூ. 93)**

### 8. போலி

26. ஒரு சொல்லில் ஓரிடத்தில் ஓரெழுத்திற்குப் பதிலாக மற்றோரெழுத்து வந்தும் பொருள் மாறாதிருப்பின் போலி எனப்படும்.

போல வருவது போலி: உலக வழக்கினுள்ளும் பட்டுப் போலி, கற்போலி கதர்ப்போலி, முதலியவற்றைக் காண்க. பட்டுப் போல்வது பட்டுப் போலி, ஓரெழுத்துப்போல மற்றோரெழுத்து வருவது எழுத்துப்போலி.

ஒரு சொல்லுக்கு முதல், இடை, கடையென மூவிடமுண்டு.

| | | |
|---|---|---|
| உ-ம். | முதல்: நாயிறு - ஞாயிறு<br>நயம் - ஞயம்<br>(ஞயம்படவுரை) | நகரத்திற்கு ஞகரம் போலி |
| | பையல் - பயல்<br>மையல் - மயல் | ஐகாரத்திற்கு அகரம் போலி |
| | இடை: குயவன் - குசவன்<br>நெயவு - நெசவு | யகரத்திற்குச் சகரம் போலி |
| | சிவப்பு - சிகப்பு<br>தாவம் - தாகம் | வகரத்திற்குக் ககரம் போலி |
| | கடை: கடம் - கடன்<br>கலம் - கலன் | மகரத்திற்கு னகரம் போலி |
| | மதில் - மதிள்<br>செதில் - செதிள் | லகரத்திற்கு ளகரம் போலி |

# உ. சொல்லியல்

## 1. சொல்

27. எழுத்துத் தனித்தாவது, (பலவாகத்) தொடர்ந்தாவது பொருள் தரின் சொல்லாம்.

| | | |
|---|---|---|
| உ-ம். | ஆ, ஈ, | ஒரெழுத்துச் சொற்கள். |
| | ஆணி, அறம், விரும்பு, நடந்தனன். | பலவெழுத்துச் சொற்கள் |

ஆ - பசு. தன்னை யுணர்த்தும்போது எழுத்து; பசுவை உணர்த்தும் போது சொல்.

28. சொற்கள் அமைப்பைப்பற்றிப் பகாப்பதம், பகுபதம் என இரு வகைப்படும்.

பகுத்தல் = வகுத்தல். பதம் = சொல்.

29. பகாப்பதம் பல உறுப்புகளாகப் பகுக்கப்படாது ஒரே வடி வாயிருக்கும் சொல்.

உ- ம். கண், படி.

இச் சொற்களைப் பல உறுப்புகளாகப் பிரிப்பின் பொருள்தரா.

30. பகுபதம் பல உறுப்புகளாகப் பகுக்கப்படும் சொல். அவ் வுறுப்பு களில் முதலிலிருப்பது பகுதி யென்றும், கடைசியிலிருப்பது விகுதி யென் றும், இடையிலிருப்பது இடைநிலையென்றுங் கூறப்படும்.

அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் பொருள் தரும்; அல்லது பயன் நோக்கி நிற்கும்.

உ-ம். கண்ணன் - கண் பகுதி, அன் விகுதி.
செ-கிறான் - செ- பகுதி, கிறு இடைநிலை, ஆன் விகுதி.

பகாப்பதத்திலிருந்தே பகுபத முண்டாகும். பகாப்பதத்தோடு விகுதி முதலிய உறுப்புகள் சேரின் பகுபதமாம். பகாப்பதம் பகுபதத்திற் பகுதியா யமைந்திருக்கும்.

**9. எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்**
**பதமாம் அதுபகாப் பதம்பகு பதம்என**
**இருபா லாகி இயலு மென்ப. (நன். 128)**

31. பகாப்பதமும் பகுபதமுமாகிய சொற்கள் இலக்கண வகையில், (1)பெயர்ச்சொல், (2) வினைச்சொல், (3) இடைச்சொல், (4) உரிச்சொல் என நான்கு வகையாகவும்; இலக்கிய வகையில், (1) இயற்சொல், (2) திரிசொல், (3) திசைச்சொல், (4) வடசொல் என நான்கு வகையாகவும் வகுக்கப்படும்.

32. அவற்றுட் பெயர்ச்சொல்லாவது ஒரு பொருளின் பெயர்.

உ-ம். கண்ணன், மாடு.

பெயரே சொல்லாயிருத்தலின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப் பிறிதுபடக் கூறுவது பொருந்தாது. பெயர்ச்சொல் பெயராகிய சொல்.

33. வினைச் சொல்லாவது ஒரு பொருளின் வினையைக் குறிக்கும் சொல்.

உ-ம். (இராமா) நட.
(தச்சன்) செ-தான்.

வினை - செ-கை, வினை வேறு; வினையைக் குறிக்கும் சொல் வேறு.

34. இடைச்சொல்லாவது பெரும்பாலும் தனித்து வராது பெயரிடத் தும் வினையிடத்தும் வருஞ்சொல். இடை - இடம்.

உ-ம். ‘கந்தனும் கடைக்குச் சென்றான்’ என்னும் வாக்கியத்தில், உம், கு, ஆன் என்பவை இடைச்சொற்கள்.

35. உரிச்சொல்லாவது செ-யுட்கே யுரிய சொல்.

உ-ம். சாலவுண்டான் - சால = மிக. கடி நகர் -கடி = காவல். வடிவேல் - வடி = கூர்மை.

குறிப்பு: உரி, உரிமை. உரிச்சொல் குணத்திற்குரிய சொல்லென்றும், பெயர் வினைகட்குரிய சொல்லென்றும், ஒருசொல் பல பொருட்கும், பல சொல் ஒருபொருட்குமாகவுரிய சொல்லென்றும், வினைப்பகுதியென்றும், பலரும் பலவாறாகக் கூறுவர். அவை யெல்லாம் போலியுரையென்பதை இந் நூலின் இறுதியிலுள்ள ‘உரிச்சொல் விளக்கம்’ என்னும் கட்டுரையிற் கண்டுகொள்க.

36. இயற்சொல்லாவது எல்லார்க்கும் பொருள் விளங்கும் எளிய சொல்.

இயல் - இயல்பு. இயல்பா-ப் பொருளுணர்த்தும் சொல் இயற்சொல் லெனப்பட்டது.

உ-ம். யானை, வந்தான்.

37. திரிசொல்லாவது கற்றோர்க்கே பொருள் விளங்கும் அருஞ்சொல். அஃது ஒருபொருட் பலசொல்லென்றும் பலபொரு ளொருசொல்லென்றும் இருவகைப்படும்.

உ-ம். வேழம், ஓங்கல் என்பன யானையைக் குறிக்கும்.

## ஒருபொருட் பலசொல்

படர்ந்தான், ஏகினான் என்பன சென்றான் என்னும் வினையைக் குறிக்கும் **ஒருபொருட் பலசொல்.**

வேழம் என்பது, கரும்பு, மூங்கில், யானை எனப் பலபொருள் தரும் **பலபொரு ளொருசொல்**.

புரி என்பது செ-, விரும்பு எனப் பலபொருள்படும் **பலபொரு ளொரு சொல்.**

இயற்சொல்லினின்றும், (அதாவது எளிதா-ப் பொருள் விளக்குந் தன்மையினின்றும்) திரிந்த சொல் திரிசொல்லெனப்பட்டது. திரிதல் - வேறு படுதல்.

இயற்சொல், திரிசொல் இரண்டும் செந்தமிழ்ச் சொற்களாம். செந்தமிழ் - செம்மையான தமிழ். செம்மை, இலக்கணமுந் தூ-மையுமுடைமை.

இயற்சொல்லுந் திரிசொல்லும் திசைச்சொல் வடசொற்களுக்கின மான இலக்கியவகைச் சொல்லாதலின் இங்குக் கூறப்பட்டன.

38. திசைச்சொல்லாவது. பல திசைகளிலுமுள்ள பல மொழிகளினின் றும் தமிழில் வந்து வழங்கும் சொல்.

உ-ம். தந்தையை **அச்சன்** என்பது **மலையாளச் சொல்**.
மாமரத்தைக் **கொக்கு** என்பது **துளுவச் சொல்**.
அகப்படுதலைச் **சிக்குதல்** என்பது **கன்னடச்சொல்**.
சொல்லுதலைச் **செப்புதல்** என்பது **தெலுங்குச்சொல்**.
முதலை **அசல்** என்றும் பிரதியை நகல் என்றும் சொல்லுவது **இந்துஸ்தானிச் சொல்**.

இனி முன்காலத்திலில்லாத பல பொருள்களும் அலுவல் (உத்தியோ கம்)களும் இப்போது பிறநாட்டாரால் ஏற்பட்டிருப்பதால் அவற்றைக் குறிக் கும் சொற்களும் திசைச்சொற்களா யிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| உ-ம். | புனல், மோட்டார், கலெக்ற்றர் | - ஆங்கிலச்சொல். |
| | அலமாரி | - போர்த்துக்கீயச் சொல். |
| | தாசில்தார் | - இந்துஸ்தானிச் சொல். |

சில திசைச்சொற்கள் வேண்டாது (அனாவசியமா-) வழங்குவதால், அவற்றுச் சரியான தமிழ்ச்சொற்கள் மறைந்தொழிகின்றன.

| | இங்கிலீ | தமிழ் | இந்துஸ்தானி | தமிழ் |
|---|---|---|---|---|
| உ-ம். | கார்டியன் | முதுகண், கரணவன் | ஜில்லா | கோட்டம், வளநாடு. |
| | லைட்ஹவுஸ் | கலங்கரை விளக்கம் | தாலூகா | கூற்றம், நாடு |
| | | | வாரிஸ் | உரிமை |
| | பாங்கு | வட்டக்கடை | இனாம் | நன்கொடை, பரிசு. |
| | | | ஜமீன்தார் | கிழார், வேள். |
| | | | மிராஸ்தார் | பண்ணையார். |

பண்டையிலக்கணப்படி திசைச்சொல் கொடுந்தமிழ்ச் சொல்லையே குறிக்கும். கொடுந்தமிழ் செந்தமிழ்க்கு மாறான கொச்சைத் தமிழ்; தெலுங்கு மலையாளம் முதலிய மொழிகள் முன்காலத்தில் கொடுந்தமிழாயிருந்து பின்பு வடமொழிச் சேர்க்கையால் தனிமொழிகளாகப் பிரிந்துவிட்டன. பின்பு தமிழ்நாட்டிற்குள்ளேயே தென்பாண்டிநாடு, குட்டநாடு முதலிய பன்னிரு நாடுகளில் வழங்கும் சிறப்புச் சொற்களைத் திசைச்சொல்லாகக் காட்டினர். அம் முறைப்படி இன்று கூறும் திசைச்சொற்களாவன:

| | |
|---|---|
| தள்ளுவதை **நூக்குவது** என்பதும் பதநீரைத் **தெளிவு** என்பதும் | } வடார்க்காட்டுச்சொல். |
| காணாமற் போனதைக் **கெட்டுப் போன**தென்றும், மருமகளை **மாட்டுப் பெண்**ணென்றும் சொல்லுவது | } தஞ்சைநாட்டுச் சொல். |
| எறிதலை **இடுத**லென்பதும் பெரியதைச் **சோடு** என்பதும் | } கோவைநாட்டுச் சொல். |

தபாலை **அஞ்ச**லென்பதும்
இடத்தை **இலக்கு** என்பதும் } தென்னாட்டுச் சொல்.

பதநீரைப் பனஞ்சா றென்பதும்
நகையாடுதலைச் கோட்டா என்பதும் } சென்னைநாட்டுச் சொல்.

தென்பாண்டிநாடு, குட்டநாடு முதலிய கொடுந்தமிழ் நாட்டுப் பாகு பாடு இக்காலத்திலில்லை. செந்தமிழ் கொடுந்தமிழ் நாட்டெல்லைகளும் பெரிதும் மாறியிருக்கின்றன.

திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களையும், யாழ்ப்பாணத்தையும் ஒருவாறு தமிழுக்குச் சிறந்தவை யென்னலாம். அவற்றுள் யாழ்ப்பாணமும், திருநெல்வேலியும் சில வழக்குப்பற்றி மிகச் சிறந்தனவாகும்.

39. வடசொல்லாவது வடமொழி (சமஸ்கிருதம்) யிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொல்.

உ-ம். பாஷை, வார்த்தை, சுகம், துக்கம்.

முன்காலத்தில் இந்து தேசத்தில் வடக்கே சமஸ்கிருதமும் தெற்கே தமிழுமாக இருபெரு மொழிகளே வழங்கி வந்தன. அதனால் அவை முறையே வடமொழி, தென்மொழி யெனப்பட்டன. இக் காலத்தும் இவையிரண்டே வடவிந்திய மொழிகட்கும் தென்னிந்திய மொழிகட்கும் முறையே தா- மொழி களாகும்.

***குறிப்பு:*** .இயற்சொல் முதலிய இலக்கியவகைப் பாகுபாட்டில் வட சொல் ஒன்றே பிறமொழியாகும். ஏனை மூன்றும் செந்தமிழாயினும் கொடுந் தமிழாயினும் தமிழ்மொழியேயாம். வடமொழி தவிரப் பிறமொழி முற்காலத் தில் தமிழ்நாட்டிலில்லாமையால் வேறொன்றுங் கூறப்படவில்லை.

## 2. பெயர்ச் சொல்

பெயர்வகை: இடுகுறிப்பெயர், காரணப்பெயர்.

40. பொருள்கட்குப் பெயர்கள், இடுகுறி, காரணம் என்ற இருவகை யான் இடப்படும்.

41. இடுகுறியாவது யாதொரு காரணமுமின்றி நம் முன்னோரால் ஒரு பொருளுக்கு இடப்பட்ட குறி. இதற்குப் பொருளில்லை. குறி - பெயர்.

உ-ம். கல், மண், மரம்.

42. காரணமாவது ஏதேனுமொரு காரணம்பற்றி ஒரு பொருளுக்கு இடும் பெயர். இது காரணப் பெயரென்றும், காரணக்குறியென்றுங் கூறப்படும். இதற்குப் பொருளுண்டு.

உ-ம். உடை - உடுப்பது
பறவை - பறப்பது
வளையம் - வளைந்திருப்பது
முக்காலி - மூன்று கால்களை யுடையது.

## 2. அறுபொருட் பெயர்

43. எல்லாப் பெயர்ச்சொற்களும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என ஆறுவகைப்படும்.

பொருள்கள் ஆறுவகையாதலின் அவற்றின் பெயர்களும் ஆறு வகைப் பட்டன.

44. பொருட்பெயர்: தனிவடிவும் இடப்பெயர்வும் உடைய ஒரு பொருளின் பெயர் பொருட்பெயராகும்.

உ-ம். இராமன், மாடு, கல், மரம்.

45. இடப்பெயர்: ஓர் இடத்தின் பெயர் இடப்பெயராகும்.

உ-ம். நாடு, நகர், மலை, ஆறு.

***குறிப்பு:*** மலை, வீடு முதலியவற்றிற்கு வடிவிருப்பினும், அவை நிலத் தினின்றும் பிரிக்கப்படாமையானும், நிலைபெயராகாமையானும் இடப் பொருள்களே யன்றிப் பொருட்பொருள்களாகா. ஆகவே அவற்றைக் குறிக்கும் பெயர்களும் இடப்பெயர்களேயன்றிப் பொருட்பெயர்க ளாகா.

46. காலப்பெயர்:- காலத்தின் பெயர் காலப் பெயர்.

உ-ம். நொடி, பகல், நாள், ஆண்டு.

47. சினைப்பெயர்: ஓர் உறுப்பின் பெயர் சினைப்பெயர்.

சினை - உறுப்பு.

உ-ம். கை, கால், இலை, கா-.

***குறிப்பு:*** உயிரில்லாத பொருள்களின் உறுப்புகள் சினையெனப் படா. பிணம், பாவை முதலியவற்றின் உறுப்புகள் ஒற்றுமையும் ஒப்புமையும்பற்றிச் சினையெனப்படும்.

48. குணப்பெயர்: ஒரு குணத்தின் பெயர் குணப்பெயர், குணமாவது ஒரு பொருளின் இயல்பு. அது பண்பு என்றுங் கூறப்படும்.

உ-ம். நன்மை, அன்பு, வெண்மை, வெம்மை, சினம்.

49. தொழிற்பெயர்: ஒரு தொழிலின் பெயர் தொழிற்பெயர். தொழில் - செ-கை.

தொழிற்பெயர் பல வகைப்படும்.

### *(1) விகுதி பெற்ற தொழிற்பெயர்*

| | | |
|---|---|---|
| உ-ம். | தல் - படித்த | காடு - வேக்காடு |
| | அல் - பாடல் | அரவு - தேற்றரவு |
| | கல் - கொடுக்கல் | ஆனை - வாரானை |
| | அம் - வஞ்சம் | இல் - எழில் |
| | ஐ - கொலை | ஆல் - எழால் |
| | கை - நடக்கை | அனை - வஞ்சனை |
| | தை - நடத்தை | அனம் - கண்டனம் |
| | வை - பார்வை | அணம் - கட்டணம் |
| | பு - படிப்பு | அடம் - கட்டடம் |
| | உ - வரவு | அகம் - வஞ்சகம் |
| | இ - வெகுளி | அரம் - விளம்பரம் |
| | தி - மறதி | இயம் - கண்ணியம் |
| | சி - முயற்சி | பாணி - சிரிப்பாணி |
| | வி - கல்வி | மை - வந்தமை |
| | உள் - விக்குள் | து - வந்தது. |

அம், அல் முதலிய விகுதிகள் அகரம் கெட்டும் நிற்கும்.

உ-ம். மண + அம் = மணம். சிவ + அல் = சிவல்.

ஒரே வினை பல விகுதிகளையும் ஏற்கும்.

உ-ம். நடம், நடை, நடக்கை, நடத்தல், நடப்பு.

எல்லா வினைகளும் தல், கை, மை, து என்ற விகுதிகளை யேற்கும். இவற்றுள் மை, து என்ற இரண்டும் காலங்காட்டும் தொழிற்பெயர் விகுதி களாகும்.

ஒரு வினை பல விகுதிகளை யேற்பின், விகுதிதோறும் வெறு பொருள் தோன்றும்.

உ-ம். கற்றல் = படிக்குந் தொழில்
கற்கை = படிப்பு
கல்வி = வித்தை (Education)
கலை = சாஸ்திரம்
கற்பு = மாதரொழுக்கம்

(2) முதனிலைத் தொழிற்பெயர்: விகுதிபெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராயின் முதனிலைத் தொழிற்பெயர் முதனிலை - பகுதி.

உ-ம். தட்டு, தாவு, உரை, அடி என்பவை தட்டுதல், தாவுதல், உரைத்தல், அடித்தல் என்று பொருள்படும்போது முதனிலைத் தொழிற் பெயர்களாகும்.

(3) முதனிலை திரிந்த தொழிற்பெயர்: விகுதிபெறாமல் முதனிலை திரிந்து தொழிற்பெயராயின் முதனிலை திரிந்த தொழிற்பெயராகும்.

உ -ம். பொரு - போர். புறப்படு - புறப்பாடு.
கெடு - கேடு சாப்பிடு - சாப்பாடு.

(4) முதனிலை திரிந்து விகுதிபெற்ற தொழிற்பெயர்:

உ-ம். படி + அம் = பாடம்
தவி + அம் = தாவம் (தாகம் - போலி)
கொள் + தல் = கோடல்
செல் + தல் = சேறல்

***குறிப்பு:*** தொழிற்பெயர் விகுதிகளில், துவ்விகுதி, அவன் வந்தது எனக்குத் தெரியாது, அவன் வருகின்றது எனக்குத் தெரியாது அவன் வரு வது எனக்குத் தெரியாது. என முக்காலத்திலும், மைவிகுதி அவன் வந்தமை எனக்குத் தெரியாது, அவன் வருகின்றமை எனக்குத் தெரியாது என இரு காலத்திலும் வரும்.

## *வினையாலணையும் பெயர்*

50. வினைமுற்றே பெயராகி எழுவாயைக் குறிக்குமானால் வினை யாலணையும் பெயராம்.

வினையாலணைகின்ற பெயர், வினையாலணையும் பெயர்.

உ-ம். சொல்வார் சொன்னாலும் கெட்பார்க்கு மதியில்லையா?
இவ்வழியா- அவ்வூருக்குப் போவார் வருவார் பலர்.
இவ்விரு கனிகளில் புளித்தது உனக்கு; இனித்தது எனக்கு.

இவ் வாக்கியங்களில் வரும் சொல்வார், கேட்பார், போவார், வருவார், புளித்தது, இனித்தது என்கின்ற பெயர்கள், வினையாலணையும் பெயர்கள்.

வினையாலணையும் பெயர்க்கும் வினைமுற்றுக்கும் வடிவில் வேறு பாடின்றேனும், பெயர்ப்பொருளினாலும், வேற்றுமை யேற்குந் தன்மை யினாலும் வினையாலணையும் பெயர் பிரித்தறியப்படும். பெயர்ச்சொல் லுக்கேயன்றிப் பிறசொல்லுக்கு வேற்றுமையில்லை.

தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் வேறுபாடு.

| ***தொழிற்பெயர்*** | ***வினையாலணையும் பெயர்*** |
|---|---|
| (1) தொழிலின் பெயர் | தொழிலைச் செ-யும் கருத்தாவின் பெயர். |
| (2) மை, து விகுதி பெற்ற பெயரே காலங்காட்டும் | எல்லாப் பெயருங் காலங் காட்டும். |
| (3) படர்க்கைக்கே யுரியது. | மூவித்திற்கு முரியது. |

நேற்று வந்தேனுக்கு என்ன தெரியும்? நேற்ற வந்தா-க்கு என்ன தெரியும்? நேற்று வந்தானுக்கு என்ன தெரியும்? என மூவிடத்தும் வினை யாலணையும் பெயர் வருதல் காண்க.

இனி வினையாலனையும் பெயர்கள் சொல்வார், கேட்பார் என்றிராமல் சொல்பவர் என்று மிருக்கும். இவ்விரு வடிவுகளிலும் முன்னது சிறந்ததாம்.

51. கிளைப்பெயர்: இனமுறையைக் குறிக்கும் பெயர் கிளைப்பெயர்.

கிளை - இனம், உறவின் முறை.

உ-ம். அண்ணன், தங்கை, நமர்.

52. சாதிப்பெயர்: மக்களின் குலத்தைக் குறிக்கும் பெயர், சாதிப்பெயர்.

உ-ம். பார்ப்பான், பாணன், குறவன், தொம்பன்.

53. **அளவுப்பெயர்:** பொருள்களின் அளவைக் குறிக்கும் பெயர், அளவுப்பெயர்.

அளவு - எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என நால்வகைப்படும்.

உ-ம். எண்ணல் - கால், அரை, ஒன்று, இரண்டு.
எடுத்தல் - பலம், வீசை, துலாம், பாரம்.
முகத்தல் - நாழி, கலம், குறுணி, கோட்டை.
நீட்டல் - சாண், முழம், கெசம்.

## 5. மூவிடப் பெயர்

54. எல்லாப் பெயர்களும், இடம்பற்றித் தன்மைப்பெயர், முன்னிலைப் பெயர், படர்க்கைப்பெயர் என மூவகைப்படும்.

55. பேசுவோன் தன்னைக் குறிப்பது தன்மைப்பெயர்.

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| உ-ம். | யான் | யாம், யாங்கள் |
| | நான் | நாம், நாங்கள் |

இவற்றுள் நாம் என்னும் பெயர் முன்னிலையாரையும், நாங்கள் என்னும் பெயர் படர்க்கையாரையும் தன்மையோடு உளப்படுத்தும்.

56. பேசுவோன், முன்னால் நிற்பவனைக் குறிப்பது முன்னிலைப் பெயர்.

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| உ-ம். | நீ | நீயிர், நீவிர், நீர், நீம், நீங்கள் |

முன்னிலைப் பன்மைப் பெயர்கள் சமயம்போல் படர்க்கையாரை உளப்படுத்துவது முண்டு.

57. தன்மை முன்னிலை இரண்டையும் தாண்டிப் படர்வது படர்க்கை. ஆகவே தன்மைப் பெயரும் முன்னிலைப்பெயரு மல்லாத எல்லாப் பெயர்களும், படர்க்கைப் பெயர்களாம். படர்தல் - செல்லுதல்.

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| உ-ம். | அவன் | அவர்கள் |
| | அது | அவை |
| | மரம் | மரங்கள் |

## பொதுப்பெயர்கள்

58. தான், தாம் என்னும் பெயர்கள் இருதிணைக்கும், எல்லாம் என் னும் பெயர் இருதிணை மூவிடத்திற்கும் பொதுவா- வருதலின் இவை பொதுப்பெயர் எனப்படும்.

உ-ம்.

| | | | |
|---|---|---|---|
| ஒருமை | அவன்தான் (himself) | | உயர்திணை |
| | அவள்தான் (herself) | | |
| | அதுதான் (itself) | | அஃறிணை |
| பன்மை | நாங்கள் எல்லாம் | - | தன்மை |
| | நீங்கள் எல்லாம் | - | முன்னிலை |
| | அவர்தாம் | - உயர்திணை | படர்க்கை |
| | அவைதாம் | - அஃறிணை | படர்க்கை |
| | அவர்கள் எல்லாம் | - உயர்திணை | படர்க்கை |
| | அவை எல்லாம் | - அஃறிணை | படர்க்கை |

தன்மை முன்னிலைப் பெயர்கள் ஒருமை, பன்மை யென்னும் எண்ணே யன்றித் திணை, பால் காட்டா இருதிணைக்கும் பொதுவா- வருதலின், அவை யும் திணைப்பொதுப் பெயர்களாம்.

**10. தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே. (நன். 266)**

**11. தன்மை யான்நான் யாம்நாம் முன்னிலை**
**எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ**
**அல்லன படர்க்கை எல்லாம் எனல்பொது. (நன். 285)**

## பெயரிலக்கணம்

59. பெயர்ச்சொற்கள் திணை, பால், எண், இடம், வேற்றுமை என ஐந் திலக்கணங்களைக் காட்டும். இவற்றுள் வேற்றுமை யொன்றே பெயருக்குச் சிறப்பிலக்கணம். ஏனை நான்கும் பெயர், வினை என்னுமிரண்டிற்கும் பொதுவாம்.

### *1. திணை*

60. திணையாவது குலம். எல்லாப் பொருள்களும் இலக்கணத்தில் உயர்திணை, அஃறிணை என இருதிணையாக வகுக்கப்படும்.

உயர்திணை - உயர்குலம். அஃறிணை (உயர்வு) அல்லாத குலம்; அதாவது தாழ்குலம். அல் + திணை = அஃறிணை.

61. பகுத்தறிவுள்ள மக்களும், தேவரும் நரகரும் உயர்திணை; மற்றப் பொருள்களெல்லாம் அஃறிணை.

மாடு, மரம் முதலிய உயிருள்ளனவும், கல், மண் முதலிய உயிரில்லனவுாக இருவகைப்படும் அஃறிணை.

மக்கள் - மனிதர். மனிதரே நல்வினையால் தேவரும், தீவினையால் நரகருமாவர். மனிதனுக்குச் சிறந்தது பகுத்தறிவாதலின், பகுத்தறிவில்லாத மனிதரையெல்லாம் மாக்களென அஃறிணைப் பட இகழ்ந்து கூறுவர் பண்டை இலக்கணிகள். மாக்கள் - விலங்குகள் அல்லது விலங்கு போல்வார்.

மனிதன் உயர்திணையேனும், உயிரும் உடம்பும் பிரித்துக் கூறப்படும் போது அஃறிணையேயாம்.

உ-ம். உயிர் ஒடுங்குகிறது; உடல் நடுங்குகிறது.

கடவுள் உயர்திணையாகவும் அஃறிணையாகவும் கூறப்படுவர். கடவுள் இருக்கிறார். கடவுள் இருக்கிறது.

கடவுள், மண், விண் முதலான அஃறிணைப் பொருள்களின் வடிவாகவும் இருப்பதனால் அவர் அஃறிணையாகவுங் கூறப்படுவர்.

**12. மக்கள் தேவர் நரகர் உயர்திணை**
**மற்றுயி ருள்ளவும் இல்லவும் அஃறிணை. (நன். சூ. 261)**

## 2. பால்

62. பால் என்பது பகுப்பு; அதாவது திணையின் பகுப்பு. பகு + அல் = பகல் - பால்.

63. பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகைப்படும்.

64. உயர்திணையில் ஒரே ஆணைக் குறிப்பது ஆண்பால்; ஒரே பெண்ணைக் குறிப்பது பெண்பால்; ஆணாயினும் பெண்ணாயினும், ஆணும் பெண்ணும் கலந்தாயினும் பலரைக் குறிப்பது பலர்பால்.

65. அஃறிணையில் ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பால், பலவற்றைக் குறிப்பது பலவின்பால்.

66. ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்னும் மூன்றும் ஒருமைப் பால் எனவும், பலர்பால், பலவின்பால் என்னுமிரண்டும் பன்மைப் பால் எனவுங் கூறப்படும்.

ஆண்பால் முதலிய ஐந்தும் படர்க்கைக்கே யுரியன. ஏனைத் தன்மை முன்னிலைகள் ஒருமை, பன்மை என்னும் எண் காட்டுமேயன்றித் திணை பால் காட்டா.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | இராமன், மகன், அவன் | - ஆண்பால் | |
| | சீதை, மகள், அவள் | - பெண்பால் | |
| | புதல்வர், ஆடவர் | - ஆண்மைப் பலர்பால் | உயர்திணை |
| | புதல்வியர், பெண்டிர் | - பெண்மைப் பலர்பால் | |
| | மாந்தர், மக்கள் | - பொதுமைப் பலர்பால் | |
| | மாடு, மரம், அது | - ஒன்றன் பால் | அஃறிணை |
| | மாடுகள், மரங்கள் அவை | - பலவின்பால் | |

சேவல், கோழி, காளை, பசு என அஃறிணையினும் ஆண்பாற் பெண்பாற் பகுப்புள்ளதேனும், அஃது இலக்கணத்திற்குக் கொள்ளப்பட வில்லை, ஏனெனின்

1. உயர்திணைக் கிருப்பதுபோல் அஃறிணையிலுள்ள எல்லாப் பொருள்கட்கும் ஆண் பெண் பாகுபாடில்லை.

2. அப் பாகுபாடு உள்ளவற்றையும், மாடு வந்தது, பசு வந்தது என்று ஒருமை விகுதியால் ஒன்றுபடக் கூறுவதல்லது மாடுவந்தான், பசு வந்தாள் எனப் பால் விகுதியால் வேறுபடக் கூறுவதில்லை.

**13. ஆண்பெண் பலர்என முப்பாற் றுயர்திணை (நன். சூ. 262)**

**14. ஒன்றே பலஎன் றிருபாற் றஃறிணை. (நன். சூ. 263)**

## 3 எண்

67. எண் என்பது பொருள்களின் எண்ணிக்கை, அஃது ஒருமை, பன்மை என இருவகைப்படும். ஒன்றைக் குறிப்பது ஒருமை; பலவற்றைக் குறிப்பது பன்மை.

உ-ம். மகன், மகள், மரம், அது - ஒருமை
மக்கள், மரங்கள், அவை - பன்மை.

தமிழிலக்கணத்தில் எண் பாலோடேயே சேர்ந்துள்ளது. பாலறியப் படாத தன்மை முன்னிலையிலே எண் தனித்து விளங்கும்.

## 4. இடம்

68. சொல்வோன், கேட்போன், சொல்லப்படும் பொருள் ஆகிய மூவிடங்களைக் குறிப்பது இடமாகும்.

| | | |
|---|---|---|
| உ-ம். | தன்மை: | ஒருமை - யான், நான்<br>பன்மை - யாம், நாம், யாங்கள்,<br>நாங்கள் |
| | முன்னிலை: | ஒருமை - நீ<br>பன்மை - நீயிர், நீவிர், நீர், நீம், நீங்கள் |
| | படர்க்கை: | ஆண்பால் - மகன், அவன்<br>பெண்பால் - மக்கள், அவர்கள்<br>ஒன்றன்பால் - மாடு, அது.<br>பலவின்பால் - மாடுகள், அவை. |

## 5. வேற்றுமை

69. வேற்றுமை என்பது வேறுபாடு. பெயர்கள் தம் பொருளுக்கேற்ப வேறுபடும். அது வேற்றுமை யெனப்படும்.

இராமன் என்று சொல்லும்போது, வந்தான், போனான் என்றற் றொடக்கத்து வினைகட்கேற்ப அஃது எழுவா-த் தன்மை பெற்று நிற்கும். அது செயப்படுபொருட்டன்மை பெறவேண்டின், இராமனை என்று திரியும்; கருவிப் பொருட்டன்மை பெற வேண்டின், இராமனால் என்று திரியும். இங்ஙனம் திரியாமல் அது பிறபொருள்களை உணர்த்த முடியாது. இத் திரிபே வேற்றுமை யென்றும், இத் திரிபை யுணர்த்துங் குறியே வேற்றுமை யுருபென்றுங் கூறப்படும். உருபு - உருவம் அல்லது வடிவம். வேற்றுமையுருபு, அசையாகவும் சொல்லாகவுமிருக்கும். இவை முறையே அசையுருபென்றும், சொல்லுருபென்றுங் கூறப்படும். சொல் தனித்துவரும்; அசை தனித்து வராது, பெயரைச் சார்ந்தே வரும்.

70. வேற்றுமை மொத்தம் எட்டு. இவை முறையே,

1. முதல் வேற்றுமை அல்லது எழுவா- வேற்றுமை.
2. இரண்டாம் வேற்றுமை அல்லது செயப்படுபொருள் வேற்றுமை.
3. மூன்றாம் வேற்றுமை அல்லது கருவி வேற்றுமை
4. நான்காம் வேற்றுமை அல்லது கொடை வேற்றுமை
5. ஐந்தாம் வேற்றுமை அல்லது நீக்க வேற்றுமை
6. ஆறாம் வேற்றுமை அல்லது கிழமை வேற்றுமை
7. ஏழாம் வேற்றுமை அல்லது இட வேற்றுமை
8. எட்டாம் வேற்றுமை அல்லது விளிவேற்றுமை எனப் பெயர் பெறும்.

**15. ஏற்கும் எவ்வகைப் பெயர்க்குமீ றா–ப்பொருள்**
**வேற்றுமை செ–வன எட்டே வேற்றுமை. (நன். சூ. 291)**

71. முதல் வேற்றுமை: பெயரின் இயல்பே முதல் வேற்றுமையாம். இதனால் இது பெயர் வேற்றுமை என்றுங் கூறப்படும்.

உ-ம். மகன், மாடு, மரம், மண்.

எல்லாப் பெயர்களும் இயல்பா- எழுவா-த் தன்மை பெற்று நிற்கும் அதனால் பெயரையாவது வினையையாவது பயனிலையாகக் கொள்ளும்.

உ-ம். அவன் இராமன் - பெயர்ப் பயனிலை<br>
புலவர் பாடினார் - தெரிநிலை } வினைப்பயனிலை<br>
கடவுள் உண்டு } குறிப்பு<br>
பண மில்லை }

முதல் வேற்றுமை எழுவாயாயிருத்தலின் எழுவா- வேற்றுமை யெனப்படும். எழுவா-, கருத்தா, வினைமுதல், செ-பவன் என்பன ஒரு பொருட் சொற்கள்.

முதல் வேற்றுமைக்கு உருபில்லா திருப்பவும், ஆனவன், ஆனவள், ஆனவர், ஆனது, ஆனவை என்கின்ற ஐம்பாற் பெயர்களையும் என்பவன், என்பவள், என்பவர், என்பது, என்பன என்னும் ஐம்பாற் பெயர்களையும் உருபாகக் காட்டுவர். அவை முறையே ஆ, என் என்னும் வினைகளினடி யாகப் பிறந்த வினையாலணையும் பெயர்களே யன்றி உருபுகளாகா. ஆன வன் முதலிய ஐம்பாற் பெயர்களும், என்பவன் முதலிய ஐம்பாற் பெயர் களும், திணை பால் எண் இடங் காட்டி, ஆனவனை ஆனவனால், என்ப வனை என்பவனால் என வேற்றுமையுமேற்று வரும். இவ் விலக்கண கள் பெயருக்கேயன்றி வேற்றுயையுருபிற்கில்லை. வேற்றுமை யுருபுகள் பெயரைச்சார்ந்தல்லது தனித்து வராத இடைச்சொற்கள். மேலும் ஆனவன் முதலிய ஐம்பாற் பெயரும் என்பவன் முதலிய ஐம்பாற் பெயரும் படர்க்கை யெழுவா- கட்கே பொருந்துவதன்றி, தன்மை முன்னிலை யெழுவா-கட் குப் பொருந்தாமை யுணர்க. முதல் வேற்றுமைக்கு உருபின்றேனும் பிற வேற் றுமைகளினின்றும் வேறுபடுவதனால், வேற்றுமை யெனப்படுகிறது.

**16. எழுவா– உருபு திரிபில் பெயரே**
**வினைபெயர் வினாக்கொளல் அதன்பய னிலையே. (நன். சூ. 295)**

சூத்திரத்துள் வினா ஒரு தனிப்பயனிலையாகக் கூறப்பட்டுள்ளது. யார்? எது? முதலிய வினாச்சொற்கள் பெயரினுள்ளும் வந்தானா சென்றானா?

முதலிய வினாச்சொற்கள் வினையினுள்ளும் அடங்குதலின், வினாவைத் தனித்துக் கூறவேண்டுவதின்று. அங்ஙனங் கூறின், ஐயம் முதலியவற்றை யும் தனித்துக் கூற வேண்டும்.

எழுவா- பெரும்பாலும் தன்மையிலும் முன்னிலையிலும் தோன்றா திருக்கும் அது தோன்றா எழுவா- எனப்படும்.

உ-ம். (நான்) வந்தேன்.
(நீ) வா, வந்தா-.

72. **இரண்டாம் வேற்றுமை;** இரண்டாம் வேற்றுமையாவது எழு வா-ப் பொருள் செயப்படுபொருளாக வேறுபடுவது. இதனால் இது செயப் படுபொருள் வேற்றுமை என்று கூறப்படும். இதற்கு உருபு ‘ஐ’.

உ-ம். குடத்தை வனைந்தான்.
சோற்றை யுண்டான்.

செயப்படுபொருள் செ-பொருள் எனச் சுருக்கிக் கூறப்படும்.

73. ***மூன்றாம் வேற்றுமை:*** மூன்றாம் வேற்றுமையாவது எழுவா-ப் பொருள் கருவிப் பொருளாகவும், கருத்தாப் பொருளாகவும், உடனிகழ்ச் சிப் பொருளாகவும் வேறுபடுவது. இம் மூன்றனுள் கருவி சிறந்ததாகலின் இவ் வேற்றுமை கருவிவேற்றுமை யெனப்படும்.

74. இவ் வேற்றுமைக்கு ஆல், ஆன் என்பன கருவி கருத்தாப் பொருள் களிலும், ஒடு, ஓடு என்பன உடனிகழ்ச்சிப் பொருளிலும் வரும் உருபுகளாம்; உடன் என்பது உடனிகழ்ச்சிப் பொருளிலும் கொண்டு என்பது கருவிப் பொருளிலும் வரும் சொல்லுருபுகள்.

கருவி என்பது காரணத்தையுங் குறிக்கும்.

கருத்தாவும் ஒருவகைக் கருவியேனும் உயர்திணையாதலானும், செ-பவனாதலானும் கருத்தாவெனப் பிரித்துக் கூறப்பட்டது.

உடனிகழ்ச்சி யென்பது பல வினைகள் ஒருங்கு நிகழ்தல்.

உ-ம். உளியாற் பெட்டியைச் செ-தான். } கருவி
அவன் வந்ததனால் நான் வரவில்லை.
எழுத்தாணிகொண் டெழுதினான்.

கரிகால் வளவனால் காவிரிப்பூம்
பட்டினம் கட்டப்பட்டது. } கருத்தா
தச்சனால் வண்டி செ-யப்பட்டது.

இராமனோடு இலக்குமணண் சென்றான். } உடனிகழ்ச்சி
சம்பந்தர் சமணருடன் தருக்கித்தார்.

'இராமனோடு இலக்குமணன் சென்றான்' என்பதில் இராமன் செலவும், இலக்குமணன் செலவும் உடன் (ஒருங்கு) நிகழ்தல் காண்க.

75. **நான்காம் வேற்றுமை:** நான்காம் வேற்றுமையாவது, எழுவா-ப் பொருள் ஏற்றுக்கோடற் பொருளாக வேறுபடுவது. இதற்கு உருபு, 'கு'; பொருட்டு, நிமித்தம், ஆக என்பன சொல்லுருபுகள். இவற்றுள் ஆக என்பது குவ்வுருபோடு சேர்ந்தே வரும்.

உ-ம். சிபி புறாவுக்குத் தசையைக் கொடுத்தான்.
கூலியின் பொருட்டு வேலை செ-கிறான்.
தமிழுக்காகப் பாடுபட்டான்.

நான்காம் வேற்றுமைக்கும் பல பொருளிருப்பினும், கொடைச் சிறப்புப் பற்றிக் கொடை வேற்றுமையெனக் கூறப்படும். கொடையிலும் கொடுப் போனைக் குறியாது கொள்வோனையே குறித்தலால் கோளி வேற்றுமை யென்றுங் கூறப்படும். கோளி - கொள்பவன்.

76. ***ஐந்தாம் வேற்றுமை:*** ஐந்தாம் வேற்றுமையாவது எழுவா-ப் பொருள் நீக்கப் பொருளாக வேறுபடுவது. இதற்கு உருபு இன், இல் என் பன. இவற்றோடு சேர்ந்து இருந்து, நின்று என்பன சொல்லுருபுகளா- வரும்.

உ-ம். மலையின் வீழருவி.
மலையிலிருந்து வந்த மரம்.
மரத்தினின்று விழுந்த மலர்.

ஐந்தாம் வேற்றுமைக்குப் பல பொருள்களுள. அவற்றுள் நீக்கப் பொருள் பெரும்பான்மை. இதனால் இது நீக்க வேற்றுமை என்று கூறப்படும்.

77. ***ஆறாம் வேற்றுமை:*** ஆறாம் வேற்றுமையானது எழுவா-ப் பொருள் கிழமைப் பொருளாக வேறுபடுவது. இதனால், இது கிழமைப் வேற்றுமை யென்று கூறப்படும். கிழமை உரிமை அல்லது உடைமை.

78. ஆறாம் வேற்றுமைக்கு அது, ஆது என்பன ஒருமை யுருபுகள்; அ என்பது பன்மை யுருபு; உடைய என்பது இருமைக்கும் பொதுவான சொல்லுருபு.

உ-ம். கம்பரது கவித்திறம்.
எனாது கை. } ஒருமை

இராமன் குணங்கள்.
எனபொருள்கள். } பன்மை

இறைவனுடைய செயல்.
இறைவனுடைய செயல்கள். } பொதுமை

இனி, அன் இன் என்பனவும் ஆறாம் வேற்றுமை யுருபாக வரும் அவை இருமைக்கும் பொது.

உ-ம், ஒன்றன் பெயர்கள் - பன்மை
தமிழின் பெருமை - ஒருமை
தமிழின் பெருமைகள் - பன்மை.

79. ஏழாம் வேற்றுமை: ஏழாம் வேற்றுமையாவது எழுவா-ப் பொருள் இடப்பொருளாக வேறுபடுவது. இதனால் இஃது இடவேற்றுமை யென்று கூறப் படும். இதற்கு உருபு இல் என்பது. கண், கால் முதலியன சொல்லுருபுகள்.

உ-ம். வீட்டில் இருக்கிறது.
மதியின்கண் மறு.

**17. கண்கால் கடைஇடை தலைவா– திசைவயின்**
**முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்**
**பின்பாடு அளைதேம் உழைவழி உழிஉளி**
**உள்அகம் புறம்இல் இடப்பொரு ளுருபே. (நன்.சூ.302)**

இச் சூத்திரத்தில் சொல்லப்படாத சொல்லுருபுகளு முள. அவை பக் கம், ஓரம், மாடு, பாங்கர், கிட்ட, முகம், பால், புறம், அண்டை என்பன.

உ-ம். மலைப்பக்கம், ஆற்றோரம், தலைமாடு.

80. ***எட்டாம் வேறுமை:*** எட்டாம் வேற்றுமையாவது எழுவா-ப் பொருள் விளிப்பொருளாக வேறுபடுவது இதனால், விளிவேற்றுமை யென்று கூறப்படும். விளித்தல் - கூப்பிடுதல்.

முதல் வேற்றுமைக்குப் போலவே எட்டாம் வேற்றுமைக்கும் உரு பில்லை. ஆனால் முதல் வேற்றுமை இயல்பாயிருக்கும்; எட்டாம் வேற்றுமை விகாரப்படும். அவ் விகாரம் ஈறு திரிதல், ஈறு குன்றல், ஈறு மிகுதல், ஈற்றயல் திரிதல் எனப் பலவகை. இவ் விகாரங்களையே எட்டாம் வேற்றுமையுரு

பாகப் பாவிக்கலாம். ஒரே பெயர் ஒரு விகாரமன்றிப் பல விகாரங்களை யடை வதுமுண்டு. குன்றல் - குறைதல் அல்லது கெடுதல்.

உ-ம். பிள்ளா-! நாரா-! - ஈறு திரிதல்.
அரச! நண்ப - ஈறுகுன்றல்.
கடவுளே! தாயே! - ஈறு மிகுதுல்.
மக்காள்! அன்பர்காள்! - ஈற்றயல் திரிதல்.
அண்ணா! - ஈறு குன்றலும் அயல் திரிதலும்
அண்ணாவோ! - ஈறு குன்றலும், அயல் திரிதலும், ஈறுமிகுதலும்.

விளி **அண்மை விளி, சே-மை விளி** என இருவகைப்படும். அண்மை - சமீபம். சே-மை - தூரம். அண்மை விளி பெரும்பாலும் இயல்பாயிருக் கும். இஃது இயல்பு விளி யெனப்படும்.

உ-ம். தம்பி! சுந்தரம்!

சில விளிப்பெயர்கள் முதல் வேற்றுமைப் பெயர்களாகவே உலக வழக் கில் வழங்குகின்றன.

உ-ம். ஐயா, அப்பா.

**18. எட்டன் உருபே எ—துபெயரீற்றின்**
**திரிபு ஏன்றல் மிகுதல் இயல்பயல்**
**திரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்**
**தன்முக மாகத் தானழைப் பதுவே. (நன். சூ. 303)**

வேற்றுமை யுருபுகள் சில விடத்துத் தாக்கு (மறைந்து) வருவது முண்டு. அது வேற்றுமைத் தொகை எனப்படும்.

உ-ம். பாடம் படித்தான் - இரண்டாம் வேற்றுமைத் தொகை
கல்லெறிந்தான் - மூன்றாம் வேற்றுமைத் தொகை
ஊர் போனான் - நான்காம் வேற்றுமைத் தொகை
மலைவீழருவி - ஐந்தாம் வேற்றுமைத் தொகை
கபிலர் அகவல் - ஆறாம் வேற்றுமைத் தொகை
கூடு பா-ந்தான் - ஏழாம் வேற்றுமைத் தொகை

ஒரு வேற்றுமை யுருபு மற்றொரு வேற்றுமைப் பொருளில் வருவது முண்டு, அது வேற்றுமை மயக்கம் எனப்படும். மயக்கம் கூட்டம் அல்லது கலப்பு

உ-ம். சித்திரைக்கு வருவான் = சித்திரையில் வருவான். இதில் நான் காம் வேற்றுமையுருபு ஏழாம் வேற்றுமைப்பொருளில் வந்தது.

## அ. வேற்றுமைப் படும்போது வேறுபடும் பெயர்கள்

81. தன்மைப் பெயர்களும், முன்னிலைப் பெயர்களும், தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்களும் வேற்றுமையுருபேற்கும்போது வேறுபடும்.

82. தன்மைப் பெயர்களில் யான், நான் என்பவை என் என்றும், யாம் என்பது எம் என்றும், நாம் என்பது நம் என்றும், யாங்கள் நாங்கள் என்பன எங்கள் என்றும் திரியும்.

உ-ம். யான் +ஐ = என்னை,
நான் + ஐ = என்னை,
யாம் + ஐ = எம்மை
நாம் + ஐ = நம்மை.
யாங்கள் +ஐ = எங்களை
நாங்கள் + ஐ = எங்களை

பண்டைக்காலத்தில் நான் என்பது நன் என்றும், நாங்கள் என்பது, நங்கள் என்றும் திரிந்தன. பின்பு அத்திரிபு வழக்கற்றது. இப்போதும் நங் கள் என்பது செ-யுள் வழக்கிலுள்ளது.

83. முன்னிலைப் பெயர்களில் நீ என்பது நின் உன் என்றும், நீயிர் நீவிர் நீர் நீம் என்பன நும் உம் என்றும், நீங்கள் என்பது நுங்கள் உங்கள் என்றும் திரியும்.

உ-ம் . நீ + ஐ = நின்னை, உன்னை.
நீயிர் + ஐ
நீவிர் + ஐ = நும்மை, உம்மை.
நீர் + ஐ
நீம் + ஐ
நீங்கள் + ஐ = நுங்களை, உங்களை.

84. படர்க்கைப் பெயர்களில், தான் என்பது தன் என்றும், தாம் என் பது தம் என்றும், தாங்கள் என்பது தங்கள் என்றும் குறுகும்.

உ-ம். தான் + ஐ = தன்னை.
தாம் + ஐ = தம்மை.
தாங்கள் + ஐ = தங்களை

## வினைச்சொல்

85. வினைச்சொல், முற்று எச்சம் என இருவகைப்படும். இவை முறையே முற்றுவினை, எச்சவினை எனக் கூறப்படும்.

86. முற்றுவினையாவது முடிந்த பொருளையுடைய வினைச்சொல். முற்றுதல் - முடிதல்.

உ-ம் இராமன் வந்தான்.
மாடு மே-கிறது.
மழை பெ-யும்.

இவ் வாக்கியங்களுள் வந்தான், மே-கிறது, பெ-யும் என்னும் முற்று வினைகள் பிற சொல்லை வேண்டாது தாமே பொருள் முடிந்து நிற்றல் காண்க.

முற்றுவினை வினைமுற்றென்று மாற்றியுங் கூறப்படும்.

87. எச்சவினையாவது எஞ்சிய (குறைந்த) பொருளையுடைய வினைச் சொல். அது தானே பொருள் முடியாது, வேறொரு பெயரையாவது வினையை யாவது கொண்டு பொருள் முடியும். பெயரைக்கொண்டு முடிவது பெயரெச்ச மென்றும், வினையைக்கொண்டு முடிவது வினையெச்ச மென்றும் கூறப்படும்.

உ-ம். வந்த பையன் - பெயரெச்சம்
வந்து போனான் - வினையெச்சம்

வந்த என்பது பையன் என்னும் பெயரையும், வந்து என்பது போனான் என்னும் வினையையும் கொண்டு பொருள் முடிதல் காண்க.

88. வினைச்சொல் பகுதி, விகுதி, சந்தி, சாரியை, இடைநிலை, விகாரம் என்னும் ஆறுறுப்புகளை ஏற்றுவரும். அவற்றுள் பகுதி, விகுதி, இடை நிலை என்னும் மூன்றும் முக்கியமானவை.

பகுதி எப்போதும் முதலில் இருக்கும். அதனால் முதனிலையென்று கூறப்படும். விகுதி எப்போதும் இறுதி (கடைசி)யில் இருக்கும். அதனால் இறுதிநிலை யென்று கூறப்படும். இடைநிலை எப்போதும் அவ் விரண்டிற் கும் இடையிலிருக்கும்.

ஒரு வினைச்சொல்லில், பகுதி வினையையும் இடைநிலை காலத்தை யும், விகுதி திணை பால் எண் இடங்களையும் எச்சத்தையுங் காட்டும்.

உ-ம். செ-கிறான். இதில் செ- என்பது வினையையும், கிறு என்பது (நிகழ்) காலத்தையும், ஆன் என்பது திணைபால் எண் இடங் களையும் காட்டினமை காண்க.

செ-து, என்பதில் உ என்னும் விகுதி எச்சத்தைக் காட்டிற்று.

## பகுதி

89. வினைப் பகுதிகள் பெருபாலும் ஏவலொருமை வடிவா- நின் றும், சிறுபான்மை திரிந்து நின்றும் வினையை யுணர்த்தும்.

உ-ம். ***திரியாதன:***

| **ஏவலொருமை** | **வினைப்பகுபதம்** |
|---|---|
| நட | நடந்தான், நடக்கிறான், நடப்பான் |
| போ | போனான், போகிறான், போவான் |
| இரு | இருந்தான், இருக்கிறான், இருப்பான் |
| படி | படித்தான், படிக்கிறான் படிப்பான் |
| எழு | எழுந்தான், எழுகிறான், எழுவான். |

***திரிவன:***

| **ஏவலொருமை** | **வினைப்பகுபதம்** |
|---|---|
| வா | வந்தான், வருகிறான், வருவான் |
| தா | தந்தான், தருகிறான், தருவான் |
| காண் | கண்டான், காண்கிறான், காண்பான் |
| நொ | நொந்தான், நோகிறான், நோவான் |
| சா | செத்தான், சாகிறான், சாவான் |

## விகுதி

90. வினைமுற்று விகுதிகள் திணை, பால், எண், இடம் என்பவற்றைக் காட்டும்.

91. தன்மை வினைமுற்று விகுதிகளும், முன்னிலை வினைமுற்று விகுதிகளும் எண் இடம் என்ற இரண்டையுமே காட்டும். படர்க்கை வினை முற்று விகுதிகளே திணை, பால், எண், இடம் என்ற நான்கையும் காட்டும்.

தன்மை முன்னிலைப் பெயர்களைப் போலவே தன்மை முன்னிலை வினைகளும் இருதிணைக்கும் பொதுவாம்.

## தன்மை வினைமுற்று விகுதிகள்

92. அல், அன், என், ஏன் என்பன தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகளாகும்.

உ-ம். வருவல், வருவன், வந்தனென், வந்தேன்.
படிப்பல், படிப்பன், படித்தனென், படிப்பேன்.

93. அம், ஆம், எம், ஏம், ஓம் என்பன தன்மைப் பன்மை வினை முற்று விகுதிகளாகும்.

உ-ம். செ-தனம், செ-வாம், செ-கின்றனெம், கூறினேம், கூறினோம்.

## *முன்னிலை வினைமுற்று விகுதிகள்*

94. ஐ, ஆ-, தி என்பன முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி களாகும்.

உ-ம். உண்டனை, உண்டா-, உண்ணுதி,
வந்தை, வருகின்றா-, வருதி.

95. இர், ஈர், கள், என்பன முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி களாகும். அவற்றுள் கள் என்பது விகுதிமேல் விகுதியா- வரும்.

உ-ம். செ-தனிர், செ-தீர், செ-தீர்கள்.
நடந்தனிர், நடக்கின்றீர், நடப்பீர்கள்.

96. ஏவல் வினைகளில், ஒருமை ஏவல் விகுதி பெறாதும் 'தி' விகுதி பெற்றும் வரும்; பன்மை ஏவல் மின், உம், கள் என்னும் விகுதிகளைப் பெற்று வரும். அவற்றுள் கள் என்பது விகுதிமேல் விகுதியா- வரும்.

உ-ம். வா, வருதி - ஒருமை.
வம்மின், போமின்.
செ-யும், செ-யுங்கள். } - பன்மை

## *படர்க்கை வினைமுற்று விகுதிகள்*

97. அன், ஆன் என்பன உயர்திணை ஆண்பாற் படர்க்கை வினை முற்று விகுதிகளாகும்.

உ-ம். படித்தனன், படிக்கின்றான்.

98. அள், ஆள் என்பன உயர்திணைப் பெண்பாற் படர்க்கை விகுதிகள்.

உ-ம். படித்தனள், படிக்கின்றாள்.

99. அர், ஆர், ப என்பன உயர்திணைப் பலர்பாற் படர்க்கை விகுதி கள். ஆர் விகுதியோடு கள் என்பது விகுதிமேல் விகுதியா- வரும்.

உ-ம். படித்தனர், படிக்கின்றார், படிப்ப.
கூறினர், கூறினார், கூறுப.
படிக்கின்றார்கள்.

100. து, று, டு என்பன அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை விகுதிகள்.

உ-ம். வந்தது, ஆயிற்று, உண்டு.

101. அ, ஆ என்பன அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை விகுதிக ளாகும். ‘அ’ என்பது உடன்பாட்டிலும், ‘ஆ’ என்பது எதிர்மறையிலும் வரும்.

உ-ம். உண்ணுகின்றன - உடன்பாடு.
உண்ணா - எதிர்மறை.

## இடைநிலை

102. இடைநிலைகள் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலங் காட்டும்.

103. காலம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைப்படும்.

இறந்தகாலம் - முன்னே கடந்துபோன காலம். நிகழ்காலம் இப்போது நடக்கின்ற காலம். எதிர்காலம் - இனிமேல் வருங்காலம். இறத்தல் - கடத்தல். நிகழ்தல் - நடத்தல்.

**19. இறப்பெதிர்வு நிகழ்வெனக் காலம் மூன்றே. (நன். சூ. 382)**

## இறந்தகால இடைநிலைகள்

104. த், ட், ற், இன் என்பன இறந்தகால இடைநிலைகளாம்.

உ-ம். த் - படித்தான் ற் - சென்றான்.
ட் - உண்டான் இன் - உறங்கினான்.

இன் என்னும் இடைநிலை ன் என முதல் குறைந்தும், இ எனக் கடை குறைந்தும் நிற்கும்.

உ-ம். போனான் - போ + ன் + ஆன்
சொல்லியது - சொல் + இ + அ + து

**20. தடறவொற் றின்னே ஐம்பால் மூவிடத்**
**திறந்த காலம் தரும்தொழி லிடைநிலை. (நன். சூ. 142)**

இனி, - என்பதும் ஒர் இறந்தகால இடைநிலை யாகும்.

உ-ம். போயது - போ + - + அ + து.

சில வினைகள் இடைநிலை பெருமற் பகுதி யிரட்டித்து இறந்தகாலங் காட்டும்.

உ-ம். புகு - புக்கான் சுடு - சுட்டான் அறு - அற்றான்.

புகு என்பது புகுந்தான் என்று த் இடைநிலை பெற்றும் இறந்தகாலங் காட்டும்.

## *நிகழ்கால இடைநிலைகள்*

105. கிறு, கின்று, ஆதின்று என்பன நிகழ்கால இடைநிலைகள்.

உ-ம். உண்கிறான், உண்கின்றான், உண்ணாநின்றான்.

உண்ணாநின்றான் என்பது உண்டு நின்றான் என்றும், உண்ணாமல் நின்றான் என்றும் பொருள்படும்போது நிகழ்கால வினைமுற்றாகாது. அது உண்ணா என்னும் எச்சமும், நின்றான் என்னும் வினைமுற்றும் சேர்ந்த தொடர்மொழியாகும். உண், ஆநின்று, ஆன் எனப் பிரிந்து, உண்கின்றான் எனப் பொருள்படும்போதே நிகழ்கால வினைமுற்றாகிய தனிமொழியாகும். ஆநின்று என்னும் இடைநிலை உலகவழக்கில் வராது.

**21. ஆநின் று கின் று கிறுமூ விடத்தின்**
**ஐம்பால் நிகழ்பொழு தறைவினை இடைநிலை. (நன். சூ. 143)**

## *எதிர்கால இடைநிலைகள்*

106. ப், வ் என்பன எதிர்கால இடைநிலைகள்.

உ-ம். படிப்பான், உண்பான் - ப்
போவான், வருவான் - வ்

**22. ப, வ மூவிடத் தைம்பால் எதிர்பொழு**
**திசைவினை இடைநிலை யாமிவை சிலவில. (நன். சூ. 144)**

சில வினைகள் விகுதியால் எதிர்காலங் காட்டும்.

உ-ம். கூறுப (கூறுவார்)-ப வரும் - உம்

ஏவல் வினைகள் எந்த உறுப்பினாலும் காலங் காட்டுவதில்லை. ஆனால், ஏவின வினைகளெல்லாம் ஏவினபிறகே செ-யப்படுவதால், ஏவல் வினைகளெல்லாம் எதிர்காலமென் றறியப்படும்.

## *தன்வினை, பிறவினை*

107. வினைகளெல்லாம் கருத்தாப்பற்றித் தன்வினை, பிறவினை என இருவகைப்படும்.

108. தன்வினையாவது ஒருவன் தானே செ-யும் வினை.

உ-ம். வந்தான், சென்றான்.

109. பிறவினையாவது ஒருவன் பிறனைக்கொண்டு செ-விக்கும் வினை.

உ-ம். வருவித்தான், செலுத்தினான்.
தன்வினையிலிருந்தே பிறவினை யுண்டாகும்.

## *தன்வினை பிறவினையாகும் வகைகள்*

(1) **விகுதிப்பேறு:** சில தன்வினைகள் வி, பி, சு, து என்ற விகுதிகளில் ஒன்றைப் பெற்றுப் பிறவினையாகும்.

உ-ம். வி - வருவி, தருவி, எழுதுவி.
பி - உண்பி.
சு - பா-ச்சு, கா-ச்சு.
து - (புகு + து) புகுத்து.
து - (உருள் + து) உருட்டு.
து - (பயில் + து) பயிற்று.

(2). ***வலியிரட்டல்:*** சில தன்வினைகள் வல்லெழுத்து இரட்டித்துப் பிற வினையாகும்.

உ-ம். போகு - போக்கு. பழகு - பழக்கு.
(போகு - பகுதி)
ஆடு - ஆட்டு. ஆடு - ஆற்று.
உருகு - உருக்கு. தேறு - தேற்று.

(3) ***பகுதி வலித்தல்:*** சில தன்வினைகள் வலித்தல் விகாரத்தால் பிறவினையாகும். வலித்தல், மெல்லினம் வல்லினமாதல்.

உ-ம். கலங்கு - கலக்கு.எழும்பு - எழுப்பு.ஈண்டு - ஈட்டு.
பொருந்து - பொருத்து. தோன்று - தோற்று.

தோற்று என்பது இக்காலத்தில் பிறவினைப் பொருளிழந்து தன்வினை யாகவே வழங்குகின்றது.

(4).**இடைநிலை வலித்தல்:** சில வினைகள் பகுதியளவில் இருவினை க்கும் பொதுவாதலின், இடைநிலை வலித்துப் பிறவினையாகும்.

இடைநிலை யென்றது இடையிலிருக்கும் எழுத்தை.

உ-ம். ***இறந்தகாலம்:***

தே-ந்தான் - தே-த்தான்.
குறைந்தான் - குறைத்தான். } சந்தி வலித்தல்
அழிந்தான் - அழித்தான்.

***நிகழ்காலம்:***

கெடுகிறான் - கெடுக்கிறான் - வலிமிகல்.

***எதிர்காலம்:***

ஒழிவான் - ஒழிப்பான் - வலிமிகலும் இடைநிலை வலித்தலும்.

(5) ***பிறவினைப் பொருள்:*** சில வினைகள் எல்லா வடிவிலும் தன் வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாயிருத்தலால். பிறவினைப் பொரு ளாலேயே பிறவினை என்று அறியப்படும்.

| | ***தன்வினை*** | ***பிறவினை*** |
|---|---|---|
| உ-ம். | விறகு பிளந்தது. | விறகைப் பிளந்தான். |
| | கதவு திறந்தது. | கதவைத் திறந்தான். |
| | துணி வெளுத்தது. | துணியை வெளுத்தான். |

உலக வழக்கில் சில தன்வினைகளில் எச்சத்தோடு செ-, வை முத லிய துணை வினைகளைச் சேர்த்துப் பிறவினையாக வழங்குவர்.

உ-ம்.

படி - படிக்கச்செ-
படிக்கப்பண்
படிக்கச்சொல் } நிகழ்கால வினையெச்சமும் துணை வினையும்
படிக்கவை
படிக்கப்போடு
படித்துக்கொடு - இறந்தகால வினையெச்சமும் துணை வினையும்.

## *14. பெயரெச்சமும் வினையெச்சமும்*

110. எச்சவினை **பெயரெச்சம், வினையெச்சம்** என இருவகைப்படும். பெயரைத் தழுவுவது பெயரெச்சம். வினையைத் தழுவுவது வினையெச்சம்.

உ-ம். வந்த பையன் - வந்த பெயரெச்சம்.
வந்து போனான் - வந்து வினையெச்சம்.

111. **பெயரெச்சம்:** பெயர் எஞ்ச நிற்பது அல்லது பெயராகிய எச்சத்தை யுடையது பெயரெச்சம். அது காலம்பற்றி இறந்தகாலப் பெயரெச்சம், நிகழ் காலப் பெயரெச்சம், எதிர்காலப் பெயரெச்சம் என மூவகைப் படும். எஞ்சுதல் - குறைதல்.

112. செ-த, செ-கின்ற, செ-யும் என்பவை முறையே முக்காலப் பெயரெச்ச வா-பாடுகளாகும். வா-பாடு - மாதிரி அல்லது வடிவம். செ-கின்ற என்பது செ-கிற என்று மிருக்கும்.

| உ-ம். | ***இ.கா.பெயரெச்சம்*** | ***நி.கா.பெயரெச்சம்*** | ***எ.கா. பெயரெச்சம்*** |
|---|---|---|---|
| | செ-த | செ-கின்ற | செ-யும் |
| | படித்த | படிக்கின்ற | படிக்கும் |
| | உண்ட | உண்கின்ற | உண்ணும் |
| | நடந்த | நடக்கின்ற | நடக்கும் |

இறந்தகாலப் பெயரெச்சத்திற்கும், நிகழ்காலப் பெயரெச்சத்திற்கும் ‘அ’ விகுதி; எதிர்காலப் பெயரெச்சத்திற்கு ‘உம்’ விகுதி.

113. பெயரெச்சங்களில் பகுதி வினையையும், இடைநிலை காலத்தை யும், விகுதி எச்சத்தையு முணர்த்தும். வினைமுற்று விகுதிபோல் பெய ரெச்ச விகுதி திணை பாலிடங் காட்டுவதில்லை. எதிர்காலப் பெயரெச்சத் திற்கு இடைநிலை யின்மையால் அதன் விகுதியே காலங் காட்டும்.

உ-ம். செ-த - செ- பகுதி வினை யுணர்த்திற்று. த் இடைநிலை கால முணர்த்திற்று. அ விகுதி எச்ச முணர்த்திற்று.
செ-யும் - உம் விகுதி எச்சத்தையும் காலத்தையு முணர்த்திற்று.

114. பெயரெச்சம் **செ-பவன், கருவி, நிலம், செயல், காலம், செ-பொருள்** என்னும் அறுவகைப் பெயர்களையும் தழுவிவரும்.

உ-ம். வனைந்த குயவன் - செ-பவன்
வனைந்த மண் - கருவி

வனைந்த கூடம் - நிலம்
வனைந்த வனைவு - செயல்
வனைந்த வேளை - காலம்
வனைந்த குடம் - செ-பொருள்

**23.** **செ—த செ—கின்ற செ—யும்என் பாட்டில்**
**காலமும் செயலும் தோன்றிப் பாலொடு**
**செ—வ தாதி அறுபொருட் பெயருள்**
**எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே. (நன். சூ. 340)**

115. ***வினையெச்சம்:*** வினையெஞ்ச நிற்பது அல்லது வினையாகிய எச்சத்தை யுடையது வினையெச்சம்.

வினையெச்சமும் காலம்பற்றி இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என மூவகைப்படும்.

116. செ-து, செ-ய, செ-யின் என்பவை முறையே முக்கால வினை யெச்ச வா-பாடுகளாகும்.

உ, இ, - என்பன இறந்தகால வினையெச்ச விகுதிகள்; அ என்பது நிகழ்கால வினையெச்ச விகுதி; இன் என்பது எதிர்கால வினையெச்ச விகுதி.

இறந்தகால வினையெச்ச விகுதிகள் பலவாயிருப்பினும், செ-து என்னும் வா-பாடு அவை யெல்லாவற்றையுங் குறிக்கும்.

| | ***இறந்தகாலம்*** | ***நிகழ்காலம்*** | ***எதிர்காலம்*** |
|---|---|---|---|
| உ-ம். | செ-து | செ-ய | செ-யின் |
| | படித்து | படிக்க | படிக்கின் |
| | ஓடி | ஓட | ஓடின் |
| | போ- | போக | போகின் |

இறந்தகாலப் பெயரெச்சத்தோடும் இறந்தகால வினையெச்சத்தோடும் சில சொல்லும் அசையும் சேர்ந்து எதிர்கால வினையெச்சமாவது முண்டு.

உ-ம். செ-தக்கால் } இறந்தகாலப் பெயரெச்சமும் சொல்லும்.
செ-தவிடத்து }
செ-தால் (செ-து + ஆல், இறந்தகால வினையெச்சமும் அசையும்.

117. வினையெச்சத்தில் பகுதி வினையையும், இடைநிலை காலத்தை யும், விகுதி எச்சத்தையு முணர்த்தும். இடைநிலை இல்லாவிடத்து விகுதியே காலமுணர்த்தும்.

வினையெச்ச விகுதிகளும் திணை, பால், எண் இடங் காட்டா.

உ-ம். **இறந்தகாலம்:**

வந்து - **வா** பகுதி வினையுணர்த்திற்று:
**த்** இடைநிலை கால முணர்த்திற்று;
**உ** விகுதி எச்ச முணர்த்திற்று.

போ- - **போ** பகுதி வினையுணர்த்திற்று;
**–** விகுதி எச்சமும் காலமும் உணர்த்திற்று:

**நிகழ்காலம்:**

உண்ண - **உண்** பகுதி வினையுணர்த்திற்று.
**அ** விகுதி எச்சமும் காலமும் உணர்த்திற்று.

**எதிர்காலம்:**

உண்ணின் - **உண்** பகுதி வினையுணர்த்திற்று.
**இன்** விகுதி எச்சமும் காலமுணர்த்திற்று.

118. வினையெச்சம் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், தொழிற் பெயர், வினையாலணையும் பெயர் என்னும் ஐவகைச் சொற்களிலுமுள்ள வினைகளைக் கொண்டு முடியும்.

உ-ம்.

| | |
|---|---|
| வந்து சென்றான்<br>வந்து செல் | வினைமுற்றைக் கொண்டு முடிந்தது. |
| வந்து சென்ற - | பெயரெச்சத்தைக் கொண்டு முடிந்தது. |
| வந்து சென்று - | வினையெச்சைத்தைக் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது. |
| வந்து செல்லல் - | தொழிற்பெயரைக் கொண்டு முடிந்தது. |
| வந்து சென்றான் அல்லது சென்றவன் | வினையாலணையும் பெயரைக் கொண்டு முடிந்தது. |

**24. தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை**
**ஒழிய நிற்பது வினையெச் சம்மே. (நன். சூ. 342)**

## *எதிர்மறைப் பெயரெச்சம், எதிர்மறை வினையெச்சம்*

119. வினைச்சொல் உடன்பாடு, எதிர்மறை என இருவகைப்படும். ஒருவினை நிகழ்ச்சியை, உண்டு என உடன்படுவது உடன்பாட்டுவினை; இல்லை என எதிர்மறுப்பது எதிர்மறைவினை.

உடன்பாட்டுவினை ஒன்றை விதித்தலின், விதிவினை யென்றும் எதிர் மறைவினை ஒன்றை விலக்குதலின், விலக்குவினை யென்றுங் கூறப்படும்.

உ-ம். வந்தான், சென்றான் - உடன்பாட்டுவினை.
வந்திலன், வரவில்லை, வரான் - எதிர்மறைவினை.

முற்றுவினையைப் போலவே எச்சவினையும், உடன்பாடாகவும் எதிர் மறையாகவு மிருக்கும். உடன்பாட்டுப் பெயரெச்சமும் உடன்பாட்டு வினை யெச்சமும் முன்னர்க் கூறப்பட்டன. இங்கு எதிர்மறைப் பெயரெச்சமும் எதிர்மறை வினையெச்சமுங் கூறப்படும்,

120. ***எதிர்மறைப் பெயரெச்சம்:*** ஒரு வினை நிகழ்ச்சியின் உண்மையை, மறுக்கும் அல்லது இன்மையை உணர்த்தும் பெயரெச்சம் எதிர்மறைப் பெயரெச்சம். அது ‘ஆ’ என்னும் இடைநிலையைப் பெற்று வரும். அஃது எதிர்மறை இடைநிலை எனப்படும்.

உ-ம். காணாத (காட்சி) - காண் பகுதி; ஆ எதிர்மறை இடை நிலை; த் எழுத்துப்பேறு; அ பெயரெச்ச விகுதி.
படியாத (மனிதன்) - படி பகுதி; ஆ எதிர்மறை இடை நிலை; த் எழுத்துப்பேறு; அ பெயரெச்ச விகுதி.

121. எதிர்மறைப் பெயரெச்சம் ஈறு கெட்டு வருவது முண்டு. அஃது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்ச மெனப்படும்.

உ-ம். உண்ணாக் குதிரை, பறவாக் கொக்கு } - த என்னும் ஈறு கெட்டது.

122. ***எதிர்மறை வினையெச்சம்:*** ஒருவினை நிகழ்ச்சியின் உண்மையை மறுக்கும் அல்லது இன்மையை உணர்த்தும் வினையெச்சம், எதிர்மறை வினையெச்சம். அஃது ஆ என்னும் இடைநிலையையும், து, மல், மே, மை என்னும் விகுதிகளில் ஒன்றையும் பெற்றுவரும்.

உ-ம். உண்ணாது (வந்தான்) - து
உண்ணாமல் (வந்தான்) - மல்
உண்ணாமே (வந்தான்) - மே
உண்ணாமை (வந்தான்) - மை

123. எதிர்மறை வினையெச்சம் ஈறு கெட்டுவரின் ஈறுகெட்ட எதிர் மறை வினையெச்ச மெனப்படும்.

உ-ம். உண்ணாச் சென்றான் - உண்ணாது சென்றான்; து என்னும் விகுதி கெட்டது.

## இடைச்சொல்

124. இடைச்சொல் என்பன பெரும்பாலும் தனித்து வராமல், பெயரையும் வினையையும் அகத்துறுப்பாகவும் புறத்துறுப்பாகவும் சார்ந்துவரும் பல வகைச் சொற்கள்.

பெயரிடத்தும் வினையிடத்தும் வருவதால் இடைச்சொல் எனப் பட்டது, இடை - இடம்.

இடைச்சொற்கள் எழுத்து அசை, சொல் என்னும் மூவகையாக இருக்கும்.

125. வேற்றுமை யுருபுகளும், பகுதி யொழிந்த பகுபதவுறுப்பு களும், உவமையுருபுகளும், சுட்டெழுத்துகளும், வினாவெழுத்து களும், பல்வகைக் குறிப்புகளும், இசைநிறையும், அசைநிலையும், இரட் டைக்கிளவியும், பிறவும் இடைச்சொற்களாம்.

உ-ம். **வேற்றுமை யுருபுகள்** - ஐ, ஆல், முதலியன.
பகுதி யொழிந்த பகுபத வுறுப்புகள்:
**விகுதி** - அன், ஆன் முதலியன.
**சந்தி** - பகுதியும் பிற வுறுப்பும் புணரும்போது இடையில் தோன்றும் எழுத்துகள்.

***சாரியை.*** i. எழுத்துச் சாரியை - கரம் காரம் முதலியன.
ii. சொற்சாரியை - அத்து, அம் முதலியன.

***இடைநிலை*** i. பெயரிடைநிலை - ச், ஞ் முதலியன.
ii. வினையிடைநிலை - த், ட் முதலியன.

**விகாரம்** - பகுதியின் விகராம்.
**உவமை உருபுகள்** - போல, புரைய முதலியன.
**சுட்டெழுத்துகள்** - அ, இ, உ என்பன.
**வினாவெழுத்துகள்** - ஆ, எ, ஏ, ஓ, யா என்பன.
***பல்வகைக் குறிப்புகள்:***
ஒலிக் குறிப்பு - ஒல், கொல், கலீர், சோ முதலியன.
பண்புக் குறிப்பு - வெளேர், கரேர் முதலியன.
அச்சக் குறிப்பு - துண், திடுக்கு முதலியன.
இரக்கக் குறிப்பு - ஐயோ, அந்தோ முதலியன.
வியப்புக் குறிப்பு - அம்மா, ஆகா முதலியன.

**இசைநிறை** - செ-யுளில் இசைநிறைக்க வரும் ஏ முதலியன.

**அசைநிலை** - i. செ-யுளில் இசைநிறைக்க வரும் மற்று ஏ முதலிய அசைச்சொற்கள்.

ii. ஆம், ஆம், நல்லது நல்லது என உலக வழக்கில் வரும் அசைநிலைகள்.

**இரட்டைக்கிளவி** - கலகல, மடமட முதலியன.

இனி, தனித்து வந்து தத்தம் பொருளை யுணர்த்தும் இடைச்சொற்கள் தான், மற்று, பிற, என, என்று முதலியன.

## உரிச்சொல்

126. உரிச்சொல் செ-யுட்கே யுரித்தா- இடம்நோக்கிப் பொருளுணரப் படும் அருஞ் சொல்லாகும்.

உ-ம். கழிநெடில் - கழி = மிக.
கடிவினை - கடி = திருமணம்.
தடந்தோள் - தடம் = பெருமை.
வயவேந்தர் - வயம் = வெற்றி.

# புணரியல்

127. சொற்கள் ஒன்றோடொன்று புணர்வது புணர்ச்சியாகும். புணர் தல் - பொருந்துதல்.

புணர்ச்சி வடமொழியில் சந்தி எனப்படும்.

128. புணர்கின்ற இரு சொற்களில் முந்தினது நிலைமொழி யென்றும், பிந்தினது வருமொழி யென்றுங் கூறப்படும்.

முதலாவது நிற்கின்ற மொழி நிலைமொழி. இரண்டாவது அதனொடு கூட வருகின்றமொழி வருமொழி.

உ-ம். இராமண் வந்தான் - இராமன் - நிலைமொழி.
வந்தான் - வருமொழி.

129. புணர்ச்சி இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இருவகைப்படும்.

130. இயல்பு புணர்ச்சியாவது யாதொரு விகாரமுமின்றி இயல்பாகப் புணர்தல்.

உ-ம். இராமன் + வந்தான் = இராமன் வந்தான்.
கடவுள் + இருக்கிறார் = கடவு ளிருக்கிறார்.

உயிரும் மெ-யும் சேர்ந்து உயிர்மெ-யாவது இயல்பாதலின், விகார மாகாது.

**25. விகார மனைத்து மேவல தியல்பே. (நன். சூ. 153)**

131. விகராப் புணர்ச்சியாவது ஏதேனுமோர் விகாரந் தோன்றப் புணர் தல். அவ் விகராம் தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும். விகா ரம் - வேறுபாடு.

தோன்றல் என்பது, ஏதேனுமோர் எழுத்து அல்லது அசை புதிதாகத் தோன்றுதல்.

உ-ம். வாழை + கா- = வாழைக்கா- - எழுத்துத் தோன்றல்.
புளி + பழம் = புளியம்பழம் - அசை தோன்றல்.

தோன்றல் விகாரமே பகுபதத்திற் சந்தி யெனப்படும்.

திரிதல் என்பது ஏதேனுமோர் எழுத்து இன்னோரெழுத்தாகத் திரிதல். திரிதல் - மாறுதல்.

உ-ம். பல் + பொடி = பற்பொடி.

கெடுதல் என்பது முன்னுள்ள எழுத்து, கெடுதல்.

உ-ம். அறம் + வினை = அறவினை.

ஒரே புணர்ச்சியில் பல விகாரங்கள் வருவது முண்டு.

உ-ம். பனை + கா- = பனங்கா-. இதில் நிலைமொழியீற்று ஐகாரங் கெட்டு அம் சாரியை தோன்றி, அதன் ஈற்று மகரம் ஙகரமாகத் திரிந்தது.

**26. தோன்றல், திரிதல், கெடுதல், விகாரம்
மூன்றும் மொழிமூ விடத்து மாகும். (நன். சூ. 154)**

## 1. இயல்பு புணர்ச்சி

i. வினாவின் முன்னும் விளிப்பெயர் முன்னும் வல்லினம்.

132. நிலைமொழி யீற்றிலுள்ள ஆ, ஏ, ஓ என்னும் வினாவெழுத்து களுக்கும் யா என்னும் வினாப்பெயருக்கும், எல்லா விளிப்பெயர்களுக் கும் முன், வருமொழி முதலில் வலிவரின் இயல்பாம்.

யா = யாவை. வலி = வல்லினம்.

***ஈற்றுவினாமுன் வலி***

உ-ம். இராமனா + தந்தான் = இராமனா தந்தான்?
அவனோ + கண்டான் = அவனோ கண்டான்?
நீயே + சொன்னாய் = நீயே சொன்னாய்?

***யா வினாமுன் வலி***

யா + கொடிய = யா கொடிய?

***விளிப்பெயர்முன் வலி***

மகனே + சொல் = மகனே சொல்
அண்ணா + போ = அண்ணா போ.

**27. ஈற்றியா வினாவிளிப் பெயர்முன்வலி இயல்பே. (நன். சூ. 201)**

### ii. இடைச்சொல் ஏ, ஒ முன் வல்லினம்

133. ஏ, ஒ என்னும் இடைச்சொற்கள் முன் வலிவரின் இயல்பாம்.

இராமனே + கண்டான் = இராமனே கண்டான்.
நானோ + படித்தேன் = நானோ படித்தேன்.

இங்குக் காட்டப்பெற்ற ஏகார ஒகாரங்கள் பிரிநிலைப் பொருளில் வந்துள்ளன; ஆகையால் வினாவெழுத்துக ளாகா.

**28. இடைச்சொல் ஏ ஓ முன்வா னியல்பே. (நன். சூ. 201)**

### iii. மெய்யீற்றின் முன் உயிர்

134. நிலைமொழி யீற்றிலுள்ள மெய்யோடு வருமொழி முதலிலுள்ள உயிர் வந்து கூடி உயிர்மெய்யாவது இயல்பே.

இராமன் + இல்லை = இராமனில்லை.
பால் + இனிமை = பாலினிமை.

மெய்யோடு உயிர்சேரின் உயிர்மெய்யாகும்.

**29. உடல்மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே. (நன். சூ. 204)**

## 2. விகாரப் புணர்ச்சி

### i. மிகுதல்

***(i) உயிர்முன் உயிர்:***

135. உயிரோடு உயிர் (அதாவது நிலைமொழி யீற்றிலுள்ள உயிரும் வருமொழி முதலிலுள்ள உயிரும்) புணரும்போது, நிலைமொழியீற்று இ,

ஈ, ஐ முன் ‑ என்பதும், ஏனை யுயிர்முன் வ் என்பதும், ஏகாரத்தின்முன் ‑, வ் இரண்டும் உடம்படுமெ‑யாகும்.

ஏனை = மற்ற. உடம்படுமெ‑ = தாமாகச் சேராத ஈருயிரெழுத்து களை உடம்படுத்தும் (இசைக்கும்) மெ‑.

உ‑ம்.
துணி + அளவு = துணியளவு
தீ + எரி = தீயெரி
தலை + அணை = தலையணை
} இ, ஈ, ஐ முன் ‑

பல + ஊர் = பலவூர்
பா + இனம் = பாவினம்
திரு + அடி = திருவடி
பூ + அழகு = பூவழகு
கோ + ஆணை = கோவாணை
கௌ + இழிவு = கௌவிழிவு
} ஏனையுயிர் முன் வ்

இங்கே + இரு = இங்கேயிரு
சே + அடி = சேவடி.
} ஏ முன் ‑, வ்

**30. இ ஈ ஐவழி யவ்வும் ஏனை**
**உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்**
**உயிர்வரின் உடம்படு மெ—யென் றாகும். (நன். சூ. 162)**

## *(ii) உயிர்முன் வல்லினம்*

136. இயல்பாகவாவது விதியாகவாவது நிலைமொழியீற்றிலுள்ள உயிர்முன், வருமொழி முதலிலுள்ள க, ச, த, ப என்னும் வல்லினமெ‑கள் பெரும்பாலும் மிகும்.

சொற்களின் ஈறு இயல்பீறு, விதியீறு என இருவகைப்படும். இயல் பாயுள்ள ஈறு இயல்பீறு. புணர்ச்சி விகாரத்தால் வந்த ஈறு விதியீறு.

உ‑ம்.
நான் ‑ ன் இயல்பீறு,
நான் (முகன்) ‑ ன் விதியீறு; ல் ன் ஆகத் திரிந்தது.
மற ‑ அ இயல்பீறு.
மற(வாள்) ‑ அ விதியீறு. மறம் என்பதில் ம் கெட்டது.

ட, ற என்னும் மெ‑கள் மொழிமுதல் வராமையின் க, ச, த, ப எனக் கூறப்பட்டன.

உ-ம். பலா + கா- = பலாக்கா-
உண்ண + போனான் = உண்ணப்போனான் } இயல்புயிரீற்றின் முன் வலி மிக்கது.

மரம்(ம்) + குலம் = மரக்குலம்
பண்டை + காலம் = பண்டைக்காலம். } விதியுயிரீற்றின் முன் வலி மிக்கது.

**31. இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்**
**கசதப மிகும்வித வாதன மன்னே. (நன். சூ. 165)**

### *(3) பூமுன் வல்லினம்*

137. பூ என்னும் பெயர்முன் வரும் வலி மிகும். அதோடு அதன் இன மெல்லினமுந் தோன்றும். இனமெல்லினந் தோன்றல் பெரும்பான்மை.

உ-ம். பூ + கொல்லை = பூக்கொல்லை
பூ +கடை = பூக்கடை } வலிமிகல்
பூ + தோட்டம் = பூந்தோட்டம்
பூ + செடி = பூஞ்செடி
பூ + குழல்= பூங்குழல் } இன மெல்லினர் தோன்றல்
பூ + பாவை= பூம்பாவை

**32. பூப்பெயர் முன்இன மென்மையுந் தோன்றும். (நன். சூ. 200)**

### *(4) தனிக்குறிலடுத்த மெ––யின் முன் உயிர்*

138. தனிக்குறிலை யடுத்த மெ-, வருமொழி முதலில் உயிர்வரின் இரட்டும்.

இரட்டுதல் - இரட்டித்தல்.

உ-ம். கண் + ஓட்டம் = கண்ணோட்டம்
சொல் + அழகு = சொல்லழகு

நிலைமொழியீற்று மெ- மிகுவது இரட்டித்தல் என்றும், வருமொழி மெ- மிகுதல் என்றும் கூறப்படும்.

**33. தனிக்குறில் முன்னொற் றுயிர்வரின் இரட்டும். (நன். சூ. 205)**

### *(5) னகரச் சாரியை தோன்றல்*

139. ஆ, மா, கோ என்னும் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும் போது இயல்பா- நிற்கவும் னகரச் சாரியை தோன்றவும் பெறும்.

ஆ = பசு. மா = விலங்கு, குதிரை, மான். கோ = அரசன்

உ-ம். ஆ + ஐ = ஆவை, ஆனை
மா + ஐ = மாவை, மானை } இயல்பும் னகரச் சாரியைப் பேறும்.
கோ + ஐ = கோவை, கோனை

இனி, புணர்ச்சியிலன்றித் தனிமொழியா யிருக்கும்போதும், ஆ, மா, கோ என்னும் பெயர்கள் ஆன், கோன், மான் என னகரச் சாரியை பெற்று நிற்கும்.

**34. ஆமா கோனவ் வணையவும் பெறுமே. (நன். சூ. 248)**

சூத்திரத்தில் ஆமா என்பது இரட்டுறலா யிருத்தலால் ஆமா என்னும் காட்டுப்பசுப் பேரும் கொள்ளப்படும்.

உ-ம். புணர்மொழி - ஆமா + ஐ = ஆமாவை, ஆமானை.
தனிமொழி - ஆமான்.

## ii. கெடுதலும் திரிதலும்

குற்றிய லுகரத்தின் முன்னும் சில முற்றிய லுகரத்தின் முன்னும் உயிரும் யகரமும் புணர்தல்.

140. குற்றியலுகரம் வருமொழி முதலில் உயிர்வரின் கெடும்; யகரம் வரின் இகரமாகத் திரியும். முற்றியலுகரம் சிறுபான்மை இவ்விரு விகாரங்களையும் அடையும்,

உ-ம். வரகு + அரிசி = வரகரிசி
காடு + அடர்ந்தது = காடடர்ந்தது } குற்றியலுகரம் கெட்டது.
வரகு + யாது = வரகியாது
காடு + யாங்கு = காடியாங்கு } குற்றியலுகரம் இகரமாகத் திரிந்தது.

கதவு + அடை = கதவடை
அது + ஐ = அதை } முற்றியலுகரம் கெட்டது.
கதவு + யாங்கு = கதவியாங்கு?
செலவு + யாது = செலவியாது } முற்றியலுகரம் இகராமத் திரிந்தது.

**35. உயிர்வரின் உக்குறள் மெ—விட் டோடும்
யவ்வரின் இ—யாம் முற்றும்அற் றொரோவழி. (நன். சூ. 164)**

## iii. கெடுதலும் மிகுதலும் திரிதலும்

### மகரவீறு

141. மகரவீற்றுச் சொற்கள் பிற சொற்களோடு புணரும்போது, மகர வீறு கெட்டு உயிரீறுபோலப் புணரும். வருமொழி முதலில் வலிவரின் மகர வீறு கெடாது அதற்கின மெல்லினமாகத் திரிவது முண்டு.

உ-ம். மரம் + அடி = மரவடி - மகரவீறுகெட்டு உயிரீறுபோல உடம் படுமெ- பெற்றது.

மரம் + பலகை = மரப்பலகை - மகரவீறு கெட்டு உயிரீறு போல வலிமிக்கது.

மரம் + சா-ந்தது = மரஞ்சா-ந்தது.

இடம் + தந்தான் = இடந்தந்தான். மகரவீறு கெடாது இன மெல்லினமாகத் திரிந்தது.

கூடம் + கோணல் = கூடங்கோணல்

**36.** **மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்**
**வன்மைக் கினமாத் திரிபவும் ஆகும்.** **(நன். சூ. 129)**

# 5 ஆம் பாரம் (10 ஆம் வகுப்பு)

## 1. எழுத்தியல்

### 1. சுட்டெழுத்து

1. அ, இ, உ என்னும் மூன்றெழுத்துகளும் ஒரு சொல்லின் முதலில் வந்து சுட்டுப்பொருளைத் தரின் சுட்டெழுத் தெனப்படும்.

சுட்டுப் பொருள் - ஒன்றைக் குறித்துக் காட்டும் அர்த்தம்.

2. சுட்டு அகச்சுட்டு, புறச்சுட்டு என இருவகைப்படும்.

3. அகச்சுட்டாவது ஒரு சொல்லுக்குள்ளேயே நின்று சுட்டுப்பொருளைத் தருவது. (அகம் - உள்)

உ-ம். அவன், அது, அந்த
இவன், இது, இந்த
உவன், உது, உந்த

சொல்லுக்குள்ளே நிற்றலாவது சொல்லுக்கு உறுப்பா- நிற்றல். அவன் என்னும் சொல்லில் அ என்னும் சுட்டெழுத்து ஓர் உறுப்பாயுள்ளது. அவ்வெழுத்தைப் பிரித்துவிட்டால் அவன் என்னும் சொல் இல்லாமற் போம். ஆகையால் அவன் என்பதில் அ என்பது அகச்சுட்டாயிற்று.

4. புறச்சுட்டாவது ஒரு சொல்லுக்குப் புறமாக நின்று சுட்டுப்பொருளைத் தருவது. (புறம் - வெளி)

உ-ம். அம் மனிதன்
இம் மனிதன்
உம் மனிதன்

அம் மனிதன் என்பதில் அ, மனிதன் என்று இரு சொற்கள் உள. அ என்னும் சுட்டெழுத்து மனிதன் என்னும் சொல்லுக்குப் புறமாகவுளது; ஆகையால் புறச்சுட் டெனப்பட்டது. இங்ஙனமே பிறவும். அ என்பது ஓர் எழுத்தாயினும் பொருள் தருதலின் சொல்லெனப்பட்டது.

அகச்சுட்டு தனிமொழியிலும், புறச்சுட்டு தொடர்மொழியிலும் வரும்.

***குறிப்பு:*** அகரம் தொலைவிலுள்ள பொருளையும், இகரம் பக்கத்திலுள்ள பொருளையும், உகரம் இவ் விரண்டிற்கும் இடையிலுள்ள பொருளையும், பின்னாலுள்ள பொருளையும் மேலேயுள்ள பொருளையும் சுட்டிக் காட்டும்.

உ-ம். உ - இடை - உவன்
பின் - உப்பக்கல் (பின்பக்கம்), உத்தரகாண்டம் (பின்காண்டம்)
மேல் - உயரம், உச்சி, உன்னதம், உம்பர் (அகச்சுட்டு)

அகரம் சே-மைச்சுட்டு என்றும், இகரம் அண்மைச்சுட்டு என்றும், உகரம் இடைமைச் சுட்டு என்றும் கூறப்படும்.

உகரச்சுட்டு செ-யுள் வழக்கு.

**1. அ, இ, உமுதல் தனிவரிற் சுட்டே. (நன். சூ. 66)**

## *உ. வினாவெழுத்து*

5. ஆ, எ, ஏ, ஓ என்னும் உயிரெழுத்துகளும், யா என்னும் உயிர்மெ-யெழுத்தும் வினாப்பொருளில் வரும்போது வினாவெழுத்துகளாம்.

6. ஏ, யா என்பவை சொல்லுக்கு முதலிலும், ஆ, ஓ என்பவை சொல்லுக் கீற்றிலும், ஏ என்பது அவ் வீரிடத்திலும் வினாவாக வரும்.

7. வினா அகவினா, புறவினா என இருவகைப்படும்.

8. ***அகவினா:*** ஒரு சொல்லுக்கு அகமாக நின்று வினாப்பொருளைத் தருவது அகவினா. (அகம் - உள்)

உ-ம். எவன்?
ஏது? } மொழிமுதல் அகவினா.
யார்?

எவன் என்னும் சொல்லில் எ என்னும் வினாவெழுத்து ஓர் உறுப்பாகவுள்ளது. அவ் வெழுத்தைப் பிரித்துவிட்டால் எவன் என்னுஞ் சொல் இல்லை. ஆகையால் அது அகவினா எனப்பட்டது. இங்ஙனமே பிறவும்.

9. ***புறவினா:*** ஒரு சொல்லுக்குப் புறமாக நின்று வினாப்பொருளைத் தருவது புறவினா. (புறம் - வெளி)

உ-ம். எப்பையன்?
யாங்ஙனம்? மொழிமுதல் புறவினா

இராமனா? வந்தானா?
இராமனோ? வந்தானோ? மொழியீற்றுப் புறவினா

எப்பையன் என்பதில் எ, பையன் என்று இரு சொற்களுள. எ என்னும் வினாவெழுத்துப் பையன் என்னும் சொல்லுக்குப் புறமாகவுள்ளது. ஆதலின் புறவினா எனப்பட்டது. இங்ஙனமே யா என்பதும்.

இராமனா என்பதில் இராமன் என்னும் சொல்லும் ஆ என்னும் வினா வெழுத்துமாக இரு சொற்கள் உள. ஆ என்பது இராமன் என்னும் சொல்லுக் குப் புறமாக உள்ளது. ஆதலால் புறவினா எனப்பட்டது. இங்ஙனமே பிறவும்.

அகவினா தனிமொழியிலும், புறவினா தொடர்மொழியிலும் வரும். புறவினாவில் மொழிமுதல் வருவது சொல்லாகவும் மொழியீற்றில் வருவது அசையாகவும் இருக்கும்.

மொழிமுதல் வினா அகம், புறம் என்னும் இருவகையாகவு மிருக்கும். மொழியீற்று வினா புறமாகவே யிருக்கும்.

ஏகார வினா செ-யுள் வழக்கு.

**2. எயா, முதலும் ஆ, ஓ ஈற்றும்**
**ஏஇரு வழியும் வினாவா கும்மே. (நன். சூ. 67)**

## *ங. இனவெழுத்து*

10. எழுத்துகள் ஒலி, அளவு, தன்மை, பிறப்பு முதலிய பல காரணங்களால் ஒன்றுக்கொன்று இனமாகும். அங்ஙனம் இனமான எழுத்துகள் இனவெழுத்துகள்.

(இனம் - முறை, சம்பந்தம்)

ஒலிபற்றிய உயிரெழுத்துகளில் ஐ ஔ நீங்கலாக மற்றைப் பத்தும், அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஒ, ஓ எனக் குறிலும் நெடிலுமாக ஒன்றுக்கொன்று இனமாகும். அளவுபற்றிக் குறில்களெல்லாம் ஓரினம்; நெடில்களெல்லாம் ஓரினம்.

தன்மைபற்றி வல்லின மெல்லாம் ஓரினம்; மெல்லின மெல்லாம் ஓரினம்; இடையின மெல்லாம் ஓரினம்; வல்லினமும் மெல்லினமும் ஒன் றுக்கொன்று எதிரான இனம். உயிரெல்லாம் ஓரினம், மெ-யெல்லாம் ஓரினம்.

பிறப்புப்பற்றி இ, ஈ, எ, ஏ, ஐ என்னும் ஐந்தும் ஓரினம்; உ, ஊ, ஒ, ஓ, ஒள என்னும் ஐந்தும் ஓரினம்.

உயிரெழுத்துகளில் குறிலும் நெடிலுமாக அடுத்துடுத் தெழுதப்படும் எழுத்துகள், ஒலியால் ஒன்றுக்கொன் றினமாதல்பற்றியே.

அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஒ, ஓ என ஒத்த வடிவில் எழுதப்படுகின்றன. ஒலி முந்தியது: வரி பிந்தியது.

உயிரெழுத்துகளில் ஐ ஒள என்னுமிரு நெடில்கட்கும் இயற்கை இனக் குறிலில்லை. ஐ என்பது அ, இ என்னும் ஈரொலிகள் சேர்ந்த புணரொலி (Diphthong). ஒள என்பது அ, உ என்னும் ஈரொலிகள் சேர்ந்த புணரொலி. இரு புணரொலிகட்கும் அகரம் பொதுவாயிருப்பதால் அதை நீக்கி இறுதி யிலிருக்கின்ற இ, உ என்பன முறையே ஐகார ஒளகாரகட்குச் செயற்கை யினக் குறில்களாகச் சேர்க்கப்பட்டுள. உயிரளபெடையில் ஐகார ஒளகார அளபெடைகளைக் குறித்தல் வேண்டி, இங்ஙனம் செயற்கையினக் குறில் கள் சேர்க்கப்பட்டுள வென்க.

மெ-யெழுத்துகளில் வல்லினமும் மெல்லினமும் க, ங; ச, ஞ; ட; ண; த, ந; ப, ம; ற, ன என ஒன்றுக்கொன் றினமாகு மென்றறிக.

## *ச. மாத்திரை*

11. மாத்திரை என்பது எழுத்தை உச்சரிக்கும் கால அளவு. (மாத்திரை - அளவு) மருத்துவனிடத்திலுள்ளது மருந்தளவு. இலக்கணத்திலுள்ளது ஒலியளவு.

12. இயல்பான ஓரிமைப் பொழுதாவது ஒரு நொடிப் பொழுதாவது ஒரு மாத்திரை யளவாம். நொடி கைந்நொடி.

13. உயிரானாலும் உயிர்மெ-யானாலும் குறிலுக்கு மாத்திரை ஒன்று; நெடிலுக்கு மாத்திரை இரண்டு. மெ-யெழுத்திற்கும் ஆ-தத்திற்கும் குற்றிய லிகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் தனித்தனி மாத்திரை அரை.

***குறிப்பு:*** இசையிலும் விளியிலும் புலம்பலிலும் பண்டமாற்றிலும் எழுத்து கள் தத்தம் மாத்திரையளவைக் கடந்தொலிக்கும்.

(இசை - சங்கீதம்; விளி - கூப்பிடுதல்; புலம்பல் - அழுகை; பண்ட மாற்று - வியாபாரம்)

உ-ம். இசை - சாஅ நிச தநிபா (சங்கராபரண வர்ணத் தொடக்கம்) ஆ நீண் டொலித்தது.
பொன்னார் மேனியனே எ எ எ - ஏ நீண்டொலித்தது.
விளி - இராமா அ அ - ஆ நீண்டொலித்தது.
புலம்பல் - ஐயையோ ஒ ஒ - ஓ நீண்டொலித்தது.
பண்டமாற்று - தயிரோ ஒ ஒ தயிர் - ஓ நீண்டொலித்தது.

## *மொழிமுத லெழுத்துக்கள்*

14. தமிழில் எல்லா எழுத்துகளும் மொழிக்கு முதலில் வருவ தில்லை. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் மொழிமுத லெழுத்துக்கள் எனப்படும்.

15. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும்.

உ-ம். அடை, ஆடை, இடு, ஈடு, உடை, ஊடு, எடை, ஏடு, ஐயன், ஒடி, ஓடை, ஔவை.

16. மெ-யெழுத்துகள் உயிரோடு கூடி யல்லது மொழிக்கு முதலில் வரா. அங்ஙனம் வரும் எழுத்துகள் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்னும் பத்தே.

17. அவற்றுள் க, ச, த, ந, ப, ம என்னும் ஆறும் பன்னீருயிருடனும் கூடி மொழிக்கு முதலில் வரும்.

உ-ம். கடை, காடு, கிடை, கீரி, குடை, கூடு, கெடு, கேடு, கையர், கொடை, கோடு, கௌவை.
சரி, சாடு, சிறு, சீறு, சுடு, சூடு, செடி, சேடு, சைவம், சொறி, சோடு, சௌரியம்.
தடை, தாடை, திரி, தீமை, துளி, தூறு, தெளி, தேடு, தையல், தொடு, தோடு, தௌவை.
நடை, நாடு, நிறு, நீடு, நுதி, நூறு, நெடு, நேற்று, நைவு, நொடி, நோவு, நௌவி.
படை, பாடு, பிடி, பீடு, புளி, பூடு, பெடை, பேடு, பையன், பொரி, போடு, பௌவல்.
மடை, மாடு, மிசை, மீறு, முடை, மூடு, மெலி, மையம், மொழி, மோடு, மௌவல்.

18. வகரம் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் எட்டு உயிரோடுங் கூடி மொழிக்கு முதலில் வரும்.

உ-ம். வடை, வாடை, விடை, வீடு, வெடி, வேடு, வையம், வௌவால்.

19. யகரம் அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ என்னும் ஆறு உயிரோடும் கூடி மொழிக்கு முதலாம்.

உ-ம். யவனர், யாது, யுகம், யூகம், யோகம், யௌவனம் இவற்றுள் யாது என்னும் சொல்லே தமிழ். ஏனையவெல்லாம் வடமொழி.

20. ஞகரம் அ, ஆ, எ, ஒ என்னும் நான்குயிரோடு கூடி மொழிக்கு முதலில் வரும்.

உ-ம். ஞமலி (நா-), ஞாயிறு, ஞெகிழி, (கொள்ளிக்கட்டை), ஞொள்கல் (இளைத்தல்)

மிஞிறு (வண்டு)என்னும் சொல் இலக்கணப் போலியாகி ஞிமிறு என நிற்கும்போது ஞகரம் இகரத்தோடும் கூடி மொழிமுதலில் வருவதாகக் கொள்ளலாம்.

21. ஙகரம் சுட்டெழுத்துக்குப் பின்னாலும், எ, யா என்னும் வினா வெழுத்து களுக்குப் பின்னாலும், அகரத்தோடு கூடி ஒரே மொழியில் முதலா- வரும்.

உ-ம்.

| | |
|---|---|
| அங்ஙனம்<br>இங்ஙனம்<br>உங்ஙனம் | } சுட்டெழுத்திற்குப் பின் |
| எங்ஙனம்?<br>யாங்ஙனம்? | } வினாவெழுத்திற்குப் பின் |

**3. பன்னீ ருயிரும் கசதந பமவய**
**ஙஞஈ ரைந்துயிர் மெ-யும் மொழிமுதல். (நன். சூ. 102)**

மேலே காட்டியபடி மொழிமுதலெழுத்துகள் மொத்தம் நூற்று மூன்றாகும். இங்குக் கூறப்படாத ட, ண, ர, ல, ழ, ள, ற, ன என்னும் எட்டு எழுத்துகளும் மொழிமுதல் வரா.

## கூ. போலியின் வகை

22.போலி சொல்லில் வரும் இடம்பற்றி முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி என மூவகைப்படும். கடைப்போலி இறுதிப்போலி எனவும் கூறப்படும்.

23. இனி, போலி தான் வரும் மொழிபற்றித் தனிமொழிப் போலி தொடர் மொழிப் போலி எனவும் இருவகைப்படும்.

## *தனிமொழிப் போலி*

### *முதற்போலி*

உ-ம்.

நேயம் - ஞேயம்
நண்டு - ஞண்டு } நகரத்திற்கு ஞகரம் போலி.

பகுத்தல் - வகுத்தல் - பகரத்திற்கு வகரம் போலி.

முனி - நுனி
முகக்கோல் - நுகக்கோல் } மகரத்திற்கு நகரம் போலி

வறுமை - வெறுமை
பருமை - பெருமை } அகரத்திற்கு எகரம் போலி.

பையல் - பயல்
மையல் - மயல் } ஐகாரத்திற்கு அகரம்போலி.

### இடைப்போலி

ஈயல் - ஈசல்
இயைவு - இசைவு } யகரத்திற்குச் சகரம் போலி.

செ-வேன் - செ-கேன்
சிவப்பு - சிகப்பு } வகரத்திற்குக் ககரம் போலி.

அரசன் - அரைசன்
இலஞ்சி - இலைஞ்சி } அகரத்திற்கு ஐகாரம் போலி.

### கடைப்போலி

குலம் - குலன்
குணம் - குணன் } மகரத்திற்கு னகரம் போலி.

மறம் - மறல்
திறம் - திறல் } மகரத்திற்கு லகரம் போலி.

குடல் - குடர்
குதில் - குதிர் } லகரத்திற்கு ரகரம் போலி.

மதில் - மதிள்
திமில் - திமிள் } லகரத்திற்கு ளகரம் போலி.

### ஈரிடப்போலி

நீந்து - நீஞ்சு
ஈந்து - ஈஞ்சு } நகர தகரங்களுக்கு ஞகர சகரம் போலி.

## *மூவிடப்போலி அல்லது முற்றுப்போலி*

ஐந்து - அஞ்சு
நைந்து - நஞ்சு } ஐகாரத்திற்கு அகரமும், நரத்திற்கு ஞகரமும், தகரத்திற்குச் சகரமும் போலி.

### தொடர்மொழிப் போலி

ஐந்நூறு - ஐஞ்ஞூறு
அரைநாண் - அரைஞாண்
சே-நலூர் - சே-ஞலூர்

**4. ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி**
**ஞஃகான் உறழும் என்மரும் உளரே. (நன். சூ. 124)**

# சொல்லியல்

2. **வடசொல்:** சமஸ்கிருதச் சொல் தமிழில் வந்து வழங்கும் போது வடசொல் எனப்படும்.

சமஸ்கிருதம் ஆதியில் வடக்கே (வட இந்தியாவில்) வழங்கினதால் வடமொழி யெனப்பட்டது. அதன்மேல் வடசொல் எனப்பட்டது.

25. வடசொல் தற்சமம், தற்பவம் என இரு வகைப்படும்.

26. **தற்சமம்:** சமஸ்கிருதத்திலும் தமிழிலும் ஒன்றுபோல் ஒலிக்கும் வடசொல் தற்சமம் எனப்படும்.

உ-ம். அமலம், காரணம், குங்குமம்

இவை, சமஸ்கிருத உச்சரிப்பிற்குச் சமமா- ஒலித்தலால் தற்சமம் எனப்பட்டன. (தற்சமம் - அதற்குச் சமமானது.) வடமொழிக்கும் தென் மொழிக்கும் பொதுவாயுள்ள எழுத்துகளால் ஆக்கப்பட்டிருப்பதே வட சொற்கள் தற்சமமா- ஒலித்தற்குக் காரணமாம்.

27. ***தற்பவம்:*** சமஸ்கிருத எழுத்துத் திரிந்து வழங்கும் வடசொல் தற் பவ மெனப்படும்.

| உ-ம். | ***சமஸ்கிருதம்*** | ***தற்பவம்*** |
|---|---|---|
| | புத்ர: | புத்திரன் |
| | ஜ்ஞானம்: | ஞானம் |
| | ஜன: | சனம் |
| | பாபம் | பாவம் |
| | க்ரு ண: | கிருட்டிணன், கிட்டிணன் |
| | ராஜ்யம் | இராச்சியம் |
| | ரக்ஷா | இரட்சை |

இங்குக் காட்டப்பட்ட தற்பவங்கள் சரியான சமஸ்கிருதச் சொற்களா யிராமல், அவற்றின் திரிபாயிருப்பதால் தற்பவமெனப் பட்டன. தற்பவம் - அதனினின்றும் பிறந்தது அதாவது திரிந்தது. வடசொற்கள் பெரும்பாலும் வடமொழிச் சிறப்பெழுத்துகளாலாக்கப்பட்டிருப்பதே தற்பவமாதற்குக் காரணமாம்.

## *பெயர்ச்சொல்*

23. ***காரண இடுகுறிப் பெயர்:*** ஒரு காரணப் பெயர் அதன் காரணம் பற்றிய பல பொருள்களையுங் குறியாது ஒரே ஒரு பொருள் குறிப்பின் காரண விடுகுறிப்பெயராம்.

காரணமாகவும் இடுகுறியாகவும் உள்ளது காரண விடுகுறி. காரண மாவது ஒரு காரணம்பற்றிப் பல பொருள்களைக் குறிக்கும் பெயர். இடு குறியாவது அவற்றுள் ஒன்றற்கே இட்டகுறி. (குறி - பெயர்).

உ-ம். முக்கண்ணன், நாற்காலி.

முக்கண்ணன் என்பது மூன்று கண்களுடைய சிவன், விநாயகன் என் னும் இருவரையும் குறியாது சிவனையே குறித்தலின் காரண விடுகுறியா யிற்று.

நாற்காலி என்பது நான்கு கால்களையுடைய பல ஆசனங்களையும், விலங்குகளையும் குறியாது ஒரே ஓர் ஆசனத்தைக் குறித்தலின்; காரணவிடு குறியாயிற்று.

## *பொதுப்பெயர், சிறப்புப் பெயர்*

29. இடுகுறிப்பெயரும் காரணப் பெயரும் பொதுப் பெயரென்றும் சிறப்புப் பெயரென்றும் தனித்தனி இருவகைப்படும்.

30. பொதுப்பெயர், சில பொருள்கட்குப் பொதுவாகவுள்ள பெயர்: சிறப்புப் பெயர், ஒன்றற்கே சிறப்பாகவுரிய பெயர்.

இடுகுறிப் பொதுப் பெயர் - மரம்
இடுகுறிச் சிறப்புப் பெயர் - பனை
காரணப் பொதுப் பெயர் - அணி
காரணச் சிறப்பு பெயர் - வளை

மரம் என்பது காரணமில்லாமல் இடப்பட்ட குறியாகவும், ஒரு வகுப் புப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் பொதுப் பெயராகவும் மிருத்தலான் இடு குறிப் பொதுப்பெயராயிற்று.

பனை என்பது காரணமில்லாமல் இடப்பட்ட குறியாயும், ஒன்றற்கே யுரிய சிறப்புப் பெயராயு மிருத்தலான், இடுகுறிச் சிறப்புப் பெயராயிற்று.

அணி யென்பது காரணப் பெயராயும், அணியக்கூடிய பல ஆபரணங் கட்கும் பொதுப்பெயராவுமிருத்தலான், காரணப் பொதுப்பெயராயிற்று.

வளை என்பது காரணப் பெயராயும் வளைந்திருக்கின்ற பல ஆபர ணங்களையும் குறியாது பெண்டிர் கையிலணிகின்ற வளையலுக்கே சிறப் புப் பெயராயுமிருத்தலான் காரணச் சிறப்புப் பெயராயிற்று.

## *ஆகுபெயர்*

31. ஆகுபெயராவது ஒரு பொருளின் பெயர் அதற்குத் தொடர்பான மற்றொரு பொருளுக்குத் தொன்றுதொட்டு ஆகி வருவது.

ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் பலவகையிற் றொடர் புண்டாகும். என்ன தொடர்பால் ஒரு பொருளின் பெயர் மற்றொரு பொரு ளுக்கு ஆகி வருகிறதோ, அன்ன தொடர்பால் அது இன்ன ஆகுபெய ரென் றழைக்கப்படும்.

(1) **பொருளாகு பெயர்:** பொருளாகு பெயராவது பல உறுப்புகளை யுடைய ஒரு பொருளின் பெயர் அதன் உறுப்புகளில் ஒன்றற்கு ஆகி வருவது.

பொருளென்றது உடம்பை; அது முதலெனவுங் கூறப்படும்.

உ-ம். தாமரை போன்ற திருவடி - இதில் 'தாமரை' என்னும் செடிப் பெயர் அதன் உறுப்பாகிய மலருக்கு ஆகி வந்தது.

(2) **இடவாகு பெயர்:** ஓர் இடத்தின் பெயர் அவ்விடத்திலுள்ள பொருளுக்கு ஆகி வருவது இடவாகு பெயர்.

உ-ம். சேலம் வாங்கினான் - இதிற் சேலம் என்னும் இடப்பெயர் அவ்விடத்தில் செ-யப்படும் ஆடைக்கு ஆகி வந்தது.
இடவாகு பெயர் தானவாகு பெயரென்றும் சொல்லப்படும். (தானம் - இடம்).

(3) **காலவாகு பெயர்:** காலவாகுபெயராவது ஒரு காலத்தின் பெயர் அக்காலத்தில் தோன்றும் (அல்லது விளையும்) பொருளுக்கு ஆகி வருவது.

உ-ம். கோடை விளைந்தது - இதில் கோடை என்னும் காலப்பெயர் அக்காலத்தில் விளைந்த தானியத்திற்கு ஆகி வந்தது.

(4) **சினையாகு பெயர்:** சினையாகு பெயராவது ஓர் உறுப்பின் பெயர் அவ் வுறுப்பை யுடைய உடம்பிற்கு ஆகி வருவது.

இது பொருளாகு பெயர்க்கு எதிர். (சினை - உறுப்பு.)

உ-ம். வெற்றிலை நட்டான் - இதில் வெற்றிலை என்னும் சினைப் பெயர் அதையுடைய கொடிக்காயிற்று.

(5) **குணவாகு பெயர்:** குணவாகு பெயராவது ஒரு குணத்தின் பெயர் அக் குணத்தையுடைய பொருளுக்கு ஆகி வருவது.

உ-ம். வண்ணான் வெள்ளை கொண்டுவந்தான் - இதில் வெள்ளை என்னும் குணப்பெயர் அக் குணத்தையுடைய உடுப்பிற்கு ஆகி வந்தது.
குணவாகு பெயர் பண்பாகு பெயரென்றுங் கூறப்படும். (குணம் - பண்பு.)

(6) **தொழிலாகு பெயர்:** தொழிலாகு பெயராவது ஒரு தொழிலின் பெயர் அத் தொழிலையுடைய பொருளுக்கு ஆகி வருவது.

உ-ம். பறவை என்பது, பறத்தற் றொழிலை யுடைய பிராணிக்கு ஆகி வந்தது.

# வேற்றுமை

## வேற்றுமைப் பொருள்கள்

32. **முதல் வேற்றுமை:** முதல் வேற்றுமை, கருத்தாப் பொருளில் வரும். (கருத்தா - எழுவா-; தொழில் செ-பவன்.)

உ-ம். இராமன் படிக்கிறான் - இராமன் எழுவா-.

33. **இரண்டாம் வேற்றுமை:** இரண்டாம் வேற்றுமை, செயப்படு பொருட் பொருளில் வரும்.

செயப்படுபொருள் ஒரு கருத்தாவாற் செயப்படும் பொருள். அது பொருளாகவாவது தொழிலாகவாவது இருக்கும். செயப்படுபொருள் செ-பொருள் என்றும் கூறப்படும்.

உ-ம். குயவன் குடத்தை வனைந்தான் - குடம்
இராமன் பாடத்தைப் படித்தான் - பாடம் } செ-பொருள்

34. **மூன்றாம் வேற்றுமை:** மூன்றாம் வேற்றுமை, கருவிப் பொருளிலும், கருத்தாப் பொருளிலும், உடனிகழ்ச்சிப் பொருளிலும் வரும்.

உளியாற் செ-தான் - உளி கருவி.
கொத்தனாற் கட்டப்பட்டது - கொத்தன் கருத்தா.
இராமனோடு இலக்குமணன் சென்றான் - இராமன் செலவோடு
இலக்குமணன் செலவு உடனிகழ்தல் உடனிகழ்ச்சி.

35. **நான்காம் வேற்றுமை:** நான்காம் வேற்றுமை, கொடை, பகை, நேர்ச்சி முதலிய பொருள்களில் வரும்.

(நேர்ச்சி - நட்பு.)

அதிகமான் ஔவைக்கு அருநெல்லிக்கனி அளித்தான் - கொடை.
பாம்பிற்குக் கீரி பகை - பகை.
சேரமான் பெருமாளுக்குச் சுந்தரமூர்த்தி நண்பர் - நேர்ச்சி.

36. **ஐந்தாம் வேற்றுமை:** ஐந்தாம் வேற்றுமை, நீங்கல் ஒப்பு முதலிய பொருள்களில் வரும்.

உ-ம். மரத்தினின்று விழுந்தது மலர் - நீக்கம்.
காக்கையிற் கரிது களம்பழம் - ஒப்பு.

காக்கையின் என்பது காக்கையைப்போல என்றும், காக்கையைவிட என்றும் இரு பொருள்பாடும். முன்னது ஒப்புப் பொருவு (Positive degree) என்றும், பின்னது உறழ்பொருவு (Comparative degree) என்றும் கூறப் படும். (பொருவு = சமம்.)

37. **ஆறாம் வேற்றுமை:** ஆறாம் வேற்றுமை, கிழமைப் பொருளில் வரும்.

(கிழமை - உரிமை, உடைமை.)
இராமனது வீடு.

38. **ஏழாம் வேற்றுமை:** ஏழாம் வேற்றுமை இடப்பொருளில் வரும்.

உ-ம். தமிழில் இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்கள் உள
- தமிழ் இடம்
வீட்டிலிருக்கிறான் - வீடு இடம்.

39. **எட்டாம் வேற்றுமை:** எட்டாம் வேற்றுமை, விளிப்பொருளில் வரும். (விளி - கூப்பிடுதல்.)

இராமா! வா; அண்ணா! சொல்.

## *விளி ஏற்காத பெயர்கள்*

40. தன்மைப் பெயர்களும் முன்னிலைப் பெயர்களும் 'நு' என்னும் எழுத்தை முதலாகவுடைய கிளைப்பெயர்களும், ஐம்பால் வினாப்பெயர் களும், ஐம்பாற் சுட்டுப்பெயர்களும் தான் தாம் முதலிய படர்க்கைப் பெயர்களும் விளி யேலா.

### *அப் பெயர்களாவன*

யான், நான், யாம், நாம் - தன்மைப் பெயர்கள்
நீ, நீர், நீங்கள் - முன்னிலைப் பெயர்கள் } - கிளைப் பெயர்கள்
நுமன், நுமள், நுமர், நுமது, நும்மவை

எவன், எவள், எவர், எது, எவை
ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை } -வினாப் பெயர்கள்.
யாவன், யாவள், யாவர், யாது, யாவை

அவன், அவள், அவர், அது, அவை
இவன், இவள், இவர், இது, இவை } -சுட்டுப் பெயர்கள்
உவன், உவள், உவர், உது, உவை

தான், தாம், தாங்கள் படர்க்கைப் பெயர்கள்.

**5. நுவ்வொடு வினாச்சுட் டுற்ற னஎர**
**வைதுத் தாம்தான் இன்னன விளியா. (நன். சூ. 314)**

## 4. பெயர் உருபேற்கும்போது வரும் சாரியைகள்

41. ***சாரியை:*** சாரியையாவது தாமாகச் சாராத இருசொற்களை அல்லது சொல்லுறுப்புகளைச் சார்ந்தவற்றை இசைக்கும் அசை.

சார்ந்து இயைப்பது சாரியை. (இயைத்தல் - இசைத்தல்).

உ-ம். புளி ( + அம்) + பழம் = புளியம்பழம்
பட்டினம் ( + அத்து) + ஆன் = பட்டினத்தான்.

42. எல்லாவிடத்தும் பொதுவாக வருகின்ற சாரியைகள் அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன, தன், தம், ஆம், ஆ, ஓ முதலியன.

43. இவற்றுள் பெயர் உருபேற்கும்போது வருவன அன், இன், அற்று, அத்து, தம், நம், நும், உ, தன் முதலியன.

உ-ம். அது + கு = அதற்கு - அன் சாரியை
அது + கு = அதனுக்கு - அன், உ சாரியைகள்
ஊர் + கண் = ஊரின்கண் - இன் சாரியை
பல + ஐ = பலவற்றை - அற்றுச்சாரியை
மரம் + ஐ = மரத்தை - அத்துச்சாரியை
அவர் + ஐ = அவர்தம்மை - நம் சாரியை
எல்லாம் + ஐ = எல்லாநம்மையும் - நம் சாரியை
எல்லீரும் + ஐ = எல்லீர்நும்மையும் = நும் சாரியை
இராமன் + ஐ = இராமனுக்கு - உ சாரியை
என் + கு = என்றனுக்கு - தன், உ சாரியைகள்
உன் + ஐ = உன்றனை - தன் சாரியை.

***குறிப்பு:*** மேற்காட்டியவற்றுள் சில பெயர்கள் அதுக்கு, அவரை, எல்லீரையும், இராமற்கு எனச் சாரியை பெறாமாலும் உருபேற்கும்.

**6. அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம்**
**தம்நம் நும்ஏ அஉ ஐகுன**
**இன்ன பிறவும் பொதுச்சா ரியையே. (நன். சூ. 244)**

# *5. வினைச்சொல்*

44. வினைச்சொல் தெரி நிலைவினை, குறிப்புவினை என இரு வகைப்படும்.

## தெரிநிலைவினை

45. தெரிநிலைவினையாவது காலமும் செயலும் வெளிப்படையாகத் தெரிய நிற்கும் வினை.

தெரிய நிற்பது தெரிநிலை.

உ-ம். வந்தான்.

46. தெரிநிலைவினை செ-பவன் (கருத்தா), கருவி, நிலம் (இடம்), செயல், காலம், செ-பொருள் என்னும் இவ் வாறையுங் காட்டும்.

இவற்றுள் செ-பவன், செயல், காலம் என்னும் மூன்றும் முறையே விகுதி, பகுதி, இடைநிலை என்னும் வினையுறுப்புகளால் வெளிப்படை யாகவும், ஏனைய குறிப்பாகவும் தோன்றும்.

தெரிநிலைவினை முற்றாயிராது எச்சமாயிருப்பின் செ-பவனைக் காட்டாது; செயப்படுபொருள் குன்றிய வினையாயிருப்பின், செ-பொருளை யுங் காட்டாது.

உ-ம். வனைந்தான் - இதில் வனை என்னும் பகுதியால் வினை (செயல்)யும், த் என்னும் இடைநிலையால் காலமும், ஆன் என்னும் விகுதியால் செ-பவனும் வெளிப்படையாகத் தெரிந்தன. ஏனைக் கருவி, நிலம், செ-பொருள் என்னும் மூன்றும் ஊகித் தறியப்படும்.

**7. செ–பவன் கருவி நிலம்செயல் காலம்**
**செ–பொருள் ஆறும் தருவது வினையே. (நன். சூ. 320)**

## *குறிப்பு வினை*

47. குறிப்பு வினையாவது செயலைக் குறிப்பாக உணர்த்தும் வினை.

உ-ம். உண்டு, பெரிது.

48. குறிப்புவினை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயரின் அடியாகப் பிறந்து, விகுதி (வினைமுற்று விகுதி)யால் வினைமுதலை (கருத்தாவை) மட்டும் காட்டும்.

பொன்னன் - பொருட்பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.
கருவூரான் - இடப்பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.
ஓணத்தான் - காலப்பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.
மூக்கன் - சினைப்பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.
தீயன் - குணப்பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.
தச்சன் - தொழிற்பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

இவை பகுதியால் ஆறுவகைப் பெயரையும் விகுதியால் கருத்தாவை யுங் காட்டின.

பொன்னன் என்பது பொன்னை யுடைவனா யிருக்கிறான் என்று குறிப்பாக வினையைக் காட்டிற்று.

அஃது இன்னகாலத்திற் பொன்னனென்று ஒரு காலத்தைச் சிறப்பாகக் குறியாமையால் முக்காலத்திற்கும் பொதுவாம். அஃது ஒரு காலத்தைச் சிறப்பாகக் குறிக்கவேண்டின் பண்டு, இன்று, நாளை என்ற பிறசொற்களைக் கொண்டே குறிக்கும். இங்ஙனமே பிறவும்.

உ-ம். பண்டு பொன்னன் - இறந்தகாலம்.
இன்று பொன்னன் - நிகழ்காலம்.
நாளை பொன்னன் - எதிர்காலம்.

உடையன் என்னும் குறிப்பு வினைமுற்று, செ-பொருளையும் காட்டும்; எச்சமான, குறிப்புவினைகள் கருத்தாவைக் காட்டா.

உ-ம். தீய - பெரிய.

**8. பொருள்முத லாறினும் தோற்றிமுன் ஆறனுள்**
**வினைமுதல் மாத்திரை விளக்கல்வினைக் குறிப்பே. (நன். சூ. 321)**

49. வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்புவினைகள் ஐம்பால் மூவிடம் ஈரெண்கட்கும் பொது. இவை முற்றாயினும் எச்சமாயினும் கருத் தாவைக் காட்டா.

உ-ம். தன்மை - நான், நாம், நாங்கள்,
முன்னிலை - நீ, நீர், நீங்கள்,
படர்க்கை - அவன், அவள், அவர், அது, அவை.
} வேறு / இல்லை / உண்டு

**9. வேறில்லை உண்டைம் பால்மூ விடத்தன. (நன். சூ. 339)**

50. யார், எவன் என்னும் வினாப்பெயர்களும், குறிப்பு வினைமுற்று களாக வரும்.

51. யார் என்பது உயர்திணை முப்பாற்கும், எவன் என்பது அஃறிணை யிருபாற்கும் ஏற்கும். எவன் என்பது இடை குறைந்து என் என நிற்கவும், என்னே, என்னை, என்னோ எனத் திரியவும் பெறும்.

உ-ம். அவன், அவள், அவர் - யார்?
அது, அவை - எவன்? என்? என்ன?

## *முற்றுவினை, எச்சவினை*

52. தெரிநிலையும் குறிப்புமாகிய வினைகள் முற்று, எச்சம் எனத் தனித்தனி இருவகைப்படும். எச்சமும், பெயரெச்சம் வினையெச்சம் என இருவகைப்படும்.

ஆகவே, வினை,
தெரிநிலை வினைமுற்று,
தெரிநிலைப் பெயரெச்சம்,
தெரிநிலை வினையெச்சம்,
குறிப்பு வினைமுற்று,
குறிப்புப் பெயரெச்சம்,
குறிப்பு வினையெச்சம் என மொத்தம் ஆறு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| உ-ம். | வந்தான் | - தெரிநிலை வினைமுற்று. |
| | வந்த (பையன்) | - தெரிநிலைப் பெயரெச்சம். |
| | வந்து (போனான்) | - தெரிநிலை வினையெச்சம் |
| | செல்வன் | - குறிப்பு வினைமுற்று. |
| | செல்வப் (பிள்ளை) | - குறிப்புப் பெயரெச்சம். |
| | வலியக் (கொடுத்தான்) | - குறிப்பு வினையெச்சம். |

***குறிப்பு:*** குறிப்புப் பெயரெச்ச விகுதி ‘அ’ ஒன்றே; உதாரணம் மேலே காட்டப்பட்டது.

குறிப்பு வினையெச்ச விகுதிகள் அ, றி து, ஆல், மல், மே, மை முதலியன. இவற்றுள் ‘அ’ உடன்பாட்டில் மட்டும் வரும். ‘து’ உடன்பாடு, எதிர்மறை இரண்டிலும் வரும். ஏனைய எதிர்மறையில் மட்டும் வரும்.

உ-ம். வலிய - அ உடன்பாடு.
வலிது - து உடன்பாடு.
இல்லாது - து எதிர்மறை.

இன்றி - றி
அல்லால் - ஆல்
இல்லாமல் - மல்
இல்லாமே -மே
இல்லாமை - மை
} எதிர்மறை.

கால், வழி, இடத்து முதலிய சொற்கள் குறிப்பு வினையெச்சப் பொருள் பட வருவதுமுண்டு.

உ-ம். இல்லாக்கால்,
இல்லாவழி,
இல்லாவிடத்து.

## *6 பகுபத உறுப்புகள்*

53. பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்னும் ஆறும் பகுபத உறுப்புகளாம். இவற்றுள் பகுதி விகுதி இரண்டும் இன்றி யமையாதவை. ஏனைய ஒன்றும் பலவும் வந்தும் வராமலும் இருக்கும்.

54. ***பகுதி:*** பகுதி எப்போதும் முதலில் நின்று, பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கனுள் ஒன்றைக் காட்டும்.

உ-ம். கண்ணன் - கண், பெயர்ப்பகுதி.
வந்தான் - வா, வினைப்பகுதி.
மற்றவன் - மற்று, இடைப்பகுதி.
சான்றோர் - சால, உரிப்பகுதி.

பகுதி முதலில் நிற்பதனால், முதனிலை யென்றுங் கூறப்படும்.

55. ***விகுதி:*** விகுதி எப்போதும் கடைசியில் நின்று பால், இடம், எச்சம், பெயர் முதலியவற்றுள் ஒன்றை உணர்த்தும்.

உ-ம். வந்தான் - ஆன், ஆண்பால் உணர்த்திற்று.
வந்தேன் - ஏன், தன்மை ஒருமை உணர்த்திற்று.
வந்து - உ, எச்ச முணர்த்திற்று.
வருகை - கை, தொழிற்பெயரை யுணர்த்திற்று.

விகுதி இறுதியிலிருப்பதால், இறுதிநிலை யென்றுங் கூறப்படும். (இறுதி - கடைசி).

வேற்றுமை யுருபும் விகுதியின்பாற் படும்.

56. ***இடைநிலை:*** இடைநிலை எப்போதும் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலத்தையாவது; பகுதி விகுதி இணைப்பையாவது காட் டும். அது பெயரிடைநிலை, வினையிடைநிலை என இருவகைப்படும். பெயரிடைநிலை காலங் காட்டாது; வினையிடைநிலை காலங்காட்டும்.

இடையில் நிற்பது இடைநிலை எனப்பட்டது.

உ-ம். வந்தான் (வ+ந்+த்+ஆன்)-த் வினையிடைநிலை இறந்தகாலங் காட்டிற்று.

அறிஞன் (அறி+ஞ்+அன்)-ஞ் பெயரிடைநிலை பகுதி விகுதி களை இணைத்தது.

57. ***சந்தி:*** சந்தியென்பது புணர்ச்சி. அது தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூவகைப் புணர்ச்சி விகாரங்களுள், தோன்றல் ஒன்றையே குறிக்கும். பகுபதத்திற் பல உறுப்புகள் சேரும்போது பல புணர்ச்சிகள் தோன்றுமேனும், பகுதியும் அதற்கடுத்த உறுப்பும் புணரும் புணர்ச்சியே சந்தியாகக் கூறப்படும்.

படித்தான் - படி + த் + தான் (த் + ஆன்) - த் சந்தி.
வந்தான் - வ + ந் + தான் (த் + ஆன்) - ந் - சந்தி.

***குறிப்பு:*** வந்தான், இருந்தான் முதலிய சொற்களில், ந் என்பதே சந்தி. திரிதலும் கெடுதலும் தனியெழுத்துக ளன்மையின் பகுபத வுறுப்பாகா.

58. ***சாரியை:*** சாரியை என்பது பெரும்பாலும் விகுதிக்கு அயலா-(முன்னால்) நின்று புணர்ச்சி, இன்னோசை முதலியவற்றுள் ஒன்றைப்பற்றி வரும்; சிறுபான்மை ஈற்றில் நின்று எழுத்தொலி யேனும், இன்னோசை யேனும் உணர்த்தும்.

இரு பதங்களை அல்லது பதவுறுப்புகளைச் சார்ந்து இயைப்பது (இசைப்பது) சாரியை எனப்பட்டது.

59. சாரியை எழுத்துச் சாரியை சொற்சாரியை என இருவகைப்படும். சொற்சாரியை தனிமொழிச் சாரியை புணர்மொழிச் சாரியை என இருவகைப் படும். புணர்மொழிச் சாரியை முன்னர்ப் புணரியலுட் கூறப்பட்டது. இங்குத் தனிமொழிச் சாரியையே கூறப்படும். பகுபதம் தனிமொழியாதலின்.

## *ஈற்றயற் சாரியை*

உ-ம். பட்டினத்தான் = பட்டினம் + அத்து + ஆன்: அத்துச் சாரியை புணர்ச்சிபற்றி வந்தது.

வந்தனன்+வ+ந்+த்+அன்+அன்: அன் சாரியை இன்னோசை பற்றி வந்தது.

## ஒற்றுச் சாரியை

அகரம் - கரம் எழுத்தொலிபற்றி வந்தது.
நெஞ்சம் - நெஞ்சு + அம்: அம் இன்னோசைபற்றி வந்தது.
எழுத்துச்சாரியை எழுத்தை உச்சரிக்கத் துணையா- வருவது.

உ-ம். அகரம் - கரச்சாரியை.
ஆகாரம் - காரச்சாரியை.

சொற்சாரியை, சொல்லில் வருவது.

உ-ம். பட்டினத்தான் - அத்துச்சாரியை.

60. ***விகாரம்:*** விகாரம் என்பது பகுதியின் விகாரமென்றும், புணர்ச்சி விகாரமாகிய திரிதல் என்றும், இருவகையாகக் கூறுவர் ஆசிரியர். புணர்ச்சி விகாரம் சந்தியுளடங்குதலாற் பகுதியின் விகாரம் என்பதே சிறந்த கொள்கை யாகும். (விகாரம் - வேறுபாடு).

உ-ம். வந்தான் = வா, வ எனக் குறுகிற்று.
தருகிறான் = தா, தரு எனத் திரிந்தது.

***பகுபத வுறுப்புகள் பகுபதத்தில் நிற்கும் முறை பின்வருமாறு***

1. ஈருலுப்பு : பகுதி + விகுதி - கண் + அன் = கண்ணன்.
2. மூவுறுப்பு : பகுதி + இடைநிலை + விகுதி.
- செ- + த் + ஆன் = செ-தான்.
3. நாலுறுப்பு : பகுதி + சந்தி + இடைநிலை + விகுதி -
படி+ த் + த் + ஆன் = படித்தான்.
4. ஐயுறுப்பு : பகுதி + சந்தி + இடைநிலை + சாரியை + விகுதி
- படி + த் + த் + அன் + அன் = படித்தனன்.
5. ஆறுறுப்பு : பகுதி + சந்தி + இடைநிலை + சாரியை + விகுதி + விகாரம்-
வா + ந் + த் + அன் + அன் = வந்தனன்.

வினைமுற்றுப் பகுபதங்களே ஆறுறுப்புகளையும் பெற்றுவரும்.

**10.** **பகுதி விகுதி இடைநிலை சாரியை**
**சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை**
**முன்னிப் புணர்ப்ப முடியும்எப் பதங்களும் (நன். சூ. 133)**

## 7 ஏவல் வினை

61. ஏவல் வினையாவது ஏவல் பொருளில் வரும் வினை. அஃது ஒருமையில் பகுதியளவாயும் இ, ஆ- என்னும் விகுதிகளைப் பெற்றும் இருக்கும்; பன்மையில் உம், ஈர், மின் என்னும் விகுதிகளைப் பெற்றிருக் கும்; கள் என்பது விகுதிமேல் விகுதியா- வரும்.

### உடன்பாட்டு ஏவல்

உ-ம். ஒருமையேவல் - வா, செ-தி, நடவா-, செ-தி என்பதில் த் எழுத்துப் பேறு.
பன்மையேவல் - வாரும், செ-யீர், நடமின், வாருங்கள், நடமின்கள் - கள் விகுதிமேல் விகுதி.

### எதிர்மறை ஏவல்

62. எதிர்மறை ஏவல், ஒருமையில் அல், ஏல் என்னும் விகுதிகளைப் பெற்றும், ஆகார எதிர்மறை இடைநிலையோடு ஏ, இ என்னும் விகுதிகளைப் பெற்றும் இருக்கும்; பன்மையில் அல் என்பதோடு மின் என்னும் விகுதி யையும், ஆகார எதிர்மறை இடைநிலையோடு இர், ஈர் என்னும் விகுதி களையும் பெற்றிருக்கும். கள் என்பது விகுதிமேல் விகுதியா- வரும்.

உ-ம். எதிர்மறை ஏவலொருமை: அஞ்சல், அஞ்சேல்.
செ-யாதே, செ-யாதி - இவற்றுள் த் எழுத்துப்பேறு.

*எதிர்மறை ஏவற்பன்மை:*

செ-யன்மின் = அல் + மின்
செ-யாதிர் = ஆ + இல் } த் எழுத்துப்பேறு.
செ-யாதீர் = ஆ + ஈர் }
செ-யாதீர்கள் = கள் விகுதிமேல் விகுதி.

ஏவுவதெல்லாம் முன்னிலையாரையே யாதலானும், ஏவினபிறகே ஏவின வினை செ-யப்படுதலானும், ஏவல் வினைகளெல்லாம் முன்னிலை யிடத்திற்கும் எதிர்காலத்திற்கும் உரியவாகும்.

## 8. வியங்கோள்வினை

63. வியங்கோள்வினை மரியாதை ஏவல்வினை, இஃது ஐம்பால் மூவிடம் ஈரெண்கட்கும் பொதுவா- வரும்.

(வியம் - ஏவல்; வியங்கொள்ளுவது வியங்கோள்).

64. வியங்கோள் வினை, க, இய, இயர், அ, அல், இ, ஈயர், உம் முதலிய விகுதிகளைப் பெற்று வரும். உம் உலக வழக்கில் மட்டும் வரும்.

உ-ம். செ-க
செ-யிய
செ-யியர்
வாழ
வாழல்
வாழி
நிலீயர்
எழுதவும்
} நான், நாம் நீ, நீர் அவன், அவள், அவர், அது,அவை.

வியங்கேள் வினை, ஏவல், வேண்டுகோள், வாழ்த்தல், வைதல் (சாபம்), வஞ்சினம், வாக்கு முதலிய பல பொருள்களில் வரும்.

(வஞ்சினம் - சபதம்)

உ-ம். வருக - ஏவல்.
தருக - வேண்டுகோள்.
வாழ்க - வாழ்த்தல்.
அழிக - வைதல்.

நான் அவனை வெல்லாவிடின்
அவற்கு அடிமையாக. } வஞ்சினம்.

இத் தொகையை வட்டியும்
அசலுமாகக் கொடுத்துவிடுவேனாக. } வாக்கு.

ஏவல்வினை, வியங்கோள்வினை என்னுமிரண்டும் எப்போதும் முற்றாகவே யிருக்கும்; இவற்றுக்கு எச்சமில்லை.

ஏவலுக்கும், வியங்கோளுக்கும் வேறுபாடு:

| ***ஏவல்*** | ***வியங்கோள்*** |
|---|---|
| 1. முன்னிலைக்கே உரியது. | மூவிடத்திற்கு முரியது. |
| 2. அதிகாரத்தோடு கட்டளையிடுவது. | மரியாதையா- ஏவுவது. |
| 3. ஏவற்பொருளில் மட்டும் வரும். | ஏவல், வாழ்த்தல் முதலிய பல பொருள்களில் வரும். |
| 4.ஒருமை பன்மை என்னும் எண் காட்டும். | ஈரெண்ணுக்கும் பொது. |

## *9. எதிர்மறை வியங்கோள்வினை*

85. **எதிர்மறை வியங்கோள்வினை:** அல் என்னும் எதிர்மறை இடைநிலையும், க என்னும் விகுதியும் பெற்றுவரும்.

உ-ம். செ-யற்க, சொல்லற்க.

**11. கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்**
**இயலும் இடம்பால் எங்கு மென்ப. (நன். சூ. 338)**

## *10. தன்மை முதலிய இடப்பெயர்கள் விரவி வருதல்*

66. சில சொற்றொடர்களில் தன்மை முதலிய பல இடப்பெயர்கள் விரவி ஒரே வினையைப் பயனிலையாகக் கொண்டு முடியும்.

67. தன்மைப் பெயரோடு முன்னிலைப் பெயர் விரவின், அம், ஆம், என்னும் விகுதிகொண்ட தன்மைப் பன்மை வினைமுற்றுகளாலும், படர்க்கைப்பெயர் விரவின், எம், ஏம், ஓம் என்னும் விகுதிகொண்ட தன்மைப் பன்மை வினைமுற்றுகளாலும், முன்னிலை, படர்க்கை ஆகிய ஈரிடப் பெயர்களும் விரவின், கும், டும், தும், றும் என்னும் விகுதிகொண்ட தன்மைப் பன்மை வினைமுற்றுகளாலும் முடிக்கப்படும்.

இத் தன்மைப் பன்மை விகுதிகள், முன்னிலை, படர்க்கை என்னும் ஏனை ஈரிடத்தையும் தம்மோடு உளப்படுத்துகிறதனாலே, உளப்பாட்டுத் தன்மைப் பன்மை யென்று கூறப்படும்.

(உளப்பாடு - உட்படுத்தல்).

உ-ம். நானும் நீயும் பேசினம், பேசினாம்.
நானும் அவனும் பேசினெம், பேசுகின்றேம், பேசுவோம்.
நானும், நீயும், அவனும் காண்கும், கண்டும், காணுதும், சேறும்.

காண்கும் = காண்போம், கண்டும் = கண்டோம்.
காணுதும் = காண்போம், சேறும் = செல்வோம்.

**12. அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்**
**எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்**
**உம்ஊர் கடதற இருபா லாரையும்**
**தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை. (நன். சூ. 332)**

***குறிப்பு:*** உலக வழக்கில் ஓம் என்னும் தன்மைப் பன்மை விகுதி ஒன்றே ஏனை யீரிடத்தையும் உளப்படுத்தும்.

உ-ம். நானும் நீயும் போனோம்.
நானும் அவனும் போனோம்.
நானும் நீயும் அவனும் போனோம்.

68. முன்னிலைப் பெயரோடு படர்க்கைப் பெயர் விரவின் முன்னிலைப் பன்மை வினைமுற்றாலேயே முடிக்கப்படும். இஃது உளப்பாட்டு முன்னிலைப் பன்மை என்று கூறப்படும்.

உ-ம். நீயும் அவனும் போனீர், போனீர்கள்.

**13. முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை (நன். சூ. 334)**

# *11 இடைச்சொல்*

## *ஏகார இடைச்சொல்*

69. 'ஏ' என்னும் இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை என்னும் ஆறு பொருள்களில் வரும்.

உ-ம்.

1. இவனே திருடினான் - இதில் ஏ என்பது ஒரு கூட்டத்தாருள் ஒருவனைப் பிரித்து நிற்றலால் பிரிநிலை.
2. நீயே சொன்னா-? - இதில் நீயே என்பது நீயோ என்று வினாப் பொருள் தருதலால் ஏ, வினா.
3. அறமே, பொருளே, இன்பமே, வீடே எனப் பொருள் நான்கு - இதில் அறமும் பொருளும் இன்பமும் வீடும் என எண்ணுதலால், ஏ, எண்.
4. 'எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே' - இதில் ஏ ஈற்று அசையா- நிற்றலால், ஈற்றசை.
5. செ-யவே செ-தான் - இதில் ஏ தேற்றப் படுத்துகின்றமையால், தேற்றம். (நிச்சயம்).
6. ஏ யே இவளொருத்தி பேடி! - இதில், பிற பொருளில்லாமல் இசையை மட்டும் நிறைத்து நிற்றலால் இசைநிறை.

ஏகாரம் விளி, வியப்பு, உயர்வு, இழிவு முதலிய பொருள்களில் வருவது முண்டு.

உ-ம். ஏ தம்பீ! - விளி. புலவர்க்கே தெரியாதே - உயர்வு.
ஏ அப்பா! - வியப்பு. சிறு பிள்ளையே செ-து விடுமே இழிவு.

**14. பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்**
**இசைநிறை எனஆறு ஏகா ரம்மே. (நன். சூ. 422)**

## ஒகார இடைச்சொல்

70. 'ஓ' என்னும் இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிநிலை என்னும் எட்டுப் பொருள்களில் வரும்.

உ-ம்.

1. படிக்கவோ வந்தா-? - இதில் படிக்கவோ என்பது படித்தற் கன்று; விளையாட வந்தா- என்று ஒழிந்த சொற்களைத் தருதலால், ஓ, ஒழியிசை. (இசை - சொல்).
2. நீயோ இராமன்? - இதில், ஓ வினாப் பொருள் தருதலால், வினா.
3. ஓ ஓ கொடியது! கொடிதம்மா! - இதில் ஓ இழிவு சிறப்புப்பற்றி வந்தது. சிறப்பு - மிகுதி. ஓ ஓ பெரியர்! - இதில் ஓ உயர்வு சிறப்புப்பற்றி வந்தது.
4. அவனோ கேட்பான் - இதில் அவன் கேளான் என்று பொருள்படுதலால், ஓ எதிர்மறை.
5. அலியை நோக்கி, இது ஆணோ அதுவுமன்று; பெண்ணோ அதுவுமன்று என்றால் அலி என்பது தெரிய நிற்றலின், ஓ தெரிநிலை.
6. ஓ ஓ கெட்டேன்! - இதில் கழிந்த (கடந்த) செ-திக்கு வருந்து தலால், ஓ கழிவு.
7. பார்மினோ? இதில் ஓ வேறொரு பொருளுமின்றி அசையாகவே நிற்றலால், அசைநிலை.
8. கல் கனமானது, மணல் நிறையுள்ளது, மூடனுடைய மனமோ அவ் விரண்டினும் கனமானது - இதில் ஓ பல பொருள்களில் ஒன்றைப் பிரித்து நிற்றலால், பிரிநிலை.

ஓகாரம் ஐயம், ஓசை முதலிய பொருள்களிலும் வரும்.

உ-ம். அது கயிறோ, பாம்போ - ஐயம்
ஓவென் றலறினான் - ஓசை.

**15. ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை**
**கழிவசை நிலைபிரிப் பெனஎட் டோவே. (நன். சூ. 423)**

## உம்மை இடைச்சொல்

71. 'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருளில் வரும்.

உம்மை என்பதில் ஐ சாரியை.

(எச்சம் இறந்தது தழீஇய எச்சம், எதிரது தழீஇய எச்சம் என இரு வகைப்படும். இறந்த (கடந்த) செ-தியைத் தழுவுவது இறந்தது தழீஇய எச்சம். எதிரும் (இனிமேல் வரும்) செ-தியைத் தழுவுவது எதிரது தழீஇய எச்சம். (தழீஇய - அளபெடை. எஞ்சுவது (குறைவது). எச்சம்).

உ-ம். பாலும் உண்டான் - இதில் பாலுண்ணுமுன் சோறும் உண்டான் என்று பொருள்படின் இறந்தது தழீஇய எச்சம். (பாலுண்டபின் சோறு முண்பான் என்று பொருள்படின், எதிரது தழீஇய எச்சம்).

உ-ம்.

1. நாள் தவறினும் நாத்தவறான் - இதில், நாள் தவறாது என்று பொருள்படுதலால், உம்மை எதிர்மறை.
2. புலவர்க்கும் எட்டாப் பொருள் - இதில் பல நூல்களையுங் கற்ற புலவர்க்கும் என்று புலவரை உயர்த்துதலால், உம் உயர்வுசிறப்பு. (சிறப்பு - மிகுதி).
   புலையனும் விரும்பாப் புன்புலால் யாக்கை - இதில் மாட்டிறைச் சியைத் தின்னும் புலையனும் என்று புலையனை இழிவு படுத்து தலால், உம் இழிவுசிறப்பு.
3. அது சிப்பியாகவும் இருக்கும்; வெள்ளியாகவு மிருக்கும் - இதில் ஒன்றைத் துணிந்து கூறாமையின் ஐயம்.
4. இராமனும் வருந்தினான் - இதில் இராமன் வருந்துமுன் இலக் குமணனும் வருந்தினான் என்று பொருள்படின் இறந்தது தழீஇய எச்சவும்மை; (இராமன் வருந்தினபின் இலக்குணமனும் வருந்தினான் என்று பொருள்படின் எதிரது தழீஇய எச்ச வும்மை.
5. இரு கண்ணுஞ் சிவந்தன - இதில் உம் முற்றுப் பொருளைத் தருதலின் முற்றும்மை.
6. நிலமும், நீரும், தீயும், வளியும், வெளியுமெனப் பூதமைந்து - இதிற் பொருள்களை யெண்ணுதலால் எண்ணும்மை.
7. அலியை நோக்கி ஆணுமன்று, பெண்ணுமன்று என்று சொல்லின், அலியென்பது தெரிய நிற்றலின் தெரிநிலை.

8. கோவிற்பட்டி நகருமாயிற்று - இதில் சிற்றூராயிருந்த கோவிற்பட்டி இப்போது நகராயிற்று. என்று ஆக்கப் பொருள் தருதலால் ஆக்கம். இனி, இதற்கு எதிராக, விஜயநகரம் சிற்றூருமாயிற்று. என்பதில், ஒருகாலத்தில் மாநகரமாயிருந்த விஜயநகரம் இப்போது சிற்றூராயுள்ளது என்று பொருள்படுவது கேடு. உம்மை விரைவுப் பொருளிலும் வரும்.

உ-ம். வந்ததும் சென்றான்.

**16. எதிர்மறை சிறப்பையம் எச்சமுற் றளவை**
**தெரிநிலை ஆக்கமோ டும்மை எட்டே. (நன். சூ. 425)**

## 12. உரிச்சொல்

72. உரிச்சொல் பெயரைத் தழுவின் பெயருரிச்சொல் என்றும், வினையைத் தழுவின் வினையுரிச்சொல் என்றும் கூறப்படும்.

உ-ம். வடிவேல்
கழிமகிழ்ச்சி
கடிநகர்
} வடி, கழி, கடி பெயருரிச்சொற்கள்.

வடி = கூர்மை, கழி = மிகுதி, கடி= காவல்.

உ-ம். சால வுண்டான்.
நனி வளர்ந்தான்.
தவப் பெற்றான்.
} சால, நனி, தவ வினையுரிச்சொற்கள்.

சால, நனி, தவ இம் மூன்றும் மிகுதிப் பொருளன.

## 13. பொதுவியல்

73. சொற்கள் பொருளுணர்த்தும் முறை குறிப்பு, வெளிப்படை என இருவகைப்படும். (குறிப்பு - மறைவு, வெளிப்படை - விளக்கம்).

### குறிப்பு

74. ஒன்றொழி பொதுச்சொல், விகாரம், தகுதி, ஆகுபெயர், அன்மொழித்தொகை, குறிப்புவினை, முதற்குறிப்பு, தொகைக் குறிப்பு முதலிய பல சொற்கள் குறிப்பா-ப் பொருளுணர்த்தும்.

உ-ம். ஒன்றொழி பொதுச்சொல்: ஒன்றொழி பொதுச்சொல்லாவது: ஆண், பெண் என்னும் இருபாற்கும் பொதுவான சொல். அவற் றுள் ஒன்றை யொழித்து மற்றொன்றைக் காட்டுவது.

மாடு ஈன்றது - இதில் மாடு என்பது காளையை நீக்கிப் பசுவைக் குறித்தது.

மக்கள் போர் செ-தார் - இதில் மக்கள் என்பது பெண்டிரை நீக்கி ஆடவரைக் குறித்தது.

***விகாரம்:*** விகாரமாவது சொல்லின் வேறுபாடு. அது வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் என்னும் அறுவகை விகாரங்களும், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என்னும் மூவகைக் குறைகளுமாகும். இவை பெரும்பாலும் செ-யுட்கே யுரியன.

**"கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்**
**உற்றா ருலகத் தவர்"**

- இதில் கற்றா (கன்று + ஆ)

என்பது கற்றா என வலித்தது.

"கன்றா - கன்றை யுடைய பசு'

'மரை மலர்' என்பதில் தாமரை முதற் குறைந்து மரை என நின்றது.

***தகுதி:*** தகுதி என்பது ஒருவகை வழக்கு. அது தகாத சொல்லை நீக் கித் தகுந்த சொல்லால் ஒரு பொருளைக் குறிப்பது. சாவு என்னும் அமங் கலச் சொல்லை நீக்கிப் பெரும்பிரிவு என்னும் சொல்லால் சாவைக் குறிப் பது தகுதி வழக்கு.

***ஆகுபெயர்:*** ஆகுபெயராவது ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புபட்ட மற்றொன்றுக்கு ஆகி வருவது.

காளை என்பது காளைபோன்ற வீரனைக் குறிப்பது ஆகுபெயர்.

***அன்மொழித் தொகை:*** ஒரு தொகைச் சொல்லின் ஈற்றில் அல்லாத மொழி ஒன்று தொக்கு நிற்பது அன்மொழித் தொகை. பைந்தொடி வந்தாள் என்பதில் பைந்தொடி என்பது பசுமையான வளையல்களை யணிந்த பெண் ணைக் குறித்தது.

***வினைக்குறிப்பு அல்லது குறிப்பு வினை:*** குறிப்பு வினையாவது குறிப்பாக வினையைக் காட்டும் சொல்.

பண்டு செல்வன் - இதில் பண்டு என்னும் குறிப்பால், செல்வன் என்னும் பெயர் செல்வனாயிருந்தான் என்று வினைப்பொருளைக் குறிப்பா-க் காட்டிற்று.

***முதற்குறிப்பு:*** ஒரு நூலில் முதலாவதுள்ள சொல் அல்லது சொற் றொடர் அந் நூலைக் குறிப்பது முதற்குறிப்பாகும்.

'கொன்றை வேந்தன்' என்னும் சொற்றொடர் ஔவையார் இயற்றிய ஒரு சிறு நீதிநூலில் முதலிலுள்ளதால், அந் நூலுக்கே பெயராயிற்று.

**தொகைக் குறிப்பு:** ஒரு தொகையினாலேயே அத் தொகையை யுடைய பொருளைக் குறிப்பது தொகைக் குறிப்பாகும்.

'உர னென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்' - இதில் ஐந்து என்னும் தொகை ஐம்புலன்களைக் குறித்தது.

***பிறகுறிப்புகள்:***

குழைகொண்டு கோழி யெறியும் வாழ்க்கையர் - செல்வர்;
குழை - காது நகை.
செஞ்செவியர் - நகை யணிந்த செவியர்.
கருங்கை - வேலையில் அடிப்பட்ட கை.
பாயா வேங்கை - வேங்கைமரம்.
ஈர்ங்கை விதிராதவன் - உலோபி.

## *வெளிப்படை*

75. குறிப்பாற் பொருளுணர்த்தாத சொற்களெல்லாம் வெளிப் படையாம்.

உ-ம். மரம், மாடு
வந்தான், சென்றான்.

**17. ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி**
**ஆகு பெயர்அன் மொழிவினைக் குறிப்பே**
**முதல்தொகை குறிப்போ டின்ன பிறவும்**
**குறிப்பிற் றருமொழி அல்லன வெளிப்படை. (நன். சூ. 269)**

## *14 வழக்கியல்*

76. வழக்கியலாவது சொற்கள் வழங்கும் முறை, அஃது **இயல்பு வழக்கு, தகுதி வழக்கு** என இருவகைப்படும்.

(வழங்குவது - வழக்கு. வழங்குதல் - கூறுதல் அல்லது கூறப்படுதல்)

## *இயல்பு வழக்கு*

77. இயல்பு வழக்காவது ஒரு பொருளுக்கு இயல்பாயுரிய சொல்லை அப் பொருளில் வழங்குவது.

78. இயல்பு வழக்கு இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என மூவகைப்படும்.

79. இலக்கணமுடையது என்பது இலக்கண முறைப்படி சொற்கள் வழங்குவது.

உ-ம். மகன், மரம், மாடு, மண்.
வந்தான், சென்றான், நில்.

80. இலக்கணப்போலி என்பது இலக்கண மில்லாவிடினும், இலக் கண முடையதுபோலச் சான்றோரால் வழங்கப்படுவது. அது முறைமாற் றாகவும், உடம்படுமெ-ம் மாற்றாகவும் இருக்கும்.

முறைமாற்று - சொற்கள் முன்பின்னாக முறைமாறி வருவது.

உ-ம். இல் + முன்= முன்னில் - முன்றில் - முற்றம்
இல் + வா- = வாயில் - வாயல் - வாசல்
நகர் + புறம் = புறநகர்
நுதல் + கண் = கண்ணுதல் (சிவபெருமான்)

சொற்கள் மட்டுமேயன்றி எழுத்துகளும் முறைமாறும்

உ-ம். விசிறி - சிவிறி; மிஞிறு (வண்டு) - ஞிமிறு. உடம்படுமெ-ம் மாற்று, ஒருடம்படுமெ-க்கு மற்றோருடம்படு மெ- வருவது.

உ-ம். கோ + இல் = கோயில்
பொது + இல் = பொதியில் } வகர உடம்படு மெ-க்கு யகர உடம்படுமெ-

81. மரூஉ என்பது சொற்கள் மருவி வழங்குவது. (மருவுதல் - விரிதல்.)

உ-ம்.

| **சொல்** | **மரூஉ** |
|---|---|
| அருமை வந்த | அருமந்த |
| சோழநாடு | சோணாடு |
| தஞ்சாவூர் | தஞ்சை |
| பொழுது | போழ்து, போது |
| யார் | ஆர் |
| காமம் மருவு | காமரு, காமர் |

## *தகுதி வழக்கு*

82. தகுதி வழக்காவது சொல்லத்தகாத சொற்களை நீக்கிச் சொல்லத் தகுந்த சொற்களாற் பொருள்களைக் குறிப்பிப்பது.

83. அஃது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூவகைப்படும்.

84. இடக்கரடக்கல் என்பது இடக்கரான பொருளை நல்ல சொற் களால் அடக்கிச் சொல்லுதல்.

(இடக்கர் - தூஷணம், இழிசொல். இடக்கு - இடக்கர்; அர் சாரியை.)

உ-ம். கால் கழுவி வந்தேன்.
ஒன்றுக்கு இரண்டுக்குப் போகும் இடம்.
வெளியே போயிருக்கிறார்.

85. மங்கலம் என்பது அமங்கலமான பொருள்களை மங்கலமான சொற்களாற் சொல்லுதல். (மங்கலம் - நன்மை)

| உ-ம். | ***அமங்கலப்பொருள்*** | ***மங்கலச்சொல்*** |
|---|---|---|
| | செத்தார் | சிவபதமடைந்தார், துஞ்சினார். |
| | தாலியறுந்தது | தாலிபெருகிற்று. |
| | பொ-யான வுடம்பு | மெ-, காயம். |

86. குழூஉக்குறி என்பது ஒரு குழுவார் பிறர்க்குப் பொருள் விளங்கா வண்ணம் மறைபொருளதாகத் தமக்குள்மட்டும் வழங்கும் குறி.

(குழூஉ - கூட்டம். குறி - சொல்.)

| உ-ம். | ***குழூஉ*** | ***குழூஉக்குறி*** | ***பொருள்*** |
|---|---|---|---|
| | குடியர் | கருப்பு | சாராயம். |
| | வணிகர் | குணவெள்ளை | மூன்று ரூபா-. |
| | மருத்துவர் | காட்டுத் திருடி | கள்ளி. |

**18.** **இலக்கண முடைய திலக்கணப் போலி**
**மரூஉஎன் றாகும் மூவபை இயல்பும்**
**இடக்க ரடக்கல் மங்கலம் குழூஉக்குறி**
**எனமுத் தகுதியோ டாறாம் வழக்கியல்.** **(நன். சூ. 267)**

# *புணரியல்*

## *வேற்றுமைவழி, அல்வழி*

87. புணர்ச்சி - வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இரு வகைப்படும்.

## *1. வேற்றுமைப் புணர்ச்சி*

88. வேற்றுமைப் புணர்ச்சியாவது இருசொற்கள், இடையில் வேற்று மை தோன்றப் புணரும் புணர்ச்சி. அவ் வேற்றுமை உருபு தொக்கும், உருபு விரிந்தும் நிற்கும். உருபு தொக்கது வேற்றுமைத் தொகையென்றும், உருபு விரிந்தது வேற்றுமை விரி யென்றுங் கூறப்படும்.

89. வேற்றுமைத் தொகையும் வேற்றுமை விரியும் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை ஆறு வகைப்படும். முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபின்மையால், அவற்றுக்குத் தொகை விரிகள் இல்லை. அவை அல்வழியிற் சேர்க்கப்படும்.

| உ-ம். | *வேற்றுமை* | *தொகை* | *விரி* |
|---|---|---|---|
| | இரண்டாம் வேற்றமை | சோறுண்டான் | சோற்றையுண்டான் |
| | மூன்றாம் வேற்றுமை | கல்லெறிந்தான் | கல்லாலெறிந்தான் |
| | நான்காம் வேற்றுமை | ஊர் போனான் | ஊருக்குப்போனான் |
| | ஐந்தாம் வேற்றுமை | மலைவீழருவி | மலையின் வீழருவி |
| | ஆறாம் வேற்றுமை | கடவுளருள் | கடவுளின் அருள் |
| | ஏழாம் வேற்றுமை | ஊர் புகுந்தான் | ஊர்க்குட்புகுந்தான் |

வேற்றுமை யுருபோடு வேறொரு சொல்லும் தொக்கு நிற்பின் உரு பும் பயனும் உடன்தொக்க தொகை எனப்படும்.

உ-ம். பாற்குடம் - பாலையுடைய குடம்; இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

## *2. அல்வழிப் புணர்ச்சி*

90. அல்வழிப் புணர்ச்சியாவது வேற்றுமை அல்லாதவழிப் புணர்ச்சி.

91. அல்வழியிற் புணரும் தொடர்மொழிகள் தொகை நிலைத் தொடரென்றும், தொகாநிலைத் தொடரென்றும் இருவகைப்படும்.

92. ஒரு தொடருக் கிடையில் ஏதேனும் ஒரு சொல் தொக்கு நின்றால், தொகைநிலைத்தொடர்; தொகாது நின்றால் தொகாநிலைத்தொடர். தொகைநிலைத்தொடர் தொகைநிலை என்றும், தொகையென்றும், தொகாநிலைத் தொடர் தொகாநிலை என்றும், தொடர் என்றும், சுருக்கிக் கூறப்படும்.

## *தொகைநிலைத் தொடர்*

93. தொகைநிலைத் தொடர் வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஐந்து வகைப்படும்.

(1) ***வினைத்தொகை:*** பெயரெச்சம் பகுதியளவாக நின்று பெயரைத் தழுவுமாயின் வினைத்தொகையாம். இதில் இடைநிலையும் விகுதியும் தொக்கு வரும்.

உ-ம். வருவா-, சுடுசோறு, குடிநீர், குளிர்காற்று.
வினைத்தொகை, இடைநிலை யின்மையால் முக்காலத்திற்கும் பொதுவாயிருக்கும்.

உ-ம். உண்பொருள் - உண்ட பொருள்.
உண்கின்ற பொருள்.
உண்ணும் பொருள்.

(2) **பண்புத்தொகை** - (பண்புப் பெயருக்குப் பின்) ஆகிய என்னும் பண்புருபு தொக்கு நிற்பது, பண்புத் தொகை.

உ-ம். செந்தமிழ் - செம்மையாகிய தமிழ்.

ஒரே பொருளில் இருபெயர் ஒன்று பொதுவும் ஒன்று சிறப்புமாக ஒட்டி வருவது இருபெயரொட்டுப் பண்புத் தொகையாம். இதில் சிறப்புப் பெயர் முன்னும், பொதுப்பெயர் பின்னுமிருக்கும்.

உ-ம். பனைமரம் - பனையாகிய மரம்.

(3) **உவமைத்தொகை** - போல என்னும் உவமையுருபு தொக்கு நிற்பது உம்மைத் தொகை.

உ-ம். புலிபா-ந்தான் - புலிபோலப் பா-ந்தான்.

(4) **உம்மைத்தொகை** - உம் என்னும் இடைச்சொல் தொக்கு நிற்பது உம்மைத் தொகை.

உ-ம். சேர சோழ பாண்டியர் - சேரனும் சோழனும் பாண்டியனும்.

(5) **அன்மொழித் தொகை:** அல்லாத மொழி தொக்கு நிற்பது அன் மொழித்தொகை. அது வேற்றுமைத் தொகை வினைத்தொகை முதலிய ஏனை ஐந்து தொகைகளின் அடியாகப் பிறக்கும்.

உ-ம். பூங்குழல் வந்தாள் - பூவையணிந்த குழலை யுடையவள் வந் தாள்.
பூங்குழல் என்பதில் உடையவள் என்னும் அல்லாத மொழி தொக்கது.
இது வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

## *தொகாநிலைத் தொடர்*

94. **தொகாநிலைத் தொடர்:** எழுவா-த் தொடர், விளித் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற் றொடர், அடுக்குத்தொடர் என ஒன்பது வகைப்படும்.

1. எழுவா- முந்திவரின், எழுவா-த் தொடர்.
   உ-ம். இராமன் வந்தான்.

2. விளிப்பெயர் முந்திவரின், விளித்தொடர்.
   உ-ம். இராமா! வா.

3. பெயரெச்சம் முந்திவரின், பெயரெச்சத்தொடர்.
   உ-ம். வந்த பையன்.

4. வினையெச்சம் முந்திவரின், வினையெச்சத்தொடர்.
   உ-ம். கற்க வந்தான்.

5. தெரிநிலை வினைமுற்று முந்திவரின், தெரிநிலை வினைமுற்றுத் தொடர்.
   உ-ம். வந்தான் இராமன்.

6. குறிப்பு வினைமுற்று முந்திவரின், குறிப்பு வினைமுற்றுத் தொடர்.
   உ-ம். இல்லை பொருள்.

7. இடைச்சொல் முந்திவரின், இடைச்சொற்றொடர்.
   உ-ம். மற்றொன்று.

8. உரிச்சொல் முந்திவரின், உரிச்சொற்றொடர்.
   உ-ம். கழிநெடில்.

9. சொற்கள் அடுக்கிவரின், அடுக்குத்தொடர்.
   உ-ம். போ போ.

95. மேற்காட்டிய ஒன்பது தொடர்களுள் முதலெட்டும், தழுவு தொடரும், இறுதியொன்றும் தழாத்தொடருமாகும். தழுவு தொடராவது, நிலைமொழி வருமொழியோடு இலக்கணத்திற் சம்பந்தப்பட்டிருப்பது. தழாத் தொடராவது அங்ஙனம் சம்பந்தப்படாதிருப்பது.

உ-ம். இராமன் வந்தான் - தழுவு தொடர். (எழுவா-த் தொடர்)

பாம்பு பாம்பு - தழாத் தொடர் (அடுக்குத் தொடர்). வேற்றுமைத் தொடராறும், தொகைநிலைத் தொடர் ஐந்தும், தழுவு தொடர்களே. தொகை நிலைத் தொடர் ஐந்தும், தொகாநிலைத் தொடர் ஒன்பதுமாக மொத்தம் அல் வழித் தொடர்கள் பதினான்காகும்.

**19. வேற்றுமை ஐம்முதல் ஆறாம் அல்வழி**
**தொழில்பண் புவமை உம்மை அன்மொழி**
**எழுவா— விளிஈ ரெச்சம்முற் றிடையுரி**
**தழுவு தொடர்அடுக் கெனஈ ரேழே. (நன். சூ. 152)**

சூத்திரத்தில், மற்றவற்றையெல்லாம் தழுவுதொடர் என்று கூறின தனால் அடுக்குத்தொடர், தழாத்தொடர் என்றறியப்படும்.

## இயல்பு புணர்ச்சி

### i. ஆகாரத்தின் முன் வல்லினம்

96. அல்வழியில், ஆ, மா, ஆமா என்னும் பெயர்களுக்கு முன்னும், மியா என்னும் முன்னிலை யசைக்கு முன்னும், ஆகாரவீற்று வினைமுற்றுக்கு முன்னும் வரும் வல்லினம் இயல்பாகும்.

ஆ - பசு. மா - விலங்கு, மான். ஆமா - காட்டுப்பசு.

உ-ம். ஆ + சிறிது = ஆசிறிது.
மா + பெரிது = மாபெரிது.
ஆமா + குறிது = ஆமா குறிது.
} ஆ, மா, ஆமா முன் வலி இயல்பு.
கேண்மியா + சாத்தா = கேண்மியா. சாத்தா - மியாமுன் வலி இயல்பு.
ஓடா + குதிரைகள் = ஓடா. குதிரைகள் - முற்றுமுன் வலி இயல்பு.

**20. அல்வழி ஆமா மியாமுற்று முன்மிகா. (நன். சூ. 171)**

### ii. குற்றியலுகரத்தின் முன் வல்லினம்

97. அல்வழியில் வன்றொடரொழிந்த மற்ற ஐந்து தொடர்க் குற்றியலுகரத்தின் முன்னும் வரும் வல்லினம் இயல்பாம்.

உ-ம். மாடு + பாய்ந்தது = மாடுபாய்ந்தது - நெடிற்றொடர்.
அஃது + சென்றது = அஃது சென்றது - ஆய்தத்தொடர்.
தராசு + தாழ்ந்தது = தராசு தாழ்ந்தது - உயிர்த்தொடர்.
வண்டு + கரிது = வண்டு கரிது - மென்றொடர்.
சார்பு + தீர்ந்தது = சார்பு தீர்ந்தது - இடைத்தொடர்.

98. மென்றொடர்க் குற்றியலுகர மொழிகள் இடப்பொருளுணர்த்தும் சுட்டுச்சொற்களும், வினாச் சொற்களுமாயின், வருமொழி முதலிலுள்ள வல்லினம் மிகும்.

உ-ம். அங்குச் சென்றான்.
எங்குச் சென்றான்.
எங்குப் பெற்றான்?
யாங்குப் பெற்றான்?

99. அல்வழியில், வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் மிகும்.

உ-ம். எழுத்து + தெரியும் = எழுத்துத் தெரியும்.
பட்டு + கொண்டான் = பட்டுக்கொண்டான்.

**21. வன்றொட ரல்லன முன்மிகா அல்வழி (நன். சூ. 181)**

100. வேற்றுமை வழியில் இடைத்தொடர், ஆ-தத் தொடர், ஒற்று இடையில் மிகாத நெடிற்றொடர், ஒற்று இடையில் மிகாத உயிர்த்தொடர் ஆகிய இவற்றுக்கு முன் வரும் வல்லினம் இயல்பாம். (ஒற்று - மெ-.)

உ-ம். சார்பு + கெடுத்தான் = சார்புகொடுத்தான். - இடைத்தொடர்.
பஃது + கொடு = பஃதுகொடு -ஆ-தத்தொடர்.
மாது + கற்பு = மாது கற்பு - நெடிற்றொடர்.
வரகு + கொ-தான் = வரகு கொ-தான் - உயிர்த்தொடர்.

101. வேற்றுமை வழியில் வன்றொடர் மென்றொடர் முன்னும், ஒற்று இடையில் மிகும் நெடிற்றொடர் உயிர்த்தொடர் முன்னும் வரும் வல்லினம் மிகும்.

உ-ம். பட்டு + சட்டை = பட்டுச் சட்டை - வன்றொடர்.
வண்டு + கால் = வண்டுக் கால் - மென்றொடர்.
காடு + பன்றி = காட்டுப் பன்றி - நெடிற்றொடர்.
கயிறு + பை = கயிற்றுப் பை - உயிர்த்தொடர்.

102. வன்றொடர்க் குற்றியலுகர மொழிகள் பெயர்ச்சொற்களாயிருப்பின் அவற்றின் முன் வரும் வலி மிகும்; ஏவல் வினைச்சொற்களாயிருப்பின், வலி இயல்பாம்.

உ-ம். நாட்டுப்பொருள் - பெயர்.
நாட்டுபொருள் - வினைத்தொகை அல்லது ஏவல் வினை.

**22. இடைத்தொடர் ஆ–தத்தொடர்ஒற் றிடையின்**
**மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை (நன். சூ. 182)**

### iii. பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களின்முன் வல்லினம்

103. இருவழியிலும் இருதிணைப் பொதுப்பெயர்கட்கும் உயர்திணைப் பெயர்கட்கும் ஈற்றிலுள்ள மெ-கள், வலிவரின் இயல்பாம்; அப் பெயர்களின் ஈற்றிலுள்ள உயிரின் முன்னும் யகர ரகர மெ-களின் முன்னும் வரும் வலி மிகா; சில உயர்திணைப் பெயர்கள் நாற்கணமும் வரப் பலவாறு விகாரப் படுவது முண்டு.

நாற்கணம் - வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் என்பன.

**அல்வழி**

உ-ம். ஆண் + பெரியன் = ஆண் பெரியன்.
பெண் + சிறிது = பெண் சிறிது.
சாத்தன் + கரியன் = சாத்தன் கரியன்.
சாத்தன் + குறிது = சாத்தன் குறிது.

**வேற்றுமை வழி**

ஆண் + குரல் = ஆண்குரல்.
பெண் + கை = பெண் கை.
சாத்தன் + பலகை = சாத்தன் பலகை.
சாத்தன் + பக்கம் = சாத்தன் பக்கம்.

பொதுப்பெய ரீற்றுமெ- வலிவர இயல்பாயின.

**அல்வழி**

மகள் + சென்றாள் = மகள் சென்றாள்.
அரசன் + பணித்தான் = அரசன் பணித்தான்.

**வேற்றுமை வழி**

குரிசில் + கை = குரிசில் கை.
தையல் + குணம் = தையல் குணம்.

உயர்திணைப் பெயரீற்று மெ- வலிவர இயல்பாயின.

**அல்வழி**

பிள்ளை + படித்தான் = பிள்ளை படித்தான்.
தா- + பறந்தது = தா- பறந்தது.
நீர் + சென்றீர் = நீர் சென்றீர்.

**வேற்றுமை வழி**

சாத்தி + படிப்பு = சாத்தி படிப்பு.
சாத்தி + திறமை = சாத்தி திறமை.
தா- + பேச்சு = தா- பேச்சு.
தா- + பெருமை = தா- பெருமை.

பொதுப்பெயரீற்று உயிர், ய, ர முன் வலி மிகாவாயின.

### அல்வழி

நம்பி + சென்றான் = நம்பி சென்றான்.
சே- + படித்தான் = சே- படித்தான்.
புலவர் + பாடினார் = புலவர் பாடினார்.

### வேற்றுமை வழி

நம்பி + பொருள் = நம்பிபொருள்.
சே- + திறமை = சே-திறமை
புலவர் + பெருமை = புலவர்பெருமை.

உயர்திணைப் பெயரீற்று உயிர் ய ர முன் வலி மிகாவாயின.

### அல்வழி

பாண்டியன் + அரசன் = பாண்டியவரசன்.
சேரன் + சோழன் = சேரசோழர்.
சடையப்பன் + வள்ளல் = சடையப்பவள்ளல்

### வேற்றுமை வழி

தமிழர் + அரசு = தமிழவரசு, தமிழரசு.
மகள் + பேச்சு = மகட்பேச்சு.
கம்பன் + ராமாயணம் = கம்ப ராமாயணம்.

உயர்திணைப் பெயர்கள் நாற்கணத்தின் முன் பலவாறு விகாரமாயின.

***குறிப்பு:*** சாத்தன், சாத்தி யென்ற உயர்திணைப் பெயர்கள் முன்காலத்தில் முறையே ஒரு காளைக்கும், ஒரு பசுவிற்கும் வழங்கி வந்தமையாற் பொதுப்பெயராயின.

**23. பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்க ளீற்றுமெ–**
**வலிவரின் இயல்பாம்; ஆவி யரமுன்**
**வன்மை மிகாசில விகாரமாம் உயர்திணை. (நன். சூ. 159)**

## *விகாரப் புணர்ச்சி*

### i. *மிகுதல்*

1. எகர வினா முன்னும் முச்சுட்டின் முன்னும் நாற்கணமும் புணர்தல்.

104. எகர வினாவின் முன்னும், முச்சுட்டின் முன்னும், உயிரும் யகரமும் வரின், இடையில் வகரமெ- தோன்றும்; பிறமெ-கள் வரின், அவ்வம் மெ-கள் மிகும்; செ-யுளிற் சுட்டு நீளின். வகரமெ- வருமிடத்து யகர மெ- தோன்றும்.

சுட்டெழுத்துகளும், வினாவெழுத்துகளும் இடைச்சொற்களாத லின், அவை புணரும் புணர்ச்சியெல்லாம் அல்வழியே யாகும்.

உ-ம்.

எ + இடம் = எவ்விடம்?
அ + உயிர் = அவ்வுயிர்
இ+ அணி = இவ்வணி
} எகர வினா முன்னும்,முச்சுட்டின் முன்னும் உயிர் வர வகரம் தோன்றிற்று.

எ + யானை = எவ்யானை
அ + யானை = அவ்யானை
இ + யானை = இவ்யானை
உ + யானை = உவ்யானை
} எகர வினா முன்னும், முச்சுட்டின் முன்னும் யகரம் வர வகரம் தோன்றிற்று.

எ + குலம் = எக்குலம்?
அ + படி = அப்படி
இ + மாடு = இம்மாடு
உ + வகை = உவ்வகை
அ + இடை = ஆயிடை.
} எகர வினா முன்னும், முச்சுட்டின் முன்னும் பிற மெ-கள் வந்து மிக்கன. செ-யுளிற் சுட்டு நீண்டு யகரமெ- தோன்றிற்று.

**24. எகர வினாமுச் சுட்டின் முன்னர்**
**உயிரும் யகரமும் எ—தின் வவ்வும்,**
**பிறவரின் அவையும்; தூக்கிற் சுட்டு**
**நீளின் யகரமும், தோன்றுதல் நெறியே. (நன். சூ. 163)**

ii. சில உயிரீற்று மரப்பெயர் முன் வல்லினம்

105. வேற்றுமை வழியில், சில மரப்பெயர்கள் முன் வலிவரின், அதற் கின மெல்லினம் தோன்றும்.

உ-ம். மா + கா- = மாங்கா-.
விளா + பழம் = விளாம்பழம்.

**25. மரப்பெபயர் முன்னர் இனமெல் லெழுத்து**
**வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே. (நன். சூ. 166)**

## 2. கெடுதல்

அத்துச் சாரியையின் முதல் கெடுதல்:

106. நிலைமொழி யீற்றிலுள்ள அகரவுயிர் முன் அத்துச் சாரியையின் அகரங் கெடும்.

உ-ம். மர(ம்) + அத்து = மரத்து.
பட்டின (ம்) + அத்து = பட்டினத்து.

**26. அத்தின் அகரம் அகரமுனை இல்லை. (நன். சூ. 252)**

## 5. இயல்பு புணர்ச்சியும் விகாரப்புணர்ச்சியும்

### 1. திரிதலும் இயல்பும்

**i. ணகர னகர ஈறு**

107. வேற்றுமை வழியில் நிலைமொழியீற்றிலுள்ள ணகர னகரங்கள், வருமொழி முதலில் வல்லினம் வரின், முறையே டகரமாகவும், றகரமாக வும் திரியும்; மெல்லினமும், இடையினமும் வரின் இயல்பாகும்; அல்வழி யில் மூவின மெ-கள் வரினும் இயல்பேயாகும்.

உ-ம்.

| | |
|---|---|
| மண் + குடம் = மட்குடம்.<br>பொன் + தகடு = பொற்றகடு. | வேற்றுமை வழியில் ண, ன, வல்லினம் வர, ட, ற ஆயின. |
| மண் + மேடு = மண்மேடு.<br>மண் + வேலை = மண்வேலை.<br>பொன் + மலர் = பொன்மலர்.<br>பொன் + விலை = பொன்விலை. | வேற்றுமை வழியில் ண, ன, மெல்லினமும் இடையினமும் வரஇயல்பாயின. |
| மண் + பொரிந்தது = மண்பொரிந்தது.<br>மண் + மறைந்தது = மண் மறைந்தது.<br>மண் + வெடித்தது = மண்வெடித்தது.<br>பொன்+பெருத்தது = பொன்பெருத்தது<br>பொன் + மலர்ந்தது = பொன் மலர்ந்தது<br>பொன் + விளைந்தது = பொன்விளைந்தது. | அல்வழியில் ண ன மூவினமும் வர இயல்பாயின. |

**27. ணனவல் லினம்வாட் டறவும் பிறவரின்**
**இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு, அல்வழிக்**
**களைத்துமெ– வரினும் இயல்பா கும்மே. (நன். சூ. 209)**

**ii. லகர ளகர ஈறு**

108. வேற்றுமை வழியில் நிலைமொழியீற்றிலுள்ள லகர ளகர மெ-கள், வருமொழி முதலில் வல்லினம் வரின் முறையே றகரமாகவும் டகர மாகவும் திரியும்; அல்வழியில் விகற்பமாக வரும்; இருவழியிலும், மெல் லினம் வரின், முறையே ன, ண ஆகத் திரியும்: இடையினம் வரின் இயல்பாம்.

விகற்பம் - விகற்பித்தல், அதாவது இயல்பாகவும் விகாரமாகவும் வருதல்.

உ-ம். கல் + குடம் = கற்குடம்.<br>கள் + குடம் = கட்குடம். } வேற்றுமை வழியில், ல,ள வலி வர ற ட வாகத் திரிந்தன.

கால் + பெரிது = கால்பெரிது, காற்பெரிது.<br>வாள் + பெரிது = வாள்பெரிது, வாட்பெரிது. } அல்வழியில், ல, ள வலிவர விகற்பித்தன.

கல் + மனை = கன்மனை<br>முள் + மரம் = முண்மரம். } வேற்றுமைவழி

கல் + மறைந்தது = கன்மறைந்தது.<br>முள் + முறிந்தது = முண்முறிந்தது. } அல்வழி

} இருவழியிலும் ல, ள மெலிவர ன ண வாகத் திரிந்தன.

கல் + யானை = கல்யானை<br>முள் + வளர்ச்சி = முள்வளர்ச்சி } வேற்றுமை வழி

கல் + யாது = கல்யாது<br>முள் + வளரும் = முள்வளரும் } அல்வழி

} இருவழியிலும் ல ள, இடையினம் வர இயல்பாயின.

**28. லளவேற் றுமையில் றடவும் அல்வழி<br>அவற்றோ டுறழ்வும் வலிவரின் ஆம்மெலி<br>மேவின் னணவும், இடைவரின் இயல்பும்<br>ஆகும் இருவழி யானும் என்ப. (நன். சூ. 227)**

## iii. *தன், என், நின் என்பவற்றின் முன் வல்லினம்*

109. தன், என் என்னும் பெயர்களின் இறுதியிலுள்ள னகரம் வலி வரின் தனக்கின வல்லினமான றகரத்தோடு உறழும். (அதாவது றகரமாகத் திரிந்தும் திரியாது மிருக்கும்); நின் என்பதன் ஈறு வலிவரின் பெரும்பாலும் இயல்பாம். ஆகவே சிறுபான்மை திரியும். (உறழ்ச்சி, விகற்பம் என்பன ஒரு பொருட் சொற்கள்.)

தன், என், நின் என்பவை தான், யான், நீ என்பவற்றின் வேற்றுமைத் திரிபாதலால், இவை புணரும் புணர்ச்சி வேற்றுமைவழி யென்றறியப்படும்.

உ-ம். தன் + செயல் = தன்செயல், தற்செயல்.<br>என் + குணம் = என்குணம், எற்குணம். } னகரம் வலிவர உறழ்ந்தது.

நின் + புகழ் = நின்புகழ் - நின் ஈறு வலிவர இயல்பாயிற்று.

நின் + புகழ்தல் = நிற்புகழ்தல் - நின் ஈறு வலிவரத் திரிந்தது.

**29. தன்என் என்பவற் றீற்றுனவ் வன்மையோ<br>டுறழும்; நின்னீ றியல்பாம் உறவே. (நன். சூ. 218)**

## 2. மிகுதலும் இயல்பும்

### ய ர ழ ஈற்றின் முன் வல்லினம்

110. ய ர ழ மெ-களின் முன் க ச த ப என்னும் வல்லின மெ-கள் வரின், அல்வழியில் இயல்பும் மிகலும் ஆகும்; வேற்றுமை வழியில் மிக லும், வலி மெலி உறழ்வு மாகும்.

வலி மெலி யுறழ்வாவது, ஒரே புணர்ச்சியில் வல்லினம் மிக்கும் மெல் லினம் மிக்கும் வருவது.

உ-ம்.
காா- + பெரிது = காா-பெரிது
பேர் + போன = பேர்போன
புகழ் + பொன்றாது = புகழ் பொன்றாது
} அல்வழியில் இயல்பு.

தா- + பசு = தா-ப்பசு
கார் + பருவம் = கார்ப்பருவம்
யாழ் + கருவி = யாழ்க்கருவி
} அல்வழியில் மிகுதல்.

வா- + சொல் = வா-ச்சொல்
போர் + சேவகன் = போர்ச்சேவகன்
யாழ் + பாணன் = யாழ்ப்பாணன்
} வேற்றுமை வழியில் மிகுதல்.

வே- + குழல் = வே-க்குழல், வே-ங்குழல்
ஆர் + கோடு = ஆர்க்கோடு, ஆர்ங்கோடு
பாழ் + கிணறு = பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு
} வேற்றுமையில் வலி மெலி யுறழ்தல்.

**30.** **ய ர ழ முன்னர்க் க ச த ப அல்வழி**
**இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை**
**மிகலும் இனத்தோ டுறழ்தலும் விதிமேல்.** **(நன். சூ. 224)**

## 3. மிகுதலும் கெடுதலும் இயல்பும்

### னகர ஈறு – தேன் என்னும் மொழி

111. இருவழியிலும் தேன் என்னும் சொல்லி னீற்றிலுள்ள னகரம், வரு மொழி முதலில் மூவின மெ-களும் வர இயல்பாகும். மெல்லினம் வரின் இயல்புங் கேடுமாகும்; வல்லினம் வரின் இயல்பும், கெடுதலுடன் வலிமெலி மிகலும் ஆகும்.

உ-ம்.

தேன் + பெருகும் = தேன்பெருகும்
தேன் + மலரும் = தேன்மலரும்
தேன் + யாது + தேன்யாது
} அல்வழி

தேன் + சிறப்பு = தேன்சிறப்பு
தேன் + மரம் = தேன்மரம்
தேன் + வண்டு = தேன்வண்டு
} வேற்றுமை வழி

} இருவழியிலும் தேன்மூவினமும் வர இயல்பாயிற்று.

தேன் + மொழி = தேன்மொழி
தேன் + மொழி = தேமொழி
} அல்வழி

தேன் + மலர் = தேன்மலர்
தேன் + மலர் = தேமலர்
} வேற்றுமைவழி

} இருவழியிலும் தேன் மெலி வர இயல்புங் கேடுமாயிற்று.

தேன் + குழம்பு = தேன்குழம்பு
தேன் + குழம்பு = தேக்குழம்பு
தேன் + குழம்பு = தேங்குழம்பு
} அல்வழி

தேன் + குடம் = தேன்குடம்
தேன்+குடம்-தேக்குடம்
தேன்+குடம்=தேங்குடம்
} வேற்றுமை வழி

} இரு வழியிலும் தேன் வலிவர இயல்பும், வலிமெலி மிகலுமாயிற்று.

**31.** **தேன்மொழி மெ—வரின் இயல்பும், மென்மை**
**மேவின் இறுதி அழிவும் வலிவரின்**
**ஈறுபோ— வலிமெலி மிகலுமாம் இருவழி.** **(நன். சூ. 214)**

# ***யாப்பியல்***

112. ***யாப்பு:*** யாப்பாவது சிறந்த புலவர்கள் பலவகைச் சொற்களால் சொற்சுவையும், பொருட்சுவையும் நிரம்பப் பாடுவது. யாக்கப்படுவது யாப் பாயிற்று.

யாத்தல் - கட்டுதல். யாப்பு - தொழிலாகுபெயர். யா பகுதி, பு விகுதி.

யாப்பு, பாட்டு, பா, செ-யுள், கவி, தூக்கு, தொடர்பு என்பன ஒரு பொருட் சொற்கள்.

113. யாப்பிலக்கணம் - உறுப்பிலக்கணம், செ-யுளிலக்கணம் என இருவகைப்படும்.

114. உறுப்பிலக்கணமாவது எல்லாச் செ-யுள்கட்கும் பொதுவான உறுப்புகளைப்பற்றிக் கூறும் இலக்கணம்.

115. செ-யுளிலக்கணமாவது அவ் வுறுப்புகளாலான செ-யுள் களைப் பற்றிக் கூறும் இலக்கணம்.

## *உறுப்பிலக்கணம்*

116. செ-யுளுறுப்புகள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என ஆறாம்.

117. அவற்றுள் எழுத்து முதலும், சார்புமாக முன்னர்க் கூறப்பட்டவையே.

### *அசை*

***எழுத்தினாலாவது அசை.***

118. அசையாவது, எழுத்துகளின் ஒலித் தொடர்ச்சி இடையிடை அசைக்கப்பட்டு நிற்பது.

அசைத்தல் - ஒலியைக் கூறுபடுத்தல்.
அசை உயிரெழுத்தாலும் உயிர்மெ- யெழுத்தாலும் உண்டாகும்.

119. அசை **நேரசை, நிரையசை** என இருவகைப்படும். நேரசையாவது ஓர் எழுத்து நேரே (அதாவது தானா-) ஒலித்தல். நிரையசையாவது ஈரெழுத்து நிரந்து (கலந்து) ஒலித்தல்.

உ-ம். வா - நேரசை.
வரி - நிரையசை.

நிரையசை யெழுத்துகள் பிரிந்தொலியா.

120. நேரசை குறில் தனித்தும், குறில் ஒற்றடுத்தும் நெடில் தனித்தும், நெடில் ஒற்றடுத்தும் நால்வகையாக வரும்.

ஒற்று - மெ-.

உ-ம். க - குறில் தனித்தது.
கல் - குறில் ஒற்றடுத்தது.
கா - நெடில் தனித்தது.
கால் - நெடில் ஒற்றடுத்தது.

குறிலும் நெடிலும், பிற உயிரெழுத்துகளோடு கலவாமல், அ, ஆ என விட்டிசைத்தா லன்றி நேரசை யாகா.

வீ ர வெள் வேல் என்னும் சொற்றொடரில் நால்வகை நேரசை களும் இருத்தல் காண்க.

121. நிரையசை குறிலிணை தனித்தும், குறிவிணை ஒற்றடுத்தும்குறில் நெடில் தனித்தும், குறில் நெடில் ஒற்றடுத்தும் நால்வகையாக வரும்.

குறிலிணை - இரு குறில்.

உ-ம். கல - குறிலிணை தனித்தது.
கலம் - குறிவிணை ஒற்றடுத்தது.
கலா - குறில்நெடில் தனித்தது.
கலாம் - குறில்நெடில் ஒற்றடுத்தது.

குறில் முன்னும், நெடில் பின்னுமாக வருவது ஒரு நிரையசையென் றும், நெடில் முன்னும், குறில் பின்னுமாக வருவது இரு நேரசை யென்றும் தெரிந்துகொள்க.

உ-ம். சிவா - ஒரு நிரையசை.
வாசி - இரு நேரசை.

***திருமகன் வராதிரான்*** என்னும் சொற்றொடரில் நால்வகை நிரையசை களும் இருத்தல் காண்க.

ஒரு சொல்லிற் பல குறில்கள் அடுத்தடுத்து வரின் முதலிலிருந்து இரண் டிரண்டா- இணைந்தொலிக்கும்.

உ-ம். வரு - கிற - து.

### *சீர்*

122. அசையினாலாவது சீர். அது நால்வகைப்படும்.

1. ஓரசையினாலாவது ஓரசைச்சீர் அல்லது அசைச்சீர்.
2. ஈரசையினாலாவது ஈரசைச்சீர் அல்லது இயற்சீர்.
3. மூவசையினாலாவது மூவசைச் சீர் அல்லது உரிச்சீர்.
4. நாலசையினாலாவது நாலசைச் சீர் அல்லது பொதுச்சீர்.

ஒரு பாட்டிற் சீரறுத்து நிற்கும் அசை அல்லது அசைக்கூட்டம் சீரெனப் பட்டது. சீர் - தாளம்.

123. ***ஓரசைச் சீர்:*** ஓரசைச் சீர் நேர் நிரை என இருவகைப்படும். இவற்றுக்கு முறையே **நாள், மலர்** என்பன உதாரணச் சீர்வா-பாடாகும்.

நான் - நேர், மலர் - நிரை.

124. ***ஈரசைச் சீர்:*** ஈரசைச் சீர், நேரும் நிரையும் முறை மாறி வருவதால் நால்வகையாகும்.

| உ-ம். | **அசை வா-பாடு** | **சீர் வா-பாடு** |
|---|---|---|
| | நேர் நேர் | தேமா |
| | நிரை நேர் | புளிமா |
| | நிரை நிரை | கருவிளம் |
| | நேர் நிரை | கூவிளம் |

ஈரசைச்சீர் அகவற்பாவிற்குரிய வாதலால், அகவற் சீரென்றும் கூறப்படும்.

125. ***மூவசைச் சீர்:*** மூவசைச் சீர் ஈரசைச் சீரோடு இறுதியில் நேரசையே சேர்க்க ஒரு நான்கும், நிரையசையே சேர்க்க ஒரு நான்குமாக மொத்தம் எட்டாகும்.

| உ-ம். | ***அசை வா–பாடு*** | ***சீர் வா–பாடு*** | |
|---|---|---|---|
| | நேர் நேர் நேர் | தேமாங்கா- | இவை கா-ச்சீர், வெண்பாவுரிச்சீர், வெண்சீர் என்றும் கூறப்படும். |
| | நிரை நேர் நேர் | புளிமாங்கா- | |
| | நிரை நிரை நேர் | கருவிளங்கா- | |
| | நேர் நிரை நேர் | கூவிளங்கா- | |
| | நேர் நேர் நிரை | தேமாங்கனி | இவை கனிச்சீர், வஞ்சியுரிச்சீர் என்றுங் கூறப்படும். |
| | நிரை நேர் நிரை | புளிமாங்கனி | |
| | நிரை நிரை நிரை | கருவிளங்கனி | |
| | நேர் நிரை நிரை | கூவிளங்கனி | |

வெண்பாவிற்குரியன வெண்பாவுரிச் சீரென்றும், வஞ்சிப் பாவிற்குரியன வஞ்சியுரிச் சீரென்றும் கூறப்பட்டன.

நாலசைச்சீர் வஞ்சிப்பாவிற்கே உரியன.

ஒரு பாட்டிலுள்ள சீர்களைப் பிரித்தற்கு அலகிடல், வகையுளி செ-தல், சீர்பிரித்தல் எனப் பெயர்.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

இப் பாட்டில் முதலடியில் நான்கு சீரும், இரண்டாமடியில் மூன்று சீருமாக மொத்தம் ஏழு சீருள. அவை யாவை?

| *சீர்* | *அசைவா—பாடு* | *சீர்வா—பாடு* | *சீர்ப்பெயர்* |
|---|---|---|---|
| அக ர | நிரை நேர் | புளிமா | இயற்சீர் |
| முத ல | நிரை நேர் | புளிமா | இயற்சீர் |
| எழுத் தெல் லாம் | நிரை நேர் நேர் | புளிமாங்கா- | வெண்சீர் |
| ஆ தி | நேர் நேர் | தேமா | இயற்சீர் |
| பக வன் | நிரை நேர் | புளிமா | இயற்சீர் |
| முதற் றே | நிரை நேர் | புளிமா | இயற்சீர் |
| உலகு | நிரை நேர் | புளிமா | இயற்சீர் |

இங்ஙனமே ஏனைச் செ-யுள்களையும் பிரித்துக் கொள்க.

## அடி

126. சீரினாலாவது அடி, செ-யுளுக்கு அடி போல்வது அடியெனப் பட்டது. அடி - பாதம்.

சீர்கள் அடுத்து வருவது அடி யெனினும் பொருந்தும்.

127. ***அடி:*** குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும்.

128. ***குறளடி:*** இருசீரடி குறளடி. அது குறளாயிருத்தலாற் குறளெனப் பட்டது. குறள் - குட்டை.

உ-ம். கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

129. ***சிந்தடி:*** முச்சீரடி சிந்தடி. அது சிந்தா யிருத்தலாற் சிந்தெனப் பட்டது.

சிந்து - குறளினும் சற்று நெடியது.

1 2 3
உ-ம். இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடக் கையினா-.

130. ***அளவடி:*** நாற்சீரடி அளவடி. அது சரியான அளவாயிருத்தலால் அளவடி யெனப்பட்டது.

1 2 3 4

உ-ம். அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்திலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா- அமர்ந்திருந் தாரே.

131. ***நெடிலடி:*** ஐஞ்சீரடி நெடிலடி. அது நெடிலாயிருத்தலால் நெடி லெனப்பட்டது. நெடில் - நீண்டது.

1 2 3 4 5

உ-ம். கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தா-ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ.

132. ***கழிநெடிலடி:*** அறுசீரும் அதற்கு மேலுமுள்ள அடி கழிநெடிலடி. அது மிக நீண்டிருத்தலாற் கழிநெடிலெனப்பட்டது.

(கழி - மிகுதிப் பொருளுணர்த்தும் உரிச்சொல்.)

1 2 3 4 5 6

உ-ம். பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்.

# *அணியியல்*

133. ***அணி:*** அணியாவது செ-யுட்குரிய அழகு. அது, **சொல்லணி, பொருளணி** என இருவகைப்படும்.

அணி - அழகு. சொல்லணி சொல்லின் அழகு. பொருளணி பொரு ளின் அழகு.

134. சொல்லணி மடக்கு, திரிபு, சிலேடை எனப் பல வகைப்படும்

135. பொருளணி தன்மை, உவமை, உருவகம் தற்குறிப்பேற்றம் முதலிய பல வகைப்படும்.

## தன்மை அணி

136. ஒரு பொருளின் தன்மையை யாதொரு விகாரமுமின்றி உள்ள வாறு சிறப்பித்துக் கூறுவது தன்மையணி. இதனைச் 'சுவபாவோக்தி அலங்காரம்' என்பர் வடநூலார்.

உ-ம். கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிகட் டீயினன்
கொட்டிய துடியினன் குறிக்குங் கொம்பினன்
கிட்டிய தமரெனக் கிளர்ந்த தோளினான்.

***இதன் பொருள்:*** குகன் (பரதனைத் தூரத்திற் கண்டபோது அவன் இராமனோடு போர் செ-ய வருவதாகத் தவறாக எண்ணி) அரையில் உடைவாளைச் செருகி உதட்டைக் கடித்துக் கடுஞ்சொற் கூறித் தீப்பறக்க விழித்துத் துடியைக் கொட்டிப் போர் கிடைத்ததென்று தோள் பூரித்தவ னா-த் தன் வீரரெல்லாம் வருமாறு கொம்பை ஊதினான் என்பது. இதிற் குகனுடைய வீரக்கோலம் உள்ளவாறு கூறப்பட்டிருத்தல் காண்க.

## உவமையணி

137. ஏதேனு மொருவகையில் இரு பொருளுக்கு ஒப்புமை கூறுவது உவமையணி. இதை 'உபமாலங்காரம்' என்பர் வடநூலார்.

138. உவமையில் உபமானம், உபமேயம் பொதுத்தன்மை, உவம உருபு என நான்கு உறுப்புகளுண்டு.

உபமானம் உவமம் என்றும், உபமேயம் பொருள் என்றுங் கூறப்படும்.

மதிபோல் அழகிய முகம் என்பதில் மதி உபமானம், முகம் உபமே யம், அழகு பொதுத் தன்மை. போல் உவம உருபு.

மதிமுகம் என உவம உருபு தொக்கு வரும்போது உவமைத் தொகை யெனப்படும்.

உவமையுருபுகள் போல, புரைய முதலியன.

**ந.சூ. – போலப் புரைய ஒப்ப உறழ**
**மானக் கடுப்ப இயைய ஏ–ப்ப**
**நேர நிகர அன்ன இன்ன**
**என்பவும் பிறவும் உவமத் துருபே. (32)**

உவமை பண்புவமை, தொழிலுவமை, பயனுவமை என மூவகைப்படும். பண்பு - குணம்.

1. ***பண்புவமை:*** இரு பொருளுக்குப் பண்பினால் ஒப்புமை கூறுவது பண்புவமை.

உ-ம். முத்துப் போன்ற பல்,
தேன் போன்ற மொழி.

2. ***தொழிலுவமை:*** இரு பொருளுக்குத் தொழிலால் ஒப்புமை கூறுவது தொழிலுவமை.

உ-ம். புலிபோலப் பா-ந்தான்.
குருவிபோலக் கூப்பிட்டான்.

3. ***பயனுவமை:*** இரு பொருளுக்குப் பயனால் ஒப்புமை கூறுவது பயனுவமை. பயன் - விளைவு.

உ-ம். கார்நிகர் வண்கை.
இது மேகம் மழையினால் உலகத்தைக் காப்பதுபோலக் கொடையினால் உலகத்தைக் காக்கும் கை எனப் பயன் குறித்து நிற்பதால் பயனுவமையாயிற்று.

## உருவகவணி

139. உருவகவணியாவது உபமானத்தையும், உபமேயத்தையும் ஒன்றாக்கி, உபமானத்தை உபமேயத்தின்மேல் ஏற்றிக் கூறுவது. இதை 'ரூபகாலங்காரம்' என்பர் வடநூலார்.

140. உருவகத்திற்கு ஆகிய அல்லது என்ற என்பது உருபாக வரும்.

உ-ம். இராமன் ஆகிய சிங்கம் அரக்கராகிய யானைகளின்மேற் பா-ந்தது.

சிங்கம் யானையின்மேற் பா-வதுபோல இராமன் அரக்கர்மேற் பா-ந்தான் என்று உபமானமும் உபமேயமும் வேறு வேறு இருத்தற்பாலன இராமனாகிய சிங்கமென்றும், அரக்கராகிய யானைகள் என்றும் ஒன் றாயிருத்தலான், இஃது உருவகமாயிற்று.

141. உருவகத்திலுள்ள பல பொருள்களில் ஒன்று உருவகிக்கப் பட்டும், இன்னொன்று உருவகிக்கப்படாதும் இருந்தால், அஃது ஏகதேச உருவகமெனப்படும். ஏகதேசம் - ஒரு கூறு.

உ-ம். **‘உரன்** என்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்’
இதில் அறிவை அங்குசமாக உருவகித்து, அதனால் அடக்கப்படும் ஐம்புலன்களை யானைகளாக உருவகியாமையால், இஃது ஏக தேச வுருவகமாகும்.

உவமைக்கும் உருவகத்திற்கும் வேறுபாடு:

| **உவமை** | **உருவகம்** |
|---|---|
| 1. உபமானம் முந்திவரும். | உபமேயம் முந்திவரும். |
| 2. உபமானம் உபமேயம் வெவ்வேறாகக் கூறப்படும் | உபமானம் உபமேயம் ஒன்றாகக் கூறப்படும். |
| 3. போல என்பது உருபு. | ஆகிய என்பது உருபு. |

## *தற்குறிப்பேற்ற வணி*

142. இயற்கையாக நிகழும் ஒரு நிகழ்ச்சியை வேறொரு காரணம் பற்றி நிகழ்வதாகப் புலவன் தன் குறிப்பை அதன்மேல் ஏற்றிக் கூறுவது தற் குறிப்பேற்றம். இதை ‘உத்பிரேட்சாலங்காரம்’ என்பர் வடநூலார்.

குறிப்பு - கருத்து.

**எண்ட ருங்கடை சென்ற யாமமி யம்பு கின்றன வேழையால்**
**வண்டு தங்கிய தொங்கன் மார்பன் மயங்கி விம்மிய வாறெலாம்**
**கண்டு நெஞ்சு கலங்கி யஞ்சிறை யான காமர் துணைக்கரங்**
**கொண்டுதம்வயி றெற்றி யெற்றி விளிப்ப போன்றன கோழியே.**

இதில், (கைகேசிக்கு வரமளித்த அன்றிரவு) கோழிகள் கடையாமத் தில் இயல்பாகச் சிறகடித்துக் கூவினதை, தசரதன் பட்ட பாட்டைக் கண்டு அவை வருந்தி வயிற்றிற் பலமுறை யடித்துக்கொண்டு கூவுவனபோ லிருந்ததாகக் கூறியிருப்பாதல், இது தற்குறிப்பேற்றம்.

# 6 ஆம் பாரம் (11 ஆம் வகுப்பு)

## 1. எழுத்தியல்

### எழுத்தின் பிறப்பு (பொது)

1. எழுத்தின் பிறப்பாவது எழுத்தொலி உண்டாகும் முறை, உயிர்களின் முயற்சியினாலே அடிவயிற்றினின்றும் மேனோக்கி எழுப்பப்படும் காற்றானது, மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகிய நான்கிடங்களையும் பொருந்தி, நா, உதடு, பல், மேல்வா- ஆகிய வாயுறுப்புகளின் தொழிலினால் வெவ்வே றெழுத்தாக ஒலிக்கும்.

**1.** **நிறையுயிர் முயற்சியின் உள்வளி துரப்ப**
**எழும்அணுத் திரள்உரம் கண்டம் உச்சி**
**மூக்குற் றிதழ்நாப் பல்அணத் தொழிலின்**
**வெவ்வே றெழுத்தொலி யா—வால் பிறப்பே.** **(நன். சூ. 74)**

வளி - காற்று. துரப்ப - செலுத்த. அணுத் திரள் - ஒலியணுத் திரட்சி, ஒலி.

உரம் - மார்பு. கண்டம் - கழுத்து. இதழ் - உதடு. அணம் - மேல்வா-.

### முதலெழுத்துகளின் பிறப்பிடம்

2. முதலெழுத்துகளில் வல்லினத்திற்கு மார்பும், இடையினத்திற்கும்,உயிருக்கும் கழுத்தும், மெல்லினத்திற்கு மூக்கும் இடமாகும்.

இவ் வெழுத்துகட்கு இவ் விடங்கள் இடமாதலை உச்சரித்துக் காண்க.

**2.** **அவ்வழி,**
**ஆவி இடைமை இடம்மிட றாகும்;**
**மேவும் மென்மைமூக்கு உரம்பெறும் வன்மை** **(நன். சூ. 75)**

மிடறு - கழுத்து.

முதலெழுத்துகள் நா, உதடு முதலிய வாயுறுப்புகளின் தொழிலி னால் வெவ்வேறெழுத்தா-ப் பிறக்கும் முறையாவன:

அ, ஆ, என்பவை வா- திறத்தலாலேயே பிறக்கும். உ, ஊ, ஒ, ஓ, ஔ என்பவை உதடு குவிவதால் பிறக்கும்.

மேல்வா-ப் பல்லும் கீழுதடும் பொருந்த வகரம் பிறக்கும்.
இங்ஙனமே பிறவும்.

3. சார்பெழுத்துகளின் பிறப்பு: சார்பெழுத்துகளில் ஆ-தத்திற்கு இடம் தலை, முயற்சி வா- திறந்தொலித்தல்; ஏனைய வெழுத்துகள் தத் தம் முதலெழுத்துகளைப்போல் பிறக்கும்.

**3. ஆ–தக் கிடம்தலை அங்கா முயற்சி**
**சார்பெழுத் தேனவும் தம்முதல் அனைய. (நன். சூ. 87)**

## *உயிரளபெடை*

4. செ-யுளில் ஓசை குறைந்த விடத்து அதை நிறைத்தற்கு எழுத்து கள் தத்தம் அளவு கடந்தொலிக்கும். அஃது அளபெடை எனப்படும்.

அளபெடை - அதிகமா- அளபெடுத்தல். அளபு - மாத்திரை,

உயிர் அளபெடுப்பின் உயிரளபெடை யென்றும், ஒற்று (மெ-) அள பெடுப்பின் ஒற்றளபெடை யென்றுங் கூறப்படும்.

5. ***உயிரளபெடை:*** உயிரெழுத்துகளில் நெடிலேழும் அளபெடுக் கும். அவை அளபெடுத்தற் கடையாளமாக நெடிலுக்குரிய இரு மாத்திரை யிற் கூடிய ஒவ்வொரு மாத்திரைக்கும் ஒவ்வொரு முறையாக அவ்வந் நெடில்களின் இனக்குறில் கூட்டி யெழுதப்படும். ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனக்குறிலாகும். குறில்கள் அளபெடுப்பின், நெடிலாகியே அளபெடுக்கும்.

அளபெடை மொழி முதல், இடை, கடை என்னும் மூவிடத்தும் வரும். ஔகாரம் மொழியிடை கடை என்னும் ஈரிடத்தும் வாராமையின், அவ் வீரிடத்தும் அளபெடுக்காது.

உ-ம். 'தூஉ-மை யென்ப தவாவின்மை' - மொழிமுதல்
'நற்றாள் தொழா அர் எனின்' - மொழியிடை
'கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால்' - மொழிக்கடை
'கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வா-' - இதில் குறில் நெடிலாகி அளபெடுத்தது.

6. உயிரளபெடை, செ-யுளில் இசை நிறைப்பதன்றி இன்னிசை பற்றியும் வரும். இசை நிறைப்பது இசைநிறை யளபெடை யென்றும். இன்னிசை பற்றியது இன்னிசை யளபெடை என்றுங் கூறப்படும்.

இன்னிசை யளபெடை உரை (வசனம்), செ-யுள் என்னும் இரண்டிற்கும் பொதுவாம். இன்னிசை - இனிய ஓசை.

'நற்றாள் தொழாஅர் எனின்' இசைநிறை யளபெடை
'கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வா-மற் றாங்கே.
எடுப்பதூஉம் எல்லாம் மழை' - இன்னிசை யளபெடை
குரீஇ என்பதும் இன்னியசை யளபெடையாகும்.

7. சில சொற்கள் அளபெடுத்துப் பிற சொல்லாவதுண்டு. அது சொல்லிசையளபெடை யெனப்படும்.

உ-ம். 'உரனசைஇ உள்ளந் துணையாகச் சென்றார்.
வரனசைஇ இன்னும் உளேன்'-

இதில் நசை என்னும் தொழிற் பெயர் அளபெடுத்து இறந்தகால வினையெச்ச மாயினமை காண்க. நசை - விருப்பம். நசைஇ - விரும்பி. சில சொற்கள் எப்போதும் அளபெடுத்தே நிற்கும்.

உ-ம். மரூஉ, ஆடூஉ, மகடூஉ, செவியறிவுறூஉ.

உயிரளபெடை பெரும்பான்மை மூன்று மாத்திரையும், சிறுபான்மை நான்கு மாத்திரையும் அளபெடுக்கும்.

உலகிய லளபெடை பன்னிரு மாத்திரை யளபெடுத்தலைப் புலம் பலிற் காண்க. செ-யுளில் நான்கு மாத்திரை யளபெடுத்தலை, 'செறாஅஅ- வாழிய நெஞ்சு' என்பதிற் காண்க.

**4. இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்**
**அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே. (நன். சூ. 91)**

## *மொழியீற் றெழுத்துகள்*

8. தமிழில் எல்லா வெழுத்துகளும் மொழியிறுதியில் வருவ தில்லை. அங்ஙனம் வரும் எழுத்துகள் மொழியீற்றெழுத்துக ளெனப்படும்.

பன்னீரு ருயிரும், ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் பதினொரு மெ-யும், குற்றியலுகரமும் ஆகிய இருபத்துநான்கு எழுத்துகளும் மொழியீற்றெழுத்துகளாம்.

ஓரெழுத்துச் சொற்கள் தமக்குத் தாமே முதலும் ஈறுமாகும்.

பல வெழுத்துச் சொற்களில் எகரம் தவிர மற்றெல்லா வுயிர்களும் மெ-யோடு கூடி இறுதியாகும்.

குற்றியலுகரம் உகரத்தி லடங்குமேனும் புணர்ச்சி வேறுபாடுபற்றிப் பிரித்துக் கூறப்பட்டது.

**ஓரெழுத்துச் சொற்கள்**

i. ***உயிர்***

| | |
|---|---|
| அ - அந்த | எ - எந்த |
| ஆ - பசு | ஏ - அம்பு |
| இ - இந்த | ஐ - அழகு |
| ஈ - வண்டு | ஒ - ஒப்பாகு |
| உ - உந்த | ஓ - மதகுநீர் தாங்கும் பலகை |
| ஊ - மாமிசம் | ஔ - பற்றுதல் |

***பல வெழுத்துச் சொற்கள்***

கல, களா, கிளி, தீ, புது, சே, கலை, நொ, போ, வெள.
சே - எருது. நொ - வருந்து. வெள - கைப்பற்று.

ii. **மெ–**

உரிஞ், கண், பொருந், மரம், மான், கா-, வேர், பால், தெவ், புகழ், வாள்.

iii. ***குற்றியலுகரம்***

வீடு.

***குறிப்பு:*** குற்றுயிர்கள் அளபெடையிலும் ஈறா- வரும்.

உ-ம். கழாஅ, தழீஇ, மரூஉ, சேஎ, அடைஇ, கோஒ, வெளஉ.

**5. ஆவி ஞணநம னயரல வழளமெ–**
**சாயு முகரம் நாலாறும் ஈறே (நன். சூ. 107)**

## *2. சொல்லியல்*

9. **மொழிவகை:** மொழிகள் தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகைப்படும்.

10. தனிமொழியாவது ஒரே சொல் தனித்து நிற்பது. இஃது ஒருமொழி என்றுங் கூறப்படும்.

உ-ம். மண், மாடு, மகன், வந்தான்.

11. **தொடர்மொழி**யாவது பல சொற்கள் தொடர்ந்து நிற்பது. இது சொற்றொடர் என்றும் கூறப்படும்.

உ-ம். பனைமரம்.
அறம் செய விரும்பு.

12. **பொதுமொழி**யாவது தனிமொழிக்கும், தொடர்மொழிக்கும் பொது வாயிருப்பது. அஃதாவது ஒருகால் ஒருபொருள் தந்து தனிமொழியாயும், மற்றொருகால் பலபொருள் தந்து தொடர்மொழியாயும் இருப்பது.

உ-ம்.

| *பொதுமொழி* | *தனிமொழிப்பொருள்* | *தொடர்மொழிப் பொருள்.* |
|---|---|---|
| தாமரை | ஒரு மலர் | தா + மரை = தாவுகின்ற மான். |
| வேங்கை | ஒரு விலங்கு | வேம் + கை = வேகின்ற கை. |

**6. ஒருமொழி ஒருபொரு ளனவாம்: தொடர்மொழி**
**பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன. (நன்.சூ.)**

# பெயர்ச்சொல்

## ஆகுபெயர்

13. ஒரு பொருளின் பெயர் அதற்குச் சம்பந்தமான இன்னொரு பொருளுக்குத் தொன்றுதொட்டு ஆகிவருவது ஆகுபெயர். அது பொரு ளாகுபெயர், இடவாகுபெயர் முதலியனவாகப் பலவகைப்படும்.

1. ***பொருளாகு பெயர்:*** பொருளாகு பெயராவது ஒரு பொருளின் அல்லது உடம்பின் பெயர் அதன் உறுப்பிற்கு ஆகிவருவது. இது முதலாகு பெயர் என்றுங் கூறப்படும்.

உ-ம். தாமரை முகம் - இதில் தாமரை என்னும் கொடியின் பெயர் அதன் உறுப்பாகிய மலருக்கு ஆகி வந்தது.

2. ***இடவாகு பெயர்:*** இடவாகு பெயராவது ஓர் இடத்தின் பெயர் அவ் விடத்திலுள்ள பொருளுக்கு ஆகிவருவது.

உ-ம். கராச்சி வாங்கினாள் - இதில் கராச்சி என்னும் இடப்பெயர் அவ் விடத்தில் நெ-ய3ப்பட்ட பட்டுச்சேலைக்கு ஆகி வந்தது.

3. ***காலவாகு பெயர்:*** காலவாகு பெயராவது ஒரு காலத்தின் பெயர் அக்காலத்தில் தோன்றும் பொருளுக்கு அல்லது நிகழும் நிகழ்ச்சிக்கு ஆகிவருவது.

உ-ம். கோடை விளைந்தது - இதில் கோடை என்னும் காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகிவந்தது.

4. ***சினையாகு பெயர்:*** சினையாகு பெயராவது ஒரு சினை (உறுப்பு) யின் பெயர் அச் சினையையுடைய உடம்பிற்கு ஆகிவருவது. இது பொரு ளாகு பெயர்க்கு எதிர்.

உ-ம். வெற்றிலை நட்டான் - இதில் வெற்றிலை என்னும் சினைப் பெயர் அதனையுடைய கொடிக்கு ஆகிவந்தது.

5. **குணவாகு பெயர்:** குணவாகு பெயராது ஒரு குணத்தின் பெயர் அக் குணத்தையுடைய பொருளுக்கு ஆகிவருவது. இது பண்பாகுபெய ரென்றுங் கூறப்படும்.

உ-ம். வண்ணான் வெள்ளை கொண்டு வந்தான் - இதில் வெள்ளை யென்னும் குணப்பெயர் அக் குணத்தையுடைய உடுப்பிற்கு ஆகிவந்தது.

6. ***தொழிலாகு பெயர்:*** தொழிலாகுபெயராவது ஒரு தொழிலின் பெயர் அத் தொழியுடைய பொருளுக்கு ஆகிவருவது.

உ-ம். பறவை - பறவை (பறத்தல்) என்னும் தொழிற்பெயர் அத் தொழிலையுடைய பிராணிக்கு ஆகிவந்தது.

7. ***அளவையாகு பெயர்:*** அளவையாகு பெயராவது ஓர் அளவின் பெயர் அவ் வளவையுடைய பொருளுக்கு ஆகி வருவது.

அளவு எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என நால்வகைப்படும்.

i. ***எண்ணலளவையாகு பெயர்:*** அரையில் உடுத்தான் - இதில் அரை யென்னும் எண்ணலளவுப்பெயர் அதையுடைய உறுப்பிற்கு ஆகிவந்தது.

ii. ***எடுத்தலளவையாகு பெயர்:*** ஒரு சேர் வாங்கினான் - இதில் சேர் என்னும் எடுத்தலளவுப்பெயர் அவ் வளவையுடைய ஒரு பொருளுக்கு ஆகி வந்தது.

iii. ***முகத்தலளவையாகு பெயர்:*** உண்பது நாழி - இதில் நாழி என் னும் முகத்தலளவுப் பெயர் அவ்வளவையுடைய அரிசிக்கு ஆகிவந்தது.

iv. ***நீட்டலளவையாகு பெயர்:*** உடுப்பது நான்கு முழம் - இதில் முழம் என்னும் நீட்டலளவுப் பெயர் அவ் வளவையுடைய ஆடைக்கு ஆகிவந்தது.

8. **சொல்லாகு பெயர்:** சொல்லாகு பெயராவது சொல்லின் பெயர் அச் சொல்லின் பொருளுக்கு ஆகி வருவது.

உ-ம். குறளுக்கு உரை கூறினான் - இதில் உரை என்னும் சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆகி வந்தது.

9. ***தனியாகு பெயர்:*** தானியாகு பெயராவது ஒரு தானத்தில் (இடத்தில்) உள்ள பொருளின் பெயர், அத் தானத்திற்கு ஆகி வருவது. இஃது இடவாகு பெயருக்கு எதிர்.

உ-ம். கழல் பணிந்தான் - இதில் கழல் என்னும் அணியின் பெயர் அதை யணிந்துள்ள காலுக்கு ஆகி வந்தது.

10. ***கருவியாகு பெயர்:*** கருவியாகு பெயராவது ஒரு கருவியின் பெயர் அதனாற் செ-யப்படும் பொருளுக்கு ஆகி வருவது. கருவியினாற் செ-யப் படுவது காரிய மெனப்படும். கருவி எனினும் காரணம் எனினும் ஒக்கும்.

உ-ம். செம்பு கொண்டுவா - இதில் செம்பு என்னும் உலோகப்பெயர் அதனால் செ-யப்படும் பாத்திரத்திற்கு ஆகி வந்தது.

செம்பு என்பது இப்போது பிற உலோகப் பாத்திரங்களையும் இனவிலக்கண (உபலக்ஷண) மா-க் குறிக்கும்.

11. ***காரியவாகு பெயர்:*** காரியவாகு பெயராவது ஒரு காரியத்தின் பெயர், அதன் கருவிக்கு ஆகி வருவது. இது கருவியாகு பெயருக்கு எதிர்.

உ-ம். வளை ஒலித்தது - இதில் வளை (வளையல்) என்னும் அணிப் பெயர் அதன் கருவியாகிய சங்கிற்கு ஆகி வந்தது.

இலக்கணம் படித்தான் என்பதில் இலக்கணம் என்பது அதை அறி வித்தற்குக் கருவியாகிய நூலைக் குறித்தலின் காரியவாகு பெயர்.

12. ***கருத்தாவாகு பெயர்:*** கருத்தாவாகு பெயராவது ஒரு கருத்தா வின் பெயர் அக் கருத்தாவாற் செ-யப்படும் பொருளுக்கு ஆகி வருவது. கருத்தா - செ-வோன்.

உ-ம். கம்பரைக் கற்றான் - இதில் கம்பர் என்னும் கருத்தாப் பெயர் அவராற் செ-யப்பட்ட நூலுக்கு ஆகி வந்தது.

13. ***உவமையாகு பெயர்:*** உவமையாகு பெயராவது ஓர் உபமானத்தின் பெயர் அதன் உபமேயத்திற்கு ஆகி வருவது.

உ-ம். காளை வந்தான் - இதில் காளை என்னும் விலங்குப் பெயர் அதைப்போல் வீரத்திற் சிறந்த மனிதனுக்கு ஆகி வந்தது.

14. ***பண்பியாகு பெயர் அல்லது குணியாகு பெயர்:*** ஒரு பண்பியின் பெயர் அதன் பண்பிற்கு ஆகி வருவது. பண்பையுடையது பண்பி; குணத்தை யுடையது குணி.

உ-ம். சாம்பல் வாழை, புலிக்கொடி, சாம்பல் புலி என்னும் குணிப் பெயர்கள் அவற்றின் குணங்களாகிய நிறத்திற்கும் வடிவிற்கும் ஆகி வந்தன.

15. ***சின்னவாகு பெயர்:*** சின்னவாகு பெயராவது ஒரு சின்னத்தின் பெயர் அதையுடைய ஆளுக்கு அல்லது தொழிலுக்கு ஆகி வருவது.

சின்னம் - அடையாளம்.

உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆண்டான் என்பதில் குடை என் பது, அதையுடைய அரசிற்கு ஆகி வந்தது.

ஆகுபெயர்கள், பெரும்பான்மை ஒரு சொல்லாகவும் சிறுபான்மை இரு சொல்லாகவும் மிருக்கும். இரு சொல்லாயிருப்பன அடையடுத்த ஆகுபெயர்க ளெனப்படும்.

உ-ம். வெற்றிலை, மருக்கொழுந்து.

ஆகுபெயர்கள் ஒரு முறையன்றிப் பலமுறை மேன்மேற் பல பொருள் களுக்கு ஆகி வருவதுண்டு. அவை இருமடியாகு பெயர், மும்மடியாகு பெயர் எனக் கூறப்படும்.

மடித்தல் - மடக்குதல்.

உ-ம். தோகை வந்தாள் - தோகை என்னும் சினைப்பெயர் முதலா வது சினையாகு பெயரா- மயிலையும், பின் உவமையாகு பெயரா- பெண்ணையும் குறித்தலின் இருமடியாகுபெயர்.

கார் அறுத்தார்கள் - கார் என்னும் நிறப்பெயர் முதலாவது குணவாகு பெயரா- மேகத்தையும், பின்பு, காலப்பொருளாகுபெயரா-க் கார்காலத்தை யும், பின்பு காலவாகுபெயரா-க் கார்காலத்தில் விளையும் பயிரையும் குறித்தலின் மும்மடியாகு பெயர்.

ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் வேறுபாடு:

| ***ஆகுபெயர்*** | ***அன்மொழித் தொகை*** |
|---|---|
| 1. தொன்றுதொட்டு வரும் நியதிப்பெயர். | புதிதுபுதிதா- ஆக்கப்படும் நியதியில்லாத பெயர். |
| 2. பெரும்பான்மை ஒரு சொல்லாயும் சிறுபான்மை இரு சொல்லாயு மிருப்பது. | எப்போதும் இருசொல்லா யிருப்பது. |

**7.** **பொருள்முத லாறோ டளவைசொல் தானி**
**கருவி காரியம் கருத்தன் ஆதியுள்**
**ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்**
**தொன்முறை உரைப்பன ஆகு பெயரே. (நன். சூ. 290)**

## வேற்றுமை

16. ***முதல் வேற்றுமை:*** பெயரின் இயல்பே முதல் வேற்றுமை. அதன் பொருள் கருத்தாப் பொருள். அது பெயரையும், வினையையும் பயனிலை யாகக் கொண்டு முடியும். வினா, பெயருள்ளும் வினையுள்ளும் அடங்குத லின் தனிப் பயனிலை யன்று.

கருத்தா, தொழிலைச் செ-பவன். கருத்தா, செ-பவன், எழுவா-, வினைமுதல் என்பன ஒரு பொருட் சொற்கள்.

உ-ம். அவன் இராமன் - பெயர்ப் பயனிலை.
இராமன் வந்தான் - வினைப் பயனிலை.

யார் என்னும் வினா பெயராயும், வந்தானா என்னும் வினா வினை யாயுமிருத்தலின், வினா தனிப் பயனிலையன்மை காண்க.

கருத்தா இயற்றுதற் கருத்தா, ஏவுதற் கருத்தா என இருவகைப்படும். இயற்றுதற் கருத்தா தானே ஒரு வினையைத் தன் கைப்படச் செ-பவன். ஏவுதற் கருத்தா தன் ஆணையாலும், பொருளாலும் பிறரை ஏவி ஒரு வினை யைச் செ-விப்பவன்.

உ-ம். தச்சன் அரண்மனை கட்டினான் - இயற்றுதற் கருத்தா.
அரசன் அரண்மனை கட்டினான் - ஏவுதற் கருத்தா.

முதல் வேற்றுமை பெயரளவா- நிற்றலின் பெயர் வேற்றுமை யென் றும், எழுவாயா- நிற்றலின் எழுவா- வேற்றுமை யென்றும் கூறப்படும்.

**8.** **எழுவா யுருபு திரிபில் பெயரே**
**வினைபெயர் வினாக்கொளல் அதன்பய னிலையே. (நன். சூ. 295)**

17. **இரண்டாம் வேற்றுமை:** இரண்டாம் வேற்றுமை உருபு ‘ஐ’. அதன் பொருள் செயப்படுபொருள். அஃது ஆக்கல், அழித்தல், அடைத் தல், நீத்தல், ஒத்தல், உடைமை முதலியவாகப் பல வகைப்படும்.

உ-ம். சத்திரத்தைக் கட்டினான் - ஆக்கல்.
கட்டடத்தை இடித்தான் - அழித்தல்.
ஊரை அடைந்தான் - அடைதல்.
குறையை நீக்கினான் - நீத்தல்.
புலியை நிகர்த்தான் - ஒத்தல்.
அறிவை உடையான் - உடைமை.
புகழை விரும்பினான் - விருப்பம்.

செயப்படுபொருள் செ-பொருள் என்றும் சுருக்கிக் கூறப்படும். இரண்டாம் வேற்றுமைக்குச் செயப்படுபொருள் வேற்றுமை என்றும் பெயர்.

**9. இரண்டா வதனுரு பையே அதன்பொருள்**
**ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்**
**ஒத்தல் உடைமை ஆகி யாகும். (நன். சூ. 296)**

18. ***மூன்றாம் வேற்றுமை:*** மூன்றாம் வேற்றுமை உருபு ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன. அவற்றின் பொருள் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி என்பன.

ஆல், ஆன் என்பன கருவி கருத்தாப் பொருள்கட்கும், ஒடு, ஓடு என்பன உடனிகழ்ச்சிப் பொருளுக்கும் சிறந்தவை.

கருவி முதற்கருவி யென்றும், துணைக் கருவி யென்றும் இரு வகைப்படும். முதற்கருவி பின்பு காரியமாக மாறுவது. துணைக் கருவி, முதற்கருவி காரியப்படுமட்டும் துணைநின்று, பின்பு பிரிந்து நிற்பது. கருவி, காரணம்.

கருத்தா, முதல் வேற்றுமைக் கருத்தாப் போலவே இயற்றுதற் கருத்தா, ஏவுதற் கருத்தா என இருவகைப்படும்.

உடனிகழ்ச்சியாவது ஒரு பொருளின் தொழில் இன்னொரு பொரு ளின் தொழிலோடு உடனிகழ்வது.

உ-ம். மண்ணாற் செ-த குடம் - முதற் கருவி } கருவி.
உளியாற் செ-த பெட்டி - துணைக் கருவி } கருவி.

கொத்தனாற் கட்டப்பட்டது கோயில் - இயற்றுதற் கருத்தா } கருத்தா
அரசனாற் கட்டப்பட்டது கோயில் - ஏவுதற் கருத்தா } கருத்தா

இராமனொடு இலக்குமணன் சென்றான் - உடனிகழ்ச்சி.
இராமன் செலவோடு இலக்குமணன் செலவும் உடனிகழ்தல் காண்க.

முதல் வேற்றுமைக் கருத்தாவிற்கும், மூன்றாம் வேற்றுமைக் கருத்தா விற்கும் வேறுபாடு:

1. முதல் வேற்றுமைக் கருத்தா உருபின்றி எழுவாயா- நிற்கும். மூன் றாம் வேற்றுமைக் கருத்தா வாக்கியத்திற் செயப்படுபொருள் எழுவாயா யிருக்கும்.

2. முதல் வேற்றுமைக் கருத்தா வாக்கியத்தில் கருத்தா எழுவாயா யிருக்கும்; மூன்றாம் வேற்றுமைக் கருத்தா வாக்கியத்திற் செயப்படுபொருள் எழுவாயா யிருக்கும்.

3. முதல் வேற்றுமைக் கருத்தா வாக்கியம் செ-வினை கொண்டு முடியும்; மூன்றாம் வேற்றுமைக் கருத்தா வாக்கியம் செயப்பாட்டுவினை கொண்டு முடியும்.

உ-ம். தச்சன் கோயிலைக் கட்டினான் - முதல் வேற்றுமைக் கருத்தா.
தச்சனாற் கோயில் கட்டப்பட்டது - மூன்றாம் வேற்றுமைக் கருத்தா.

மூன்றாம் வேற்றுமை, கருவி வேற்றுமை என்றுங் கூறப்படும்.

**10. மூன்றா வதனுருபு ஆல்ஆன் ஒடுஒடு**
**கருவி கருத்தா உடன்நிகழ் வதன்பொருள். (நன். சூ. 297)**

19. ***நான்காம் வேற்றுமை:*** நான்காம் வேற்றுமை உருபு ‘கு’. அதன் பொருள் ஏற்றுக்கோடற்பொருள். அது கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை முதலிய பலவகைப்படும்.

நேர்ச்சி - நட்பு. தகவு - தகுதி. அதுவாதல் - ஒரு பொருள் இன்னொரு பொருளாதல், பொருட்டு - நிமித்தம்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | புலவர்க்குப் பரிசளித்தான் | - | கொடை |
| | பாம்பிற்குக் கீரி பகை | - | பகை |
| | சுந்தரர்க்கு நண்பர் சேரமான் பெருமான் | - | நேர்ச்சி |
| | மன்னர்க்குத் தகும் மாளிகை | - | தகவு |
| | சோற்றுக்கு அரிசி | - | அதுவாதல் |
| | கூலிக்கு வேலை | - | பொருட்டு |
| | சச்சந்தனுக்கு மகன் ஜீவகன் | - | முறை |
| | தஞ்சைக்கு வடக்கு சிதம்பரம் | - | எல்லை |
| | இல்லதிற்கு உள்ளது மேல் | - | ஒப்பு |
| | வில்லுக்குச் சிறந்தவன் விசயன் | - | ஏது |

இவையெல்லாம் இதற்கு இது எனப் பொதுவா- ஏற்றுக்கோடற் பொரு ளில் வந்தமை காண்க.

நான்காம் வேற்றுமை கொடை வேற்றுமை என்றும், கோளி வேற் றுமை என்றும் கூறப்படும். கோளி - கொள்வது.

**11. நான்கா வதற்குரு பாகும் குவ்வே**
**கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்**
**பொருட்டுமுறை ஆதியின் இதற்கிதெனல் பொருளே. (நன். சூ. 298)**

20. ***ஐந்தாம் வேற்றுமை:*** ஐந்தாம் வேற்றுமை உருபு இன், இல் என்பன ; அவற்றின் பொருள் விகற்பித்தல். விகற்பித்தலாவது இதனின் இஃது இத்தன்மையது என இருபொருளை வேறுபடுத்திக் கூறல். அது நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என நால்வகைப்படும்.

ஏது - காரணம்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | மதுரையின் நீங்கினான் | - | நீங்கல் |
| | காக்கையிற் கரிது களம்பழம் | - | ஒப்பு |
| | தஞ்சையின் வடக்கு சிதம்பரம் | - | எல்லை |
| | கல்வியிற் பெரியவன் கம்பன் | - | ஏது |

ஒப்புப் பொருள் ஒப்புத்தரம் (positive degree), உறழ்தரம் (comparative degree) என இரு வகைப்படும்; இவற்றுள் முன்னது உவமப் பொருவு என்றும் பின்னது உறழ்பொருவு என்றும் கூறப்படும். காக்கையிற் கரிது என்பது காக்கையைப் போலக் கரிது எனப் பொருள்படின் உவமப் பொருவாம்; காக்கையைவிடக் கரிது எனப் பொருள்படின் உறழ்பொருளாம்.

ஐந்தாம் வேற்றுமை நீக்க வேற்றுமை என்றும் கூறப்படும்.

**12. ஐந்தாம் வதனுருபு இன்னும் இல்லும்**
**நீங்கல்ஒப் பெல்லை ஏதுப் பொருளே. (நன். சூ. 299)**

21. ***ஆறாம் வேற்றுமை:*** ஆறாம் வேற்றுமை உருபுகள் அது, ஆது, அ என்பன; அவற்றின் பொருள் கிழமை.

(கிழமை - உரிமை, உடைமை).

22. கிழமை தற்கிழமை, பிறிதின்கிழமை என இருவகைப்படும். தற்கிழமையாவது தன்னினின்றும் வேறாகப் பிரிக்கப்படாத கிழமை; பிறிதின் கிழமையாவது தன்னினிறும் வேறாகப் பிரிக்கப்படும் கிழமை.

23. தற்கிழமை - பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம் என ஐவகைப்படும்; பிறிதின்கிழமை பொருள், இடம், காலம் என மூவகைப்படும்.

ஒன்றன் கூட்டம் - ஒரே வகையான பொருளின் கூட்டம்; பலவின் ஈட்டம் - பல வகையான பொருளின் கூட்டம்; திரிபின் ஆக்கம் - ஒன்று திரிந்து மற்றொன்றாவது.

உ-ம்.

| | | |
|---|---|---|
| தற்கிழமை | 1. பூவினது அழகு | - குணப் பண்புத் தற்கிழமை |
| | இராமனது போக்கு | - தொழிற் பண்புத் தற்கிழமை |
| | 2. சாத்தனது கை | - உறுப்புத் தற்கிழமை |
| | 3. புறாக்களது கூட்டம் | - ஒன்றன் கூட்டத் தற்கிழமை |
| | 4. படைகளது தொகுதி | - பலவின் ஈட்டத் தற்கிழமை |
| | 5. நெல்லினது பொரி | - திரிபினாக்கத் தற்கிழமை |

| | | |
|---|---|---|
| பிறிதின்கிழமை | 1. முருகனது வேல் | - பொருட் பிறிதின்கிழமை |
| | 2. முருகனது மலை | - இடப் பிறிதிதின்கிழமை |
| | 3. முருகனது நாள் | - காலப் பிறிதின்கிழமை |

இனி, புலவரது செ-யுள், செ-யுட்கிழமை என ஒரு தனிக் கிழமை யா-க் கூறப்படும்.

உ-ம். கம்பரது ராமாயணம்.

எனது உயிர் என்று சொல்லும்போது நான் என்னும் உடையவனும், உயிர் என்னும் உடைமையும் ஒன்றாயிருத்தலின் அது ஒன்றிய தற்கிழமை எனப்படும்.

***குறிப்பு:*** ஆறாம் வேற்றுமை உருபுகளில் அது ஆது என்பன ஒருமைக்கும், அ என்பது பன்மைக்கும் பண்டைக் காலத்தில் வழங்கிய வழக்கு இக்காலத்தில் இறந்துபட்டது.

ஆறாம் வேற்றுமை, கிழமை வேற்றுமை என்றும் கூறப்படும்.

**13. ஆறன் ஒருமைக் கதுவும் ஆதுவும்**
**பன்மைக் கவ்வும் உருபாம்; பண்புறுப்**
**பொன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்**
**திரிபின் ஆக்க மாம்தற் கிழமையும்**
**பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே. (நன். சூ. 300)**

24. **ஏழாம் வேற்றுமை:** ஏழாம் வேற்றுமை உருபுகள் கண், கால் முதலியன. அவற்றின் பொருள், இடப்பொருள். அறுவகைப் பொருளும் இருவகைக் கிழமையிற் பிற பொருள்கட்கு இடமா- நிற்கும்.

உ-ம்.
| | |
|---|---|
| மரத்தின்கண் இலை - தற்கிழமை<br>மரத்தின்கட் பறவை - பிறிதின்கிழமை | பொருள் இடமாயிற்று. |
| மலையின்கட் சிகரம் - தற்கிழமை<br>மலையின்கண் மூங்கில் - பிறிதின்கிழமை | இடம் இடமாயிற்று. |
| மாதத்தில் நாள் - தற்கிழமை<br>மாதத்தில் மழை - பிறிதின்கிழமை | காலம் இடமாயிற்று. |
| விரலில் நகம் - தற்கிழமை<br>விரலில் மோதிரம் - பிறிதின்கிழமை | சினை இடமாயிற்று. |
| வடிவிற் சிறுமை - தற்கிழமை<br>இளமையிற் செல்வம் - பிறிதின்கிழமை | குணம் இடமாயிற்று. |
| ஆட்டத்தில் அபிநயம் - தற்கிழமை<br>ஆட்டத்திற் பாட்டு - பிறிதின்கிழமை | தொழில் இடமாயிற்று. |

ஏழாம் வேற்றுமை இடவேற்றுமை என்றும் கூறப்படும்.

**14. ஏழன் உருபுகண் ஆதி யாகும்**
**பொருள்முத லாறும் ஓரிரு கிழமையின்**
**இடனா— நிற்றல் இதன்பொருள் என்ப. (நன். சூ. 301)**

25. **எட்டாம் வேற்றுமை:** எட்டாம் வேற்றுமையாவது பெயரின் விகாரம்; அதன்பொருள் விளிப்பொருள்.

(விளித்தல் - அழைத்தல்.)

26. விளி ஏற்கும் பெயர் - ஈறு திரிதல், ஈறு குன்றல், ஈறு மிகுதல், இயல்பு, ஈற்றயல் திரிதல் என்னும் விகாரங்களை அடையும்.

ஈற்றயல் திரிதல் - கடைசிக்கு முந்தின எழுத்து வேறுபடுதல்.

உ-ம். தந்தை - தந்தா-, தம்பி - தம்பீ - ஈறு திரிதல்.
அன்பன் - அன்ப, அரசன் - அரச - ஈறு குன்றல்.
மகன் - மகனே, தா- - தாயே - ஈறு மிகுதல்.
சுந்தரம் - சுந்தரம், தம்பி - தம்பி - இயல்பு.
மக்கள் - மக்காள், புலவர் - புலவீர் - ஈற்றயல் திரிதல்.

நீண்டு விளிக்கும் பெயர்களெல்லாம் அளபெடுத்தே விளிக்கும்.

உ-ம். இராமாஅஅ.

ஒரு பெயர் விளியேற்கும்போது பல விகாரங்களை அடைவது முண்டு.

ஐயன் - ஐயா - ஈறு குன்றி அயல் திரிதல்.
ஐயன் - ஐயாவோ - ஈறுகுன்றி அயல் திரிந்து ஈறு மிகுதல்.

இயல்பாக நிற்கும் விளி இயல்புவிளி என்றும், சமீபத்திலுள்ளவரை விளித்தல் அண்மை விளி என்றும், தூரத்திலுள்ளவரை விளித்தல் சே-மை விளி என்றும், புலம்பலில் விளித்தல் புலம்பல் விளி என்றும் கூறப்படும். (அண்மை - சமீபம், சே-மை - தூரம்.)

அண்மை விளிக்கு இயல்பும், ஈறுகுன்றலும், சே-மைவிளிக்கு அள பெடையும், புலம்பல் விளிக்கு ஓ மிகலும் சிறப்பாகும்.

**15.** **எட்டன் உருபே எ–துபெய ரீற்றின்**
**திரிபு குன்றல் மிகுதல் இயல்புஅயல்**
**திரிபும் ஆம்பொருள் படர்க்கை யோரைத்**
**தன்முக மாகத் தானழைப் பதுவே.** **(நன். சூ. 303)**

### வினைச்சொல்

## பொதுவினைகள்

## *27.1. இருவினைப் பொதுவினைகள்*

### i. தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவினை

உ-ம். வெளுத்தான் - இது தான் வெளுத்தான் என்று பொருள்படின் தன்வினை; பிறிதொன்றை வெளுக்கச் செ-தான் என்று பொருள் படின் பிறவினை.

தோற்றுகிறது - இது தானே தோன்றுகிறது என்று பொருள்படின் தன் வினை; பிறிதொன்றைத் தோன்றச் செ-கிறது என்று பொருள்படின் பிறவினை.

### ii. உடன்பாட்டு வினைக்கும் எதிர்மறை வினைக்கும் பொதுவினை

உ-ம். செ-யா- - இது செ- என்று பொருள்படின் உடன்பாட்டு வினை; செ-யமாட்டா- என்று பொருள்படின் எதிர்மறை வினை.

உடன்பாட்டு வினைக்கு விதிவினை என்றும், எதிர்மறை வினைக்கு மறைவினை, விலக்குவினை என்றும் பெயர்.

**iii. செ—வினைக்கும் செ—யப்பாட்டு வினைக்கும் பொதுவினை**

உ-ம். இராமன் என்பான் - இது இராமன் என்று சொல்கிறவன் என்று பொருள்படின், என்பான் என்பது செ-வினை, இராமன் என்று சொல்லப்படுகிறவன் என்று பொருள்படின் என்பான் என்பது செயப்பாட்டு வினை.

## 2. பலசொற் பொதுவினை

உ-ம்.

வந்த - (1) வந்த - பெயரெச்சம்.
(2) வந்தன - பலவின்பாற் படர்க்கை வினைமுற்று.
(3) வந்தவை - வினையாலணையும் பெயர்.

தழைப்ப - (1) தழைக்க - நிகழ்கால வினையெச்சம்.
(2) தழைப்பர் - பலர்பாற் படர்க்கை வினைமுற்று.
(3) தழைப்பன - பலவின்பாற் படர்க்கை வினைமுற்று.

செ-யும் - (1) செ-யும் (பையன்) - எதிர்காலப் பெயரெச்சம்.
(2) (நீர்) செ-யும் - ஏவற் பன்மை.
(3) (அது) செ-யும் - ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்று.

செ-யா (1) செ-கின்றான் - நிகழ்கால வினைமுற்று.
நின்றான் -(2) செ-து நின்றான் - உடன்பாட்டு வினையெச்சத் தொடர்.
(3) செ-யாமல் நின்றான் - எதிர்மறை வினையெச்சத் தொடர்.

ஓடிய - (1) ஓடின - இறந்தகாலப் பெயரெச்சம்.
(2) ஓடின - பலவின்பாற் படர்க்கை வினைமுற்று.
(3) ஓடுதற்கு - எதிர்கால வினையெச்சம்.
(4) ஓடுக - வியங்கோள் வினை.

இங்ஙனமே பிறவும்.

## 3. இருதிணைப் பொதுவினை

28. தன்மைவினை, முன்னிலைவினை, வியங்கோள் வினை, வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுகள், பெயரெச்சம், வினை யெச்சம் ஆகிய இவையெல்லாம் இருதிணைக்கும் பொதுவான வினை களாம். இவற்றுள் தன்மை வினையும் முன்னிலை வினையும் இருதிணைக் கும் மட்டும் பொதுவாம். ஏனைய வெல்லாம் இருதிணை ஐம்பால் மூவிடங் கட்கும் பொதுவாம்.

உ-ம்.

தன்மை வினை - வந்தேன், (ஒரு மகன் சொல்வது) உயர்திணை.
வந்தேன், (ஒரு கிளி சொல்வது) அஃறிணை.

முன்னிலை வினை - வந்தா-, (ஒரு மகனை நோக்கிச் சொல்வது) உயர்திணை.
வந்தா-, (ஒரு கிளியை நோக்கிச் சொல்வது) அஃறிணை.

## வியங்கோள் வினை

நான் செல்க
நாம் செல்க } தன்மை

நீ செல்க
நீர் செல்க } முன்னிலை

அவன் செல்க
அவள் செல்க
அவர் செல்க
அது செல்க
அவை செல்க } படர்க்கை

## குறிப்பு வினை

நான், நாம்
நீ, நீர்
அவன், அவள், அவர்,
அது, அவை } வேறு, இல்லை, உண்டு

## பெயரெச்சம்

வந்த - நான், நாம். - தன்மை
வந்த - நீ, நீர். - முன்னிலை
வந்த - அவன், அவள், அவர், அது, அவை. - படர்க்கை

## வினையெச்சம்

வந்து - போனேன், போனோம்.
வந்து - போனா-, போனீர்.
வந்து - போனான், போனாள், போனார், போனது, போயின.

**16. தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை**
**உண்டீ ரெச்சம் இருதிணைப் பொதுவினை. (நன். சூ. 330)**

## 'செ-யும்' என்னும் வா-பாட்டு வினைமுற்று

29. செ-யும் என்னும் வா-பாட்டு வினைமுற்று, தன்மையிலும், முன்னிலையிலும் வராமல், படர்க்கையில் பலர்பாலொழிந்த மற்றை நான்கு பாற்கும் பொதுவா- வரும். ஆதலின், இதுவும் ஓர் இருதிணைப் பொதுவினையாம்.

உ-ம்.
அவன்
அவள்
அது
அவை } வரும்

**17. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்**
**செல்லா தாகும் செ–யும்என் முற்றே. (நன். சூ. 348)**

## 'செ-யா' என்னும் வா-ப்பாடு வினையெச்சம்

30. 'செ-யா' என்னும் வா-பாட்டு வினையெச்சம் செ-து என்று பொருள்படும் இறந்தகால உடன்பாட்டு வினையெச்சமாகும்.

உ-ம். 'பெ-யாக் கொடுக்கும்' - பெ-து கொடுக்கும்.
உண்ணா மகிழ்ந்தான் - உண்டு மகிழ்ந்தான்.

***குறிப்பு:*** செ-யா என்னும் வா-பாட்டு வினை, பல சொல்லாகவும் நிற்கும்.

உ-ம்.
செ-யா - (1) செ-யாத - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
(2) செ-யாமல் - ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்.
(3) செ-யமாட்டா - பலவின்பால் எதிர்மறை வினைமுற்று.

## ஏவலுக்கும் பகுதிக்கும் வேறுபாடு

31. ஏவலொருமை வினைமுற்று, விகுதி பெற்றும் விகுதி பெறாமற் பகுதியளவாயும் இருவகையா- நிற்கும்.

உ-ம். வாரா-, வருதி - விகுதி பெற்றது.
வா - பகுதியளவா- நின்றது.

32. ஏவற்பன்மை வினைமுற்று, விகுதி பெற்றே நிற்கும்.

உ-ம். வாரும், வாருங்கள்,
வாரீர்
வருதிர்
வம்மின், வம்மின்கள்.

33. பகுதி யளவா- நிற்கும் ஏவலொருமை வினைமுற்றும், வினைப் பகுதியும் வடிவிற் பெரும்பாலும் ஒத்திருப்பினும், பிறவகையிற் பெரிதும் வேறுபடுவனவாகும்.

1. ஏவல்வினை எடுத்தலோசையாற் கட்டளையை யுணர்த்தும்;

வினைப்பகுதி படுத்தலோசையால் தொழிலை யுணர்த்தும்.

2. ஏவல்வினை என்றும் வேறுபடாதிருக்கும்; வினைப்பகுதி சிறு பான்மை வேறுபடும்.

| உ-ம். | ***ஏவல் வினை*** | ***வினைப்பகுதி*** |
|---|---|---|
| | வா | வருகிறான். |
| | காண் | கண்டான். |

3. ஏவல்வினை தனித்து வரும், வினைப்பகுதி விகுதி முதலிய பிற உறுப்புகளோடு சேர்ந்து வரும்.

## *முற்றெச்சம்*

34. வினைமுற்று, எச்சப் பொருள்படின் முற்றெச்ச மெனப்படும்.

தெரிநிலை வினைமுற்று வினையெச்சப் பொருளிலும், குறிப்பு வினை முற்று பெயரெச்ச வினையெச்சப் பொருள்களிலும் வந்து முற்றெச்ச மாகும்.

உ-ம். கண்டனன் தொழுதான் - இதில் கண்டனன் என்னும் தெரி நிலை வினைமுற்று, கண்டு என வினையெச்சப் பொருள்படு தலின் முற்றெச்சம்.
வில்லினன் வந்தான் - இதில் வில்லினன் என்னும் குறிப்பு வினைமுற்று, வில்லையுடையவனா- எனப் வினையெச்சப் பொருள்படுதலின் முற்றெச்சம்.
வில்லினன் இராமன் வந்தான் - இதில் வில்லினன் என்னும் குறிப்பு வினைமுற்று, வில்லையுடைய எனப் பெயரெயெச்சப் பொருள் படுதலின் முற்றெச்சம்.

**18. வினைமுற் றேவினை யெச்சம் ஆகலும்**
**குறிப்புமுற் றீரெச்சம் ஆகலும் உளவே. (நன். சூ. 351)**

# இடைச்சொல்

## 'மற்று' என்னும் இடைச்சொல்

35. மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்று, அசைநிலை, பிறிது என்னும் மூன்று பொருள்களில் வரும்.

உ-ம். கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வார்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

இதில்மற்று என்னும் இடைச்சொல் கெடுப்பது என்னும் வினையை மாற்றி அதன் எதிர்மறையாகிய கெடுக்காமையைக் குறித்தலால் வினைமாற்று.

'மற்றென்னை யாள்க' - இதில் மற்று என்பது வேறு பொருளின்றி அசையா- நிற்றலா- அசைநிலை.

மற்றொன்று - இதில் மற்று என்பது பிறிது என்று பொருள் பட்டது.

**19. வினைமாற் றசைநிலை பிறிதெனும் மற்றே. (நன். சூ. 433)**

## 'கொல்' என்னும் இடைச்சொல்

36. கொல் என்னும் இடைச்சொல் ஐயப் பொருளிலும், அசைநிலைப் பொருளிலும் வரும்.

உ-ம். அவ் வுருக் குற்றிகொல். மகன்கொல் - இதில் குற்றியோ மகனோ என்று ஐயப்பொருள் தருதலால் கொல் ஐயம்.
'கற்றதனா லாய பயனென்கொல்' இதில் கொல் என்பது வேறு பொருளின்றி அசையா- நிற்றலின் அசைநிலை.

**20. கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே. (நன். சூ. 435)**

## 'மன்' என்னும் இடைச்சொல்

37. மன் என்னும் இடைச்சொல் அசைநிலை, ஒழியிசை, ஆக்கம், கழிவு, மிகுதி, நிலைபேறு என்னும் ஆறு பொருளைத் தரும்.

**'காதலாள் பெயர்மன்னும் கண்ணகியென் பாள்மன்னோ'**

இதில் மன் என்பது வேறு பொருளின்றி அசையா- நிற்றலின் அசை நிலை.

கூரியதோர் வாள்மன் - இதில் ‘இப்போது ஒடிந்துவிட்டது’ என்னும் ஒழிந்த சொற்களைத் தருதலால் மன் ஒழியிசைச் பொருளில் வந்தது.

பண்டு காடுமன் - இதில் ‘இப்போது நாடாயிற்று’ - எனப் பொருள் தருதலின் மன் ஆக்கப் பொருளில் வந்தது.

‘சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே’ இதில் இப்போது அவன் இல் லாமையால் எமக்குக் கொடுத்தல் ஒழிந்தது என்று பொருள் தருதலின் கழி வுப் பொருளில் வந்தது.

‘இயல்பினும் விதியினும் நின்ற வுயிர்முன்

கசதப மிகும்வித வாதன மன்னே’- இதில் மன் என்பது பெரும் பாலும் என்று பொருள்படுதலின், மிகுதிப் பொருளில் வந்தது.

‘மன்னா வுலகத்து மன்னியது புரிமோ’ - இதில் மன் என்னும் இடைச் சொல்லடியா-ப் பிறந்த மன்னா, மன்னியது என்னும் சொற்கள் நிலைபெறாத, நிலைபெற்றது எனப் பொருள்படுதலின், மன் நிலைபேற்றுப் பொருளில் வந்தது.

**21. மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்**
**கழிவு மிகுதி நிலைபே றாகும். (நன். சூ. 432)**

## *‘தான்’ என்னும் இடைச்சொல்*

38. தான் என்னும் இடைச்சொல் அசைநிலை, பிரிநிலை, தேற்றம் எனும் மூன்று பொருள்களில் வரும்

உ-ம். ‘தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான்’ இதில் தான் என்பது வேறு பொருளின்றி அசையா- நிற்றலின் அசைநிலை.

அவன்தான் செ-தான் - இதில் தான் என்பது ஒரு கூட்டத்தாருள் ஒருவனைப் பிரித்து நிற்றலின் பிரிநிலை.

வரத்தான் செ-வான் - இதில் நிச்சயமா- வருவான் என்று பொருள் படுதலின் தான் என்பது தேற்றப் பொருளில் வந்தது.

## *உரிச்சொல்*

39. **ஒருகுணம் குறித்த பல உரிச்சொல்** - சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் ஆறு உரிச்சொற்களும், மிகுதி என்னும் ஒரே குணத்தை உணர்த்தும்.

உ - ம். சாலப்பல நனிபேதை
உறுவளி களிகூர் மனம்
தவப்பெரிது கழிநெடில்

**22. சால உறுதவ நனிகூர் கழிமிகல். (நன். சூ. 456)**

40. **பலகுணம் குறித்த ஓர் உரிச்சொல்** - கடி என்னும் உரிச்சொல் காப்பு, கூர்மை, விரை (மணம்), விளக்கம் (ஒளி), அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல் (ஒலித்தல்), வரைவு (நீக்கல்), மன்றல் (திருமணம்), கரிப்பு முதலிய பல குணங்களை யுணர்த்தும்.

உ - ம். கடிநகர் - காப்பு கடிகாற்று - மிகுதி
கடிவேல் - கூர்மை கடிமணம் - புதுமை
கடிமலர் - விரை கடிமுரசு - ஆர்த்தல்
கடிமார்பு - விளக்கம் கடியது - வரைவு
கடிப்பே- - அச்சம் கடிவினை - மன்றல்
கடியரண் - சிறப்பு கடிமிளகு - கரிப்பு
கடிச்செலவு - விரைவு.

கடி என்னுஞ் சொல் கடு என்றும் திரியும்.

உ - ம். கடுஞ்சூல் - முதற்சூல்.
கடும்புலி - கொடிய புலி.
கடும்பகல் - நடுப்பகல்.
கடுக்கா- - துவர்ப்புக் கா-.

**23. கடியென் கிளவி காப்பே கூர்மை**
**விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்**
**வரைவே மன்றல் கரிப்பின் ஆகும். (நன். சூ. 457)**

# பொதுவியல்

## *வழாநிலை, வழு, வழுவமைதி*

41. சொற்கள் பொருட் சம்பந்தப்பட்டுத் தொடர்ந்து நிற்கும் பொழுது, முடிக்கப்படுஞ் சொற்களோடு முடிக்குஞ் சொற்கள் திணை, பால், எண், இடம், காலம் முதலியவற்றில் ஒத்து இலக்கணப்பிழை யில்லாதிருப்பின் வழாநிலையாம்; இலக்கணப் பிழையா யிருப்பின் வழுநிலையாம்; இலக்கணப் பிழையாயிருந்தும் ஒரு பயன்நோக்கி ஆன்றோரால் அமைக்கப் படின் வழுவமைதியாம்.

வழு - குற்றம், பிழை. வழாநிலை - பிழையில்லா நிலை.
அமைக்கப்படுதல் - அங்கீகரிக்கப்படுதல்.

உ-ம். இராமன் வந்தான் - வழாநிலை
நேற்று வருவான் - வழு.
இதோ வந்தேன் - வழுவமைதி.

ஒருவன் தான் வருமுன்னமே வந்தேன் என்பது வழுவாயினும், விரைவு பற்றி அமைக்கப்படுதலின், வழுவமைதியாயிற்று. இங்ஙனமே பிறவும்.

## *திணை வழுவமைதி*

42. திணை வழுவமைதியாவது திணைவழுவி ஒரு காரணம்பற்றி அமைக்கப்படுதல்.

43. உயர்திணை எழுவாயைத் தொடர்ந்த பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பொருட்பெயர்களும் அஃறிணை யாயினும், அவ் வுயர்திணையோடு சார்த்திக் கூறப்படும்போது உயர் திணை முடிபைப் பெறும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். குபேரன் பொன் பெரியன் | - பொருள் | | |
| அரசன் நாடு பெரியன் | - இடம் | | உயர்திணை எழுவாயின் பயனிலைகளை அஃறிணை எழுவா-களும் கொண்டுமுடிந்தன. |
| வைத்தியன் வாழ்நாள் பெரியன் | - காலம் | | |
| நம்பி கை நெடியன் | - சினை | | |
| பெற்றோர் அன்பு பெரியர் | - குணம் | | |
| குமணன் கொடை பெரியன் | - தொழில் | | |

குபேரன் பொன் பெரியன் என்பதில், பொன் என்னும் அஃறிணை எழுவா- குபேரன் என்னும் உயர்திணை எழுவாயின் பயனிலையாகிய பெரி யன் என்பதைக் கொண்டு முடிவது வழுவாயினும், தொடர்புபற்றி உயர் திணையோடு சார்த்தி முடிக்கப்படுதலால், வழுவமைதி யாயிற்று, சார்த்தி முடிக்கப் படாவிடின், குபேரனுக்குப் பொன் பெரிது எனத் தன் முடிபு கொள்ளும் இங்ஙனமே பிறவும்.

**24. உயர்திணை தொடர்ந்த பொருள்முத லாறும்**
**அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின. (நன். சூ. 377)**

## *திணை பால் வழுவமைதி*

44. திணையும் பாலும் உவப்பினாலும், உயர்த்துக் கூறுதலினாலும், சிறப்பினாலும், செறலினாலும், இழிவாகக் கூறுதலினாலும் வழுவி வரினும் அமைதியே யாகும்.

உ-ம். உவப்பு - மகிழ்ச்சி, செறல் - கோபம், இழிவு - தாழ்வு.

### *திணை வழுவமைதி*

1. ஒரு பசுவை 'என் அம்மை வந்தாள்' என்பதில், உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

2. நாலடியார் என்பதில், உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

3."தம்பொரு ளென்பதம் மக்கள்" இதில், சிறப்பினால் உயர்திணை அஃறிணை யாயிற்று.

**4. 'சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்**
**பொருக்குலர்ந்த வாயா புலையா – திருக்குடந்தைக்**
**கோட்டானே நாயே குரங்கே யுனையொருத்தி**
**போட்டாளே வேலையற்றுப் போ–'**

இதில் செறலினால் உயர்திணை அஃறிணை யாயிற்று.

5. நான் தொண்டரடிப் பொடியாவேன் என்பதில், இழிவினால் உயர் திணை அஃறிணையாயிற்று.

### *பால் வழுவமைதி*

1. தா- தன் மகனை 'என் அம்மை வந்தாள்' என்பதில் உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

2. ஒருவனைப் பார்த்து அவர், அவர்கள் என்பதில், உயர்வினால் ஆண்பால் (ஒருமைப்பால்) பலர்பால் (பன்மைப்பால்) ஆயிற்று.

இஃது உயர்வுப் பன்மை என்றும் மரியாதைப் பன்மை என்றும் கூறப் படும்.

3. 'தாயாகி தந்தையுமா-த் தாங்குகின்ற தெ-வம்'

இதில் சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

4. 'எனைத்துணைய ராயினு மென்னாம் திணைத்துணையும்
தேரான் பிறனில் புகல்'-

இதில் செறலினால் பலர்பால் (பன்மைப் பால்) ஆண்பால் (ஒருமைப் பால்) ஆயிற்று.

5. ஆண்மை யில்லாதானை நோக்கி, 'இவன் பெண்' என்பதில் இழி வினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

**25. உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்**
**இழப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே. (நன். சூ. 379)**

## பால் இட வழுவமைதி

45. ஒருமைப் பாலிற் பன்மைச் சொல்லும் பன்மைப் பாலில் ஒரு மைச் சொல்லும், ஓர் இடத்திற் பிறவிடச் சொல்லும் வந்து தழுவினும் ஒரு காரணம்பற்றி அமைக்கப்படும்.

### பால் வழுவமைதி

உ-ம்.

1. 'நீரெல்லாம் வற்றியது' என்பதில் நீர் என்னும் ஒருமைப் பாலில் எல்லாம் என்னும் பன்மைச்சொல் வந்து மயங்கி, முழுதும் என்று பொருள் தருதலின், வழுவமைதியாயிற்று. இஃது ஒருமை பன்மை மயக்கம் என்று கூறப்படும்.
2. 'இரு கண்ணும் சிவந்தது' என்பதில் இருகண் என்னும் பன்மைப் பாலில், சிவந்தது என்னும் ஒருமைச் சொல் வந்து மயங்கினும், சாதியொருமை பற்றி இருகண்ணும் ஒன்றாக எண்ணப்படுதலின் வழுவமைதியாயிற்று. இது பன்மை யொருமை மயக்கம் என்று கூறப்படும்.

### இட வழுவமைதி

1. 'இராமன் இதைச் செ-வேனோ' - இதில் யான் எனச் சொல்ல வேண்டிய தன்மையிடத்தில் இராமன் என்னும் படர்க்கைச் சொல் வந்தது. இதற்கு 'இராமனாகிய நான்' என்பது பொருள். இது தன்மைப் படர்க்கை எனப்படும்.

2. 'எந்தையை ஈங்குக் கண்டேன்'- இதில் உன்னை எனச் சொல்ல வேண்டிய முன்னிலை யிடத்தில், எந்தை (என் தந்தை) என்னும் படர்க்கைச் சொல் வந்தது. இதற்கு எந்தையாகிய உன்னை என்பது பொருள். இது முன்னிலைப் படர்க்கை யெனப்படும்.

**26. ஒருமையிற் பன்மையும் பன்மையின் ஒருமையும்**
**ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே. (நன். சூ. 380)**

## கால வழுவமைதி

46. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக்காலத்திலும் இடையறாது ஒரு தன்மையா- நிகழும் பொருள்களை நிகழ்காலத்திற் கூறு வர் ஆன்றோல் அது வழுவாயினும், இறந்த காலத்தையும், எதிர்காலத்தை யும் இடைநின்று இணைக்கும் நிகழ்காலத்தைப்போல, நிலையான பொருள் களைக் கூற வேறு காலமின்மையின் அமைக்கப்படும்.

உ-ம். கடவுள் இருக்கிறார்.
மலை நிற்கிறது.

இவற்றைக் 'கடவுள் இருந்தார்', 'மலை நின்றது' எனப் பிற காலத் தாற் கூறின், இப்போது கடவுள் இல்லை, மலை நிற்கவில்லை என்று பொருள் படுதல் காண்க.

இனி, முக்காலப் பொருள்களை எதிர்காலத்தாற் கூறுவது முண்டு.

உ-ம்: நீர் குளிரும்; தீச்சுடும்.

**27. முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்**
**செப்புவர் நிகழும் காலத் தானே. (நன். சூ. 383)**

47. விரைவும், மிகுதியும், தெளிவும், இயல்பும் பற்றி முக்காலங்களை யும் ஒன்றை மற்றொன்றாக மாற்றிக் கூறுவதுமுண்டு. அவையும் வழு வமைதியாம்.

மிகுதி - பெரும்பான்மை. தெளிவு - நிச்சயம்.

உ-ம்.

1. உண்ணற்கிருப்பவனை ஒருவன் விரைவில் அழைத்துப் போக வேண்டி 'இன்னும் உண்ணவில்லையா' என்றால், அவன் 'உண்டேன் உண்டேன்' என்பான். உண்கின்றவனை அங்ஙனம் வினாவினாலும் அவனும் 'உண் டேன் உண்டேன்' என்பான். இவற்றில் விரைவுபற்றி எதிர்காலமும், நிகழ்காலமும் இறந்த காலமாகச் சொல்லப்பட்டன.
2. இவ்வழியே சென்றாற் பொருளைப் பறிகொடுத்தா-, பறிகொடுக்கின் றா- - இதில் மிகுதிபற்றி எதிர்காலம் இறந்த காலமும், நிகழ்காலமுமாகச் சொல்லப்படுகிறது. பறிகொடுத்தல் சிறுபான்மை தவறினும், தவறுமாத லின், பெரும்பான்மைபற்றி மிகுதி யெனப்பட்டது.
3. அறம் செ-தால் துறக்கம் புகுந்தான்; புகுகின்றான் - இதில் தெளிவுபற்றி எதிர்காலம் இறந்த காலமும், நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது. அறம் செ-தால் துறக்கம் புகுதல் நிச்சயமாதலின் தெளிவெனப்பட்டது.
4. யாம் முன்னே விளையாடுவது, விளையாடுகிறது இச் சோலை. இதில் இயல்பு (வழக்கம்) பற்றி இறந்தகாலம் எதிர்காலமும், நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது.

**28. விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்**
**பிறழவும் பெறூஉம்முக் காலமும் ஏற்புழி. (நன். சூ. 384)**

## மரபு

48. எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எப்படி அறிவுடையோர் சொன்னார்களோ, அப்படியே சொல்வது மரபு எனப்படும். மரபு - வழக்கு.

உ-ம். ஆட்டிடையன், யானைப் பாகன்; குதிரைக் குட்டி, பசுவின் கன்று, தென்னம்பிள்ளை, வேப்பங்கன்று, பனங்குரும்பை, புளியம் பிஞ்சு; மா இலை, பனை ஓலை எனச் சொல்லுதல் மரபு. இங்ஙன மன்றி ஆட்டுப்பாகன், யானையிடையன்; குதிரைக் கன்று, பசுவின் குட்டி; தென்னங்கன்று, வேப்பம்பிள்ளை, பனம் பிஞ்சு, புளியங் குரும்பை, மா ஓலை, பனை இலை எனச் சொல்லுதல் மரபு வழுவாம்.

**29. எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே. (நன். சூ. 388)**

## *ஒருபொருட் பன்மொழி*

49. ஒரே பொருளிற் பல சொற்கள் அடுக்கி வந்து, அவற்றுள் முதற் சொல் தன் பொருளை உணர்த்த, பிற சொற்களெல்லாம் அப் பொருளை மிகுத் துக் காட்டுமாயின் ஒருபொருட் பன்மொழி யெனப்படும்.

இதற்கு மீமிசைச் சொல் என்றும் பெயர். மீ என்பது மேல். மிசை என் பதும் மேல். மேலும் மேலும் ஒரே பொருளிற் பல சொல் வருவது மீமிசைச் சொல்.

உ-ம். நாகிளங் கமுகு - மிக இளைய கமுகு.
மாபெரு வையம் - மிகப் பெரிய வையம்.

ஓங்கி யுயர்ந்த மரம் - மிக வுயர்ந்த மரம்.
ஒரு தனிச் செல்வன் - சிறிதும் இணையற்ற செல்வன்.

**30. ஒரு பொருட் பன்மொழி சிறப்பி னின்வழா. (நன். சூ. 398)**

## *இரட்டைக் கிளவி*

50. இசையும் குறிப்பும் பண்பும்பற்றிச் சில சொற்கள் இரட்டித்தே வரும். அவை இரட்டைக் கிளவி எனப்படும். இசை - ஒலி. கிளவி - சொல்.

உ-ம். கலகலவென்று சிரித்தான்.
மடமடவென்று இரைந்தது. } இசை

'விண்பட்ட கொக்கு வல்லூறு கண்டன்ன விலவிலக்க'
'குறுகுறு நடந்து' } குறிப்பு

மினுமினு வென்றிருக்கிறது காக்கைப் பொன்.
பயிர் கருகரு வென்று வளர்ந்துவிட்டது. } பண்பு

இரட்டைக் கிளவி பிரிந்திசைப்பதில்லை. பிரிந்திசைப்பின் இரட் டைக் கிளவிப் பொருள் கெடும்.

அடுக்குத் தொடருக்கும், இரட்டைக் கிளவிக்கும் வேறுபாடு.

1. அடுக்குத் தொடர்ச்சொல் தனித்துவரும்; இரட்டைக் கிளவி தனித்து வராது, இரட்டித்தே வரும்.

2. அடுக்குத் தொடர்ச்சொல் மும்முறை வரை அடுக்கிவரும்; இரட் டைக் கிளவி இருமுறைக்குமேல் வராது.

**31. இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா. (நன். சூ. 396)**

# *புணரியல்*

## *இயல்பு புணர்ச்சி*

### *சில அகரவீற்றின் முன் வல்லினம்*

51. ‘செ-யிய’ என்னும் வா-பாட்டு வினையெச்சத்திற்கும், பலவகை அகர வீற்றுப் பெயரெச்சங்கட்கும், அகரவீற்று வினைமுற்றுகளுக்கும், ஆறாம் வேற்றுமை அகர உருபிற்கும், அகரவீற்றுப் பலவின்பாற் பெயர் கட்கும், ‘அம்ம’ என்னும் உரையசை இடைச்சொற்கும் முன்வரும் வல்லினம் இயல்பாம். செ-யிய - செ-ய.

உ-ம்.

உண்ணிய + சென்றான் = உண்ணிய சென்றான் - செ-யிய என்னும் வா-பாட்டு வினையெச்சம்.

உண்ட + பையன் = உண்ட பையன்

உண்கின்ற + குதிரை = உண்கின்ற குதிரை

உடன்பாட்டுத் தெரிநிலைப் பெயரெச்சம்.

உண்ணாத + பையன் = உண்ணாத பையன் - எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம்

பெரிய + பொருள் = பெரிய பொருள் - உடன்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சம்

இல்லாத + பொருள் = இல்லாத பொருள் - எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்

உண்டன + குதிரைகள் = உண்டன குதிரைகள் - தெரிநிலை வினைமுற்று.

சிறியன + பறவைகள் = சிறியன பறவைகள் - குறிப்பு வினைமுற்று.

வாழிய + கொற்றன் = வாழிய கொற்றன் - வியங்கோள் வினைமுற்று.

தன + கைகள் = தன கைகள் - ஆறனுருபு.

பல + பையன்கள் = பல பையன்கள் - அஃறிணைப் பன்மைப் பெயர்.

சில + தந்தான் = சில தந்தான் - அஃறிணைப் பண்மைப்பெயர்.

அம்ம + கொற்றா = அம்ம கொற்றா - அம்ம என்னும் இடைச்சொல்.

இவற்றுள் 'தன கைகள்', சில தந்தான்', என்னும் இரண்டும் வேற்றுமை வழி; ஏனையவெல்லாம் அல்வழி.

**32. செ–யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரின் எச்சமுற் றாறன் உருபே
அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே. (நன். சூ. 167)**

## *சில முற்றியலுகரத்தின் முன் வல்லினம்*

52. 'ஒடு' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபிற்கும், 'அது' என்னும் ஆறாம் வேற்றுமை உருபிற்கும், எண்ணுப் பெயர்கட்கும், வினைத்தொகைக்கும் சுட்டுப்பெயர்கட்கும் ஈறாகும் முற்றியலுகரத்தின் முன் வலிவரின் இயல்பாம்.

உ-ம் இராமனொடு + சென்றான் = இராமனொடு சென்றான் - மூன்றாம் வேற்றுமை உருபு.

இராமனது + பொருள் - இராமனது பொருள் - ஆறாம் வேற்றுமை உருபு.

ஒரு + படி = ஒருபடி
ஏழு + பாடம் + ஏழுபாடம் } எண்ணுப்பெயர்.

இடு + தேள் = இடுதேள்
தொழு + குலம் = தொழுகுலம் } வினைத்தொகை.

அது + சொன்னான் = அது சொன்னான்
இது + பெரிது = இது பெரிது } சுட்டுப்பெயர்.

இவற்றுள் உருபு புணர்ச்சிகளும், அது சொன்னான் என்னும் சுட்டுப்பெயர்ப் புணர்ச்சியும் வேற்றுமைவழி; ஏனைய அல்வழி.

வினாப்பெயரின் ஈற்று முற்றியலுகரத்தின் முன்னும், இருவழியிலும் வலிவரின் இயல்பாம்.

உ-ம். எது + தந்தான் - எது தந்தான்.
எது + பெரிது = எது பெரிது.

**33. மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ
றாகும் உகரம் முன்னர் இயல்பாம். (நன். சூ. 179)**

### *விகாரப் புணர்ச்சி*

## *1. மிகுதல்*

**சில எண்ணுப் பெயர் இரட்டித்தல்**

53. ஒன்று முதலிய முதற்பத்து எண்களில், ஒன்ப தொழிந்த மற்றை ஒன்பது எண்களும் இரட்டித்துவரின் (அதாவது தம் முன் தாம் வரின்), நிலைமொழியில் முதலெழுத்தொழிந்த மற்றை எழுத்துகளெல்லாம் கெட, வருமொழி முதலில் உயிரெழுத்து நிற்பின் வகர மெ-யும் மெ-யெழுத்து நிற்பின் அம் மெ-யும் மிகும்.

நிலைமொழி முதலெழுத்து நெடிலாயின் குறுகும்; ஐகாரமாயின் அக ரமா-த் திரியும்.

உ-ம். ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று
இரண்டு + இரண்டு = இவ்விரண்டு
ஐந்து + ஐந்து = அவ்வைந்து
ஆறு + ஆறு = அவ்வாறு
ஏழு + ஏழு = எவ்வேழு
எட்டு + எட்டு = எவ்வெட்டு
} வருமொழிமுதலில் உயிர் வர வகரம் மிக்கது.

மூன்று + மூன்று = மும்மூன்று
நான்கு + நான்கு = நந்நான்கு.
பத்து = பத்து = பப்பத்து
} வருமொழி முதலில் வந்த மெ-கள் மிக்கன.

வேறு பெயர்கள் இரட்டிக்கும்போது இவ் விகாரத்தை யடையவதும், எண்ணுப்பெயர்கள் வேறு புணர்ச்சி யடைவதுமுண்டு.

உ-ம். வேறு + வேறு = வெவ்வேறு
பாதி + பாதி = பப்பாதி
} -வேறு பெயர்
ஒன்று + ஒன்று = ஒரோவொன்று
ஒன்று + ஒன்று = ஒன்றொன்று
இரண்டு + இரண்டு = இரண்டிரண்டு
} -எண்ணுப் பெயர்கள்.

**34.** **ஒன்ப தொழிந்தஎண் ஒன்பதும் இரட்டின்**
**முன்னதின் முன்னல ஓட உயிர்வரின்**
**வவ்வும், மெ–வரின் வந்ததும் மிகல்நெறி. (நன். சூ. 199)**

## 2. கெடுதலும், மிகுதலும்

### ஐகாரத்தின் முன் மெ–

54. வேற்றுமைப் புணர்ச்சியில் ஐகார வீற்றுச் சொற்களின் இறுதி ஐகாரம் கெட, 'அம்' சாரியை தோன்றுவதுமுண்டு.

உ–ம். பனை + காடு = பனங்காடு
தாழை + பூ = தாழம்பூ
எலுமிச்சை + பழம் + எலுமிச்சம்பழம்
} இறுதிகெட 'அம்' சாரியை தோன்றிற்று.

இனி, ஐகார வீற்றுச் சொற்கள் இறுதி கெடாது, 'அம்' சாரியை பெற் றும் பெறாதும் வருவது முண்டு.

உ–ம்
புன்னை + கானல் = புன்னையங் கானல்.
முல்லை + தொடை = முல்லையந் தொடை
} இறுதி கெடாது'அம்' சாரியை பெற்றன.

முல்லை + புறவு = முல்லைப் புறவு.
கொல்லை + புறம் = கொல்லைப்புறம்.
} இறுதி கெடாதும் 'அம்' சாரியை பெறாதும் வந்தன.

**35.** **வேற்றுமை யாயின் ஐகான் இறுமொழி**
**ஈற்றழி வோடும்அம் ஏற்பவும் உளவே. (நன். சூ. 202)**

## 3. திரிதல்

### i. மகரத்தின் முன் ஞ, ந.

55. நும், தம், எம், நம் என்னும் பெயர்களின் இறுதியிலுள்ள மகர மெ–, வருமொழி முதலில் உள்ள ஞகர நகரங்களாகத் திரியும்.

உ–ம்.
நும் + ஞாண், நூல் = நுஞ்ஞாண் , நுந்நூல்.
தம் + ஞாண், நூல் = தஞ்ஞாண், தந்நூல்.
எம் + ஞாண், நூல் = எஞ்ஞாண், எந்நூல்.
நம் + ஞாண், நூல் = நஞ்ஞாண், நந்நூல்.
} நிலைமொழி யீற்று மகரமெ– ஞகர நகரங்களாகத் திரிந்தது.

நும் என்பதன் திரிபாகிய உம் என்பதும் இதே புணர்ச்சியடையும்.

உ–ம். உம் + ஞாண், நூல் = உஞ்ஞாண், உந்நூல்.

**36.** **நும் தம்**
**எம்நம் ஈநாம் மவ்வரு ஞநவே.** **(நன். சூ. 221)**

### ii. *தனிக்குறி லணைந்த லளமுன் த*

56. அல்வழிப் புணர்ச்சியில் தனிக்குறிலை அடுத்த லகர ளகர மெ-கள் வருமொழி முதலில் தகரம் வரின் முறையே றகர டகரங்களாகத் திரி வதுடன் ஆ-தமாகவும் பெறும்.

உ-ம்.
அல் + திணை = அஃறிணை
முள் + தீது = முஃடீது } ல ள, ஆ-தமாகத் திரிந்தன.
கல் + தீது = கற்றீது
முள் + தீது = முட்டீது } ல ள, றகர டகரங்களாகத் திரிந்தன.

**37.** **குறில்வழி லளத்தவ் வணையின் ஆ—தம்**
**ஆகவும் பெறூஉம் அல்வழி யானே.** **(நன். சூ.)**

## 4. *மிகுதலும் திரிதலும்*

குற்றியலுகரப் புணர்ச்சி. குற்றியலுகரத்தின் முன் நாற்கணம்.

### i. *ஒற்று இரட்டித்தல்*

57. நெடிற்றொடர்க் குற்றியலுகரமும், உயிர்த்தொடர்க் குற்றியலுகர மும் ஏறிய டகர றகர மெ-கள் வேற்றுமை வழியிற் பெரும்பாலும் இரட்டும்.

உ-ம்.
காடு + விலங்கு = காட்டு விலங்கு
ஆறு = நீர் = ஆற்று நீர் } நெடிற்றொடரில், ட, ற இரட்டித்தன.

முரடு + மனிதன் = முரட்டுமனிதன்
வயிறு + எரிச்சல் = வயிற்றெரிச்சல் } உயிர்த்தொடரில் ட, ற இரட்டித்தன.

இனி, 'நாடு கிழவோன்' 'கிணறு வெட்டினான்' என டகர றகர மெ-கள் வேற்றுமை வழியில் இரட்டாமலும், 'காட்டரண்' 'களிற்றியானை' என அல்வழியில் இரட்டித்தும் வருதலும். 'வெருக்குக்கண்' 'எருத்துமாடு' எனப் பிறமெ-கள் இருவழியிலும் இரட்டித்து வருதலும் கொள்க.

**38.** **நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்**
**டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.** **(நன். சூ. 183)**

### ii. மென்றொடர் வன்றொடராதல்

58. மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுட் சில வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கினமான வன்றொடர் மொழிகளாகத் திரியும்; பல அங் ஙனம் திரியா.

| | | |
|---|---|---|
| உ-ம். | இரும்பு + பாதை = இருப்புப்பாதை<br>வேம்பு + இலை = வேப்பிலை<br>குரங்கு + குட்டி = குரக்குக்குட்டி<br>மருந்து + பை = மருத்துப்பை | வேற்றுமை வழியில் வன்றொடராயின. |
| | வண்டு + கால் = வண்டுக்கால்<br>பந்து + வடிவு = பந்துவடிவு<br>நண்டு + கண் = நண்டுக்கண்<br>சங்கு + இனம் = சங்கினம் | வேற்றுமை வழியில் வன்றொடரா காதன. |

இனி, 'நச்சுப் பகை' 'இருப்பு மனம்' என அல்வழியில் மென் றொடர் வன்றொடராதலும், 'பாம்புத் தோல்' பாப்புத் தோல்' எனவும் 'அன்புத் தளை' 'அற்புத் தளை' எனவும் வேற்றுமை வழியிலும், அல்வழியிலும் விகற்பித்து வருதலுங் கொள்க.

**39. மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையில்**
**தம்மின வன்றொடர் ஆகாரமன்னே. (நன். சூ. 184)**

**இயல்பு புணர்ச்சியும், விகாரப் புணர்ச்சியும்**

## *1. இயல்பும் மிகலும் திரிதலும்*

எல்லா ஈற்றின் முன்னும் மெல்லினமும் இடையினமும்.

59. இருபத்து நான்கு எழுத்துகளையும் இறுதியாகவுடைய எல்லா வகைச் சொற்களுக்கும் முன்னே வருமொழி முதலில் வரும் ஞ, ந, ம என் னும் மெல்லின மெ-களும் ய, வ, என்னும் இடையினமெ-களும் இயல்பாம்.

### *அல்வழி*

| | | |
|---|---|---|
| உ-ம். | இள + ஞாயிறு = இளஞாயிறு.<br>பனை + நெடிது = பனைநெடிது.<br>பொன் + மாண்டது = பொன் மாண்டது.<br>பேர் + யாது = பேர் யாது.<br>எஃகு + வலிது = எஃது வலிது. | ஞ ந ம ய வ இயல்பாயின. |

## வேற்றுமை வழி

வலி + ஞமலி = வலி ஞமலி
பூ + நிறம் = பூ நிறம்
மண் + மனை = மண் மனை
கல் + யானை = கல் யானை
வாள் + வன்மை = வாள் வன்மை
} ஞ ந ம ய வ இயல்பாயின.

60. தனிக்குறி லடுத்துவரும் யகர மெ-க்கும், ஓரெழுத்தொரு மொழியாகிய ஐகாரத்திற்கும், நொ, து என்னும் ஏவல் வினைகட்கும் முன் வரும் மெல்லினம் மிகும்.

நொ - வருந்து. து - உண்.
மெ- + ஞான்றது = மெ-ஞ்ஞான்றது
+ நீண்டது = மெ-ந்நீண்டது
மெ- + மாண்டது = மெ-ம்மாண்டது
கை + ஞான்றது = கைஞ்ஞான்றது
கை + நீண்டது = கைந்நீண்டது
கை + மாண்டது = கைம்மாண்டாது.
} குறில்வழி ய, மெ- தனி ஐ முன் அல்வழியில் மெலி மிக்கன.

மெ- + ஞாற்சி = மெ-ஞ்ஞாற்சி
மெ- + நீட்சி = மெ-ந்நீட்சி
மெ- + மாட்சி = மெ-ம்மாட்சி
கை + ஞாற்சி = கைஞ்ஞாற்சி
கை + நீட்சி = கைந்நீட்சி
கை + மாட்சி = கைம்மாட்சி
} குறில்வழி ய, தனி ஐ முன் வேற்றுமை வழியில் மெலி வந்தன.

நொ + நாகா = நொந்நாகா
து + மாடா = தும்மாடா
} அல்வழியில் நொ, து முன் மெலி மிக்கன.

61. நிலைமொழி இறுதியிலுள்ள ண ள ன ல என்னும் மெ- களுக்குப் பின் வரும் நகரம் திரியும்.

உ-ம்.
மண் + நீண்டது = மண்ணீண்டது
முள் + நீண்டது = முண்ணீண்டது
பொன் + நீண்டது = பொன்னீண்டது
கல் + நீண்டது = கன்னீண்டது
} ண ள ன ல வழி அல்வழியில் நகரம் திரிந்தது.

| | | |
|---|---|---|
| மண் + நீட்சி = மண்ணீட்சி<br>முள் + நீட்சி = முண்ணீட்சி<br>பொன் + நீட்சி = பொன்னீட்சி<br>கல் + நீட்சி = கன்னீட்சி | } | ண ள ன ல வழி<br>வேற்றுமை வழியில்<br>நகரம் திரிந்தது. |

**40.** **எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்**
**முன்வரு ஞநமய வக்கள் இயல்பும்,**
**குறில்வழி யத்தனி ஐந்நொது முன்மெலி**
**மிகலும்ஆம், ணளனல வழிநத் திரியும். (நன். சூ. 158)**

## *2. இயல்பும், மிகலும்*

### i. *முன்னிலைவினை முன்னும், ஏவல்வினை முன்னும் வல்லினம்*

62. உயிரையும், ய ர ழ என்னும் மெ-களையும் இறுதியாகவுடைய முன்னிலை வினைமுற்றுகட்கும், ஏவல் வினைமுற்றுகட்கும் முன் வரும் வல்லினம் இயல்பாகியும், விகற்பித்தும் வரும்.

முன்னிலைவினை முன்னிலைக் கருத்தாவின் வினையா- மூன்று காலத்திலும் வரும். ஏவல்வினை முன்னிலைக் கருத்தாவை ஏவுவதா- எதிர் காலத்தில் மட்டும் வரும்.

விகற்பித்தல் ஒரே புணர்ச்சி இயல்பாகவும் மிக்கும் வருவது.

உ-ம். வந்தனை + சாத்தா = வந்தனை சாத்தா.
வந்தா- + கொற்றா = வந்தா- கொற்றா.
வந்தீர் + பையன்காள் = வந்தீர் பையன்காள்.

முன்னிலை வினையீற்று உயிர் முன்னும், ய ர முன்னும் வலி இயல் பாயின.

வா + கொற்றா = வா கொற்றா
பா- + சாத்தா = பா- சாத்தா
சேர் + கந்தா = சேர் கந்தா.
வாழ் + பையா = வாழ் பையா.

ஏவல் வினையீற்று உயிர் முன்னும், ய ர ழ முன்னும் வலி இயல்பாயின.

நட + கொற்றா = கொற்றா, நடக்கொற்றா.
எ- + கொற்றா = எ-கொற்றா, எ-க்கொற்றா.

ஏவல்முன் வலி விகற்பித்தன.

இவையெல்லாம் வினைமுற்றுத் தொடராதலின் அவ்வழிப்பு ணர்ச்சி.

**41. ஆவி யாழ இறுதிமுன் னிலைவினை**
**ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே. (நன். சூ. 161)**

## ii. இ, ஐ இவற்றின் முன்வலி

63. அல்வழிப் புணர்ச்சியில் நிலைமொழியீற்று இகர ஐகராங்கட்கு முன்வரும் வல்லினம் இயல்பாயும், மிக்கும், விகற்பித்தும் வரும்.

உ-ம். புலி + கொடிது = புலிகொடிது
யானை + பெரிது = யானைபெரிது } எழுவா-த் தொடரில் வலி இயல்பாயின.

செடி + கொடி = செடிகொடி
யானை + குதிரை = யானை குதிரை } உம்மைத் தொகையில் வலி இயல்பாயின.

இடி + கரை = இடிகரை
திரை + கடல் = திரைகடல் } வினைத்தொகையில் வலி இயல்பாயின.

ஆடி + திங்கள் = ஆடித் திங்கள்
சாரை + பாம்பு = சாரைப்பாம்பு } பண்புத் தொகையில் வலிமிக்கன.

பனை + கை = பனைக்கை – உவமைத் தொகையில் வலிமிக்கது.
ஓடி + போனான் = ஓடிப் போனான் – வினையெச்சத் தொடரில் வலி மிக்கது.

கிளி + குறிது = கிளி குறிது, கிளிக் குறிது
தினை + சிறிது = தினை சிறிது, தினைச் சிறிது } எழுவா-த் தொடரில் வலி விகற்பித்தன.

கடி + கமலம் = கடிகமலம், கடிக்கமலம் – உரிச்சொற்றொடரில் வலி விகற்பித்தது.

**42. அல்வழி இஐம் முன்ன ராயின்**
**இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும். (நன். சூ. 176)**

# *3. திரிதலும் இயல்பும்*

## வகர வீற்றுச் சுட்டுப் பெயர் முன் மூவினம்

64. அவ், இவ், உவ் என்னும் அஃறிணைப் பலவின்பாற் சுட்டுப் பெயர்களின் இறுதியிலுள்ள வகர மெ-, வல்லினம் மெல்லினம் இடை

யினமாகிய மூவினங்களும் வருமொழி முதலில் வர, முறையே ஆ-தமும் மெல்லினமும் இயல்பும் ஆகும். இஃது அல்வழிப் புணர்ச்சி.

உ-ம். அவ் + கடிய = அஃகடிய - வலிவர ஆ-தமாயிற்று.
அவ் + ஞான்றன = அஞ்ஞான்றன - மெலிவர மெலிவாயிற்று.
அவ் + யாவை = அவ்யாவை - இடைவர இயல்பாயிற்று.
இங்ஙனமே இவ், உவ் என்பவற்றோடும் ஒட்டுக.

**43. சுட்டு வகரமூ வினம்உற முறையே**
**ஆ–தமும் மென்மையும் இயல்பும் ஆகும். (நன். சூ. 235)**

65. வகர மெ-யீற்றுச் சுட்டுப் பெயர்கள் வேற்றுமை யுருபேற்கும் போது ‘அற்று’ ச் சாரியை பெறும்.

உ-ம், அவ் + ஐ = அவற்றை.
இவ் + ஐ = இவற்றை.
உவ் + ஐ = உவற்றை.

இனி ‘அற்று’ச் சாரியையோடு ‘இன்’ சாரியை பெறுதலுமுண்டு.

உ-ம். அவற்றினை, இவற்றினை.

**44. வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே. (நன். சூ. 250)**

## *4. திரிதலும் இயல்பும் மிகுதலும் கெடுதலும்*

## *இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி*

66. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி இயல்பாக வேண்டியவிடத்து விகாரப்பட்டும், விகாரப்பட வேண்டிய விடத்து இயல்பாகியும், உயர்திணைப் பெயரினிடத்து உருபு விரிந்தும் தொக்கும், இன்னும் இவை போன்றே வேறு சில விகாரங்களை யடைந்தும் வரும்.

உ-ம். நின் + புறங்காப்ப = நிற்புறங்காப்ப ‘நின்னீ றியல்பாம்’ என்ற விதிப்படி இயல்பாக வேண்டியவிடத்து விகாரப்பட்டது.

மண் + சுமந்தான் = மண் சுமந்தான்.
பொன் + கொடுத்தான் = பொன் கொடுத்தான்.
‘ணனவல் லினம்வரட் டறவும்’ என்ற விதிப்படி விகாரப்பட வேண்டியவிடத்து இயல்பாயிற்று.

நம்பியைத் தொழுதான் - உயர்திணையிடத்து உருபு விரிந்தது.

மகன் + பெற்றான் = மகற்பெற்றான் - உயர்திணையிடத்து உருபு தொக்கது.

'பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்க வீற்றுமெ-' என்னும் சூத்திர விதிப்படி இயல்பாக வேண்டியவிடத்து உருபு விகாரப் பட்டது கொற்றனைக் கண்டான் - விரவுப் பெயரிடத்து உருபு விரிந்தது.

ஆண் பெற்றான் - விரவுப் பெயரிடத்து உருபு தொக்கது.
தன் + கொண்டான் = தற்கொண்டான் - விகற்பித்து வரவேண்டிய விடத்துத் திரிந்தே வந்தது.

இப் புணர்ச்சிகளெல்லாம் விதிக்குமாறானவை யாதலின், சிறுபான்மை யெனக் கொள்க.

**45. இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்**
**உயர்திணை யிடத்து விரிந்தும் தொக்கும்**
**விரவுப் பெயரின் விரிந்தும் நின்றும்**
**அன்ன பிறவும் ஆகும் ஐ உருபே. (நன். சூ. 255)**

# *யாப்பியல்*

## *உறுப்பிலக்கணம்*

67. ***தொடை*** செ-யுளின் அடிகளிலும் சீர்களிலும் எழுத்தும் சொல் லும் பொருளும் அழகாகத் தொடுக்கப்படுவது தொடையாகும். அது **மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை** என ஐவகைப்படும். அவற்றுள் மோனையும் எதுகையும் மிகச் சிறந்தனவாகும்.

68. ***மோனை:*** மோனை என்பது செ-யுளின் பல அடிகளிலுள்ள முதற் சீர்களிலாவது, ஓர் அடியிலுள்ள பல சீர்களிலாவது முதலெழுத்து ஒன்றிவருதல். அஃது ஓர் எழுத்துத் தானே ஒன்றிவருதலும், அதன் கிளையெழுத்து ஒன்றி வருதலும் என இருவகை.

முகம் - முகன் - முகனை - மோனை. சீரின் முகத்தில் (முதலில்) நிற் கும் எழுத்து மோனை யெனப்பட்டது.

## *கிளையெழுத்து*

| | |
|---|---|
| 1. அ, ஆ, ஐ, ஔ | 4. ஞ, ந |
| 2. இ, ஈ, எ, ஏ, ய | 5. ம, வ |
| 3. உ, ஊ, ஒ, ஓ | 6. த, ச |

மோனை ஓர் அடியிலுள்ள பல சீர்களில் வரின், சீர்மோனை என் றும், பல அடிகளின் முதற் சீர்களில் வரின் அடிமோனை என்றும், ஓர் அடி யிலுள்ள எல்லாச் சீர்களிலும் வரின் முற்றுமோனை என்றுங் கூறப்படும்.

## *சீர்மோனை*

**உ–ம்.** **தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்ற லரிது.**

இதில் முதலடியில் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் த, தா என்னும் முத லெழுத்துகள் மோனை; இரண்டாமடியில் முதற் சீரிலும், இரண்டாம் சீரி லும் ம,மா என்னும் முதலெத்துகள் மோனை. இங்ஙனம் ஓரடியிற் பல சீர் களில் வருவது சீர்மோனை.

## *அடிமோனை*

**‘அணிமலர் அசோகின் தளிர்நலங் கவற்றி**
**அரிகுரற் கிண்கிணி அரற்றுஞ் சீரடி.’**

இதில் முதலடி முதற்சீரிலும், இரண்டாமடி முதற்சீரிலும் அகரத்திற்கு அகரம் மோனையாயிற்று, இங்ஙனம் பல அடிகளில் முதலில் வருவது அடி மோனை.

## *முற்றுமோனை*

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங்**
**கண்ணென்ப வாழு முயிர்க்கு.**

இதில் முதலடியில் நான்கு சீர்களிலும் மோனை வந்ததால் முற்று மோனை.

## *எதுகை*

69. எதுகையாவது பல சீர்களில் முதலெழுத்து அளவொத்து இரண் டாமெழுத்து ஒன்றி வருவது. அஃது ஓரடியிற் பல சீர்களில் வரின் சீர்எதுகை என்றும், பல அடிகளின் முதற் சீர்களில் வரின் அடிஎதுகை யென்றும், ஓரடி யிலுள்ள எல்லாச் சீர்களிலும் வரின் முற்றெதுகை யென்றுங் கூறப்படும்.

## *சீரெதுகை*

**உ–ம்.** **யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.**

இதில் முதலடியில் முதற்சீரும், மூன்றாஞ்சீரும் எதுகையா– வந்தன.

## *அடியெதுகை*

**அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்**
**கென்புதோல் போர்த்த வுடம்பு.**

இதில் முதலடி முதற்சீரும், இரண்டாமடி முதற்சீரும் எதுகையா- வந்தன.

## *முற்றெதுகை*

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉ மழை.**

இதில் முதலடியில் எல்லாச் சீர்களும் எதுகையா- வந்தன.

## *தளை*

70. இரு சீர்கள் ஒன்றாகப் புணரும்போது இடையில் உண்டாகும் இசைப்பிணிப்புத் தளை எனப்படும்.

தட்பது தளை; தட்டல் - பிணித்தல், கட்டுதல்.

புணருகின்ற இரு சீர்களில் நிலையைப்பற்றியே தளை கவனிக் கப்படும்.

71. தளை **வெண்டளை, ஆசிரியத்தளை, கலித்தளை, வஞ்சித்தளை** என நால்வகைப்படும். அவற்றுள் வெண்டளை (வெண்பாவிற்குரிய தளை) இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை என இருவகைப்படும்.

72. இயற்சீர் வெண்டளையாவது ஈரசைச் சீர்களாகிய இயற்சீர்கள் தம்மோடும். பிறவோடும் புணரும்போது, நிலைச்சீரின் ஈற்றசையும் வருஞ் சீரின் முதலசையும், நேருக்கு நிரையும் நிரைக்கு நேருமாக மாறுபட்டு நிற்பது. இது 'மா முன் நிரை,' 'விள முன் நேர்' என்னும் வா-பாடுகளாற் கூறப்படும்.

உ-ம். 'அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்'

இதில் 'அறம்பொருள்' கருவிளம் என்னும் வா-பாட்டு இயற்சீர்; அது நிரையசையில் முடிந்தது. அடுத்த சீர் 'னின்' என நேரசையில் தொடங் கிற்று. 'இன்பமும்' கூவிளம் என்னும் வா-பாடு இயற்சீர்; அது நிரையசை யில் முடிந்தது. அடுத்த சீர் 'வீ ' என நேரசையில் தொடங்கிற்று. 'வீடும் ' தேமா என்னும் வா-பாட்டு இயற்சீர்; அது நேரசையில் முடிந்தது. அடுத்த சீர் 'பயக்' என்னும் நிரையசையில் தொடங்கிற்று. இங்ஙனம் மா முன் நிரையும், விள முன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளை.

73. வெண்சீர் வெண்டளையாவது மூவசைச் சீர்களாகிய வெண்பா உரிச்சீர்களின்பின், வருஞ் சீரின் முதலசை நேரசையாக நிற்பது. இது நேருக்கு நேராகும். ஆதலின் 'கா- முன் நேர்' என்னும் வா-பட்டால் கூறப்படும்.

உ-ம். 'தனக்குவமை யில்லாதான்' - இதில் முதல் சீரின் ஈற்றசையும், வருஞ்சீரின் முதலசையும் நேருக்கு நேராயினமை காண்க.

# செ—யுளிலக்கணம்

*பா*

## *க. வெண்பா*

74. அசைச்சீராலும், இயற்சீராலும், வெண்சீராலும், இருவகை வெண் டளையும் தட்டு, ஈரடி முதல் பன்னீரடி வரையும், ஈற்றடி சிந்தடியா- ஏனை யடிகள் அளவடியா- வருவது வெண்பாவாகும்.

ஈரடியால் வரும் வெண்பா **குறள் வெண்பா** வென்றும், மூவடியால் வரும் வெண்பா **சிந்தியல் வெண்பா** வென்றும், நாலடியால் வரும் வெண்பா **அளவியல் வெண்பா** வென்றும், ஐந்தடி முதற் பன்னிரண்டடி வரை வரு வது **பஃறொடை வெண்பா** வென்றுங் கூறப்படும்.

அளவியல் வெண்பா **நேரிசை வெண்பா** வென்றும் **இன்னிசை வெண்பா** வென்றும் இருவகைப்படும். மோனை எதுகை நிரம்பின் நேரிசை வெண்பாவும், நிரம்பாவிடின் இன்னிசை வெண்பாவும் ஆகும்.

வெண்பாவின் ஈற்றுச்சீர் அசைச்சீராகவும் இயற்சீராகவு மிருக்கும். மூவசைச் சீர் வெண்பாவின் ஈற்றில் வராது. அசைச்சீர் வெண்பாவில் ஈற் றில் மட்டும் வரும். வெண்பாவின் ஈற்றுச்சீர் இயற்சீராயின் 'காசு' 'பிறப்பு' என்னும் வா-பாடுகளி லொன்றா-க் குற்றியலுகர வீறாயிருத்தல் வேண் டும். முற்றிய லுகர வீறாயினும் குற்றமின்று.

வெண்பா, பிற பாக்களுக்குரிய சீரும் தளையும் அடியும் விரவாது தூ -மையாயிருக்கும் பா. வெண்மை, தூ-மையை உணர்த்தும். பா - பாட்டு.

### *1. குறள் வெண்பா*

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.**

குறள் - குட்டை. வெண்பாக்களிற் குறுகியது குறள் எனப்பட்டது. இதற் குக் குறுவெண்பாட்டு என்று பெயர்.

## 2. சிந்தியல் வெண்பா

சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.
சிந்து - சிறிது, குட்டை.

## 3. நேரிசை வெண்பா

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும் - நல்லா-
மணலின் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும்.

இதில், முதலடி முதற்சீரும், இரண்டாமடி முதற் சீரும், இரண்டாமடி இறுதிச் சீரும் ஒரெதுகையா- வந்தன. மூன்றாமடி முதற்சீரும், நான்காமடி முதற்சீரும் மற்றோரெதுகையா- வந்தன. இங்ஙனம் நேரிசை வெண்பா வில் எதுகைக்குரிய சீர் மொத்தம் ஐந்தாகும். இவ் வைந்தும் ஒரே எதுகை யா-வரின் மிகச் சிறப்பாகும், எதுகைக்கு விகற்பம் என்றும் பெயர். இரண் டாம் அடி யீற்றுச்சீர் தனியா-வரின் தனிச் சீர் எனப்படும். மோனை, எதுகை என்னும் இரண்டனுள் எதுகையே நேரிசை வெண்பாவிற்கு இன்றியமையாத தாகும்.

## 4. இன்னிசை வெண்பா

இசைவ கொடுப்பதூஉ மில்லென்ப தூஉம்
வசையன்று வையத் தியற்கை யஃதன்றிப்
பசைகொண் டவனிற்கப் பாத்துண்ணா னாயின்
நசைகொன்றான் செல்லுலக மில்.

இதில் இரண்டாமடி ஈற்றுச் சீர் எதுகையா- வராமையின், எதுகை குறைந்து இன்னிசையாயிற்று.

## 5. பஃறொடை வெண்பா

வையக மெல்லாங் கழனியா - வையகத்துச்
செ-யகமே நாற்றிசையின் தேயங்கள் - செ-யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு - வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் - சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் - கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்.

இஃது ஏழடிப் பஃறொடை வெண்பா. பல தொடைகளால் வருவது பஃறொடை வெண்பா. ஈரடி ஒன்றாகத் தொடுக்கப்படுவது தொடையாகும்.

## *பாவினம்*

### உ. கட்டளைக் கலித்துறை

75. ஒவ்வோர் பாவிற்கும் **துறை, தாழிசை, விருத்தம்** என மும்மூன் றினச் செ-யுள்கள் உள. அவற்றுள் கலிப்பாவிற்குரிய துறை கலித்துறை யெனப் படும். அது நெடிலடி நான்கா- வரும்.

76. கலித்துறை கட்டளை பெற்றுவரின் கட்டளைக் கலித்துறை யெனப்படும்.

கட்டளை - நியதி, வரையறை.

77. நெடிலடி நான்கு வந்து, அடிதோறும் முதல் நான்கு சீரும் வெண் டளை தட்டுக் கடைச்சீர் கருவிளங்கா-, கூவிளங்கா- என்னும் சீர்களில் ஒன்றாகி. ஒவ்வோர் அடியிலும் நேரசை முதலாயின் பதினாறெழுத்தும் நிரையசை முதலாயின் பதினேழெழுத்தும் இருப்பின் கட்டளைக் கலித் துறையாம்.

எழுத்தெண்ணும்போது ஆ-தமும், மெ-யும் நீக்கி யெண்ணப்படும்.

உ-ம். நேர்முதல்

வாதுற்ற திண்புய ரண்ணா மலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப் போதும் புகலுநெஞ் சேயிந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென் தேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே.

நிரைமுதல்
பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவதில்லை இடைநடுவில்
குறிக்குமிச் செல்வம் சிவன்தந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி ஏகம்பனே.

இவற்றிற் கட்டளைக் கலித்துறைக்குரிய தளையும் சீரும் எழுத் தெண்ணிக்கையுங் கண்டுகொள்க. இரண்டாஞ் செ-யுளின் ஈற்றுச் சீர் மகர மெ- நீக்கிக் கூவிளங்காயாகக் கொள்ளப்படும்.

## *அணியியல்*

## வேற்றுமையணி

78. வேற்றுமை யணியாவது உபமான உபமேயங்கட்கு ஒருவகை யில் ஒற்றுமை கூறி மற்றோர் வகையில் வேற்றுமை கூறுவது. இதை வட மொழியில் 'வியதிரே காலங்காரம்' என்பர்.

**உ–ம். தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு.**

இதில் தீயினாற் சுட்டபுண் உபமானம்; நாவினாற் சுட்ட வடு உப மேயம். இரண்டும் புண்ணளவில் ஒன்றேயாயினும் தீயினாற் சுட்டது ஆறு மென்றும் நாவினாற் சுட்டது ஆறாதென்றும் வேறுபடக் கூறியவாறு காண்க.

## வேற்றுப்பொருள் வைப்பணி

79. வேற்றுப்பொருள் வைப்பணியாவது ஒரு பாட்டிலுள்ள முக்கியப் பொருளை வற்புறுத்துதற்கு, அதற்கினமான வேறொரு பொருள் ஈற்றில் வைக் கப்படுவது. இதை வடமொழியில் 'அர்த்தாந்தர நியாச அலங்காரம்' என்பர்.

உ-ம். நாடாளு தற்கு வசிட்டனிடு நன்னயநாள்
காடாளு நாளாகக் காட்டியே - வீடாளுந்
தொல்லாழி யான்றனையுந் தூக்காது வென்றதென்றால்
வெல்லாத தாரை விதி.

இதில் இராமபிரானுக்கு நாடாளக் குறித்த நாள் காடாளுதற் காயிற்று என ஒரு முக்கியப் பொருள் கூறி, பின்பு அதனை வற்புறுத்த 'வெல்லாத தாரை விதி' என வேறொரு பொருளை ஈற்றில் வைத்தமை காண்க.

## ஒழித்துக் காட்டணி

80. ஒழித்துக் காட்டணியாவது ஒரு பொருளைக் கூற வேண்டி யவிடத்து அதனை ஒழித்து அது தோன்றுமாறு அதற்கு மறுதலையான பொருளைக் கூறுவது. இதை வடமொழியில் 'பரிசங்கியாலங்காரம்' என்பர்.

உ-ம். வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வா-விட் டரற்றுவன - கஞ்சம்
கலங்குவன மாளிகைமேல் காரிகையார் கண்ணே
விலங்குவன மெ-ந்நெறியை விட்டு.

இது நிடத நாட்டுத் தலைநகரான மாவிந்த நகர்ச் சிறப்பைக் கூறுவது. அங்கு மக்கள் நீதி தவறுதலும், மனம் சோர்தலும், புலம்புதலும், கலங்குத

லும், நெறி விலகுதலும் இல்லையெனக் கூறவேண்டிய விடத்து, அதை நீக்கி அதற்கு மறுதலையாகச் சிலையே கோடுவன என்றும், குழலே சோருவன என்றும், சிலம்பே அரற்றுவன என்றும், கஞ்சமே கலங்குவன என்றும், காரிகை யார் கண்ணே விலங்குவன என்றும் கூறியிருத்தல் காண்க.

## *வஞ்சப்புகழ்ச்சியணி*

81. வஞ்சப் புகழ்ச்சியணியாவது வஞ்சகமாக ஒருவரைப் புகழ்தல். அது பழிப்பதுபோற் புகழ்தலும், புகழ்வதுபோற் பழித்தலுமாக இருவகைப் படும். இதை வடமொழியில் 'வியாஜஸ்துதி அலங்காரம்' என்பர்.

உ-ம். பழிப்பதுபோற் புகழ்தல்:

இல்லெனுஞ்சொல் லறியாத சீகையில்வாழ் தானனைப்போ-
யாழ்ப்பாணன்யான்
பல்லைவிரித் திரந்தக்கால் வெண்சோறும் பழந்தூசும் பாலியாமல்
கொல்லநினைந் தேதனது நால்வாயைப் பரிசென்று கொடுத்தான் பார்க்குள்
தொல்லையென தொருவா-க்கும் நால்வா-க்கும் இரையெங்கே
துரப்புவேனே.

இஃது அந்தகக் கவி வீரராகவ முதலியார் தமக்கு யானையைப் பரி சிலாகத் தந்த தானன் என்னும் வள்ளலைப் பாடிய நிந்தாஸ்துதி. இதில் ஒரு வா-க்கு உணவு கிடையாத தம்மைக் கொல்ல நினைந்து கூட நால்வாயைக் கொடுத்தானென்று பழிப்பது போல அவன் யானைக் கொடையைப் புகழ்ந்திருத்தல் காண்க.

நால்வா- - யானை; தொங்குகின்ற வாயை யுடையது.
புகழ்வதுபோற் பழித்தல்:

தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செ-தொழுக லான்.

இதில் கீழ்மக்களைத் தேவருக்கொப்பாகப் புகழ்வதுபோலப் பழித் திருத்தல் காண்க. இது ஸ்துதி நிந்தை யெனப்படும்.

## *காட்சியணி*

82. ஓர் இயற்கையான பொருள் அல்லது நிகழ்ச்சி உலகத்திலுள்ள ஓர் உண்மையை அல்லது நீதியைத் தெரிவிப்பதாகக் கூறுவது காட்சியணி. இதை வடமொழியில் 'நிதர்சன அலங்காரம்' என்பர்.

உ-ம். பிறர்செல்வங் கண்டால் பெரியோர் மகிழ்வும்
சிறியோர் பொறாத திறமும் - அறிவுறீஇச்
செங்கமல மெ-ம்மலர்ந்த தேங்குமுத மெ-பசந்த
பொங்கொளியோன் வீறெ-தும் போது.

இதில் சூரியோதயத்தில் தாமரை மலர்தலும், குமுதம் குவிதலும், பிறர் செல்வத்தைக் கண்டு பெரியோர் மகிழ்தலையும், சிறியோர், பொறாமைப் படுதலையுங் குறிக்குமெனக் கூறியிருத்தலைக் காண்க.

## ஒட்டணி

83. ஒட்டணியாவது உபமானத்தைமட்டுங் கூறி அதன் உபமேயத்தைப் புலப்படுத்தல். இதற்குப் பிறிது மொழிதல் என்றும் பெயர். இதை வடமொழியில் ரஸ்துத பிரசம சாலங்காரம் என்பர்.

**உ-ம். நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற.**

இவ் வுபமாணத்தால் அவரவர்க்குத் தத்தம் சொந்த இடத்து ஆற்றல் அதிகம் என்னும் உபமேயம் புலப்படுதல் காண்க.

உபமேயம் உபமானத்தை யொட்டியறிதலின் ஒட்டணி யெனப்பட்டது.

## உயர்வுநவிற்சியணி

84. ஒரு பொருளை உள்ளவாறு கூறாது மிக உயர்திக் கூறுவது உயர்வு நவிற்சி யணியாம். இதை வடமொழியில் ‘அதிசயோக்தி அலங்காரம்’ என்பர்.

**உ-ம். குமுத னிட்ட குலவரைக் கூத்தரில்**
**திமித மிட்டுத் திரியும் திரைகடல்**
**துமித மூர்புக வானவர் துள்ளினார்**
**அமுது மின்னும் எழுகெனும் ஆசையால்.**

இஃது இராமர் ஏவலால் குமுதன் என்னும் குரங்குத் தலைவன் கடலுக்கு அணைகட்டினதின் வருணனை.

குமுதன் பெரிய குலகிரிகளை எடுத்துக் கடலின் இடக் கடல் கொந்தளித்து அதன் நீர் தேவலோகத்திற்சென்று தெறிக்க தேவரெல்லாம் மறுபடியும் திருப்பாற்கடல் கடையப்படுகிறதென்றும் முன்போல அமிர்தம் கிடைக்குமென்றும் துள்ளினாரென்று உயர்த்துக் கூறப்பட்டிருத்தல் காண்க.